விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 06 புதன்கிழமை (22.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 215




# வெள்ளைவான், துப்பாக்கியுடன் மூன்று இராணுவத்தினர் கைது

## தேர்தல் நெருங்கும் வேளை அச்சமூட்டும் சம்பவம்


கோப்புப் படம்

(கொழும்பு)

தேர்தல் கால பிரசாரப் பணிகள் நாட்டில் ஆரம்பித்துள்ள நிலையில், சிவில் உடையில் போலி இலக்கத் தகடு பொருத்தப்பட்ட வெள்ளைவான் ஒன்றில் துப்பாக்கியுடன் பயணித்த மூன்று இராணுவத்தினர் நேற்று முன்தினமிரவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். மீரிஹான பகுதியில் வைத்தே நேற்று முன்தினமிரவு 7.30 மணியளவில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (23ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் விதிமீறல்களாக 372 சம்பவங்கள் பதிவு-கபே



(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் ஆரம்பித்தது முதல் இதுவரை 362 விதிமீறல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே அமைப்பு

24 ஆம் பக்கம் பார்க்க

## ஜனநாயகம் குறித்து போதிக்க வரவில்லை

### ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழு

(கொழும்பு)

தாம் இலங்கை வந்திருப்பது, தேர்தலைக் கண்காணிக்கவே தவிர, ஜனநாயகம் பற்றி போதிப்பதற்காக அல்ல என்று நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிக்க வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழுவின் தலைவர் கிறிஸ்டியன் பிரேடா தெரிவித்துள்ளார்.

நேற்று கண்காணிப்பு பணியைத் தொடங்கியுள்ள

24 ஆம் பக்கம் பார்க்க













நடுவுநிலை தவறா[…]க்கும் உங்கள் நாளிதழ்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பூநகரி சரவணப் பொய்கையுள் புகுந்து கனடா MARKHAM இல் வாழ்ந்து

மரணமடைந்த

அமரர் **தம்பு நடராசா** (வர்த்தகர்)



சித்தன்குறிச்சி,
பூநகரி.

சிவன் நாமம் பூண்ட நடராசா
சிவ சிவ என்பார் எக்கணப் பொழுதும் – அவர்
நம் நாட்டுச் சூழல் தொலைந்து விட்டதே
அறிவும் அழகும் நிறை மெதுரை –ஊர்
மனித ஜென்மமுமின்றி – னை
அழுது தொழுதழுவர் வாடியடி முனியப்பரை அன்பர்
அழிந்தொழிந்த பூநகரி மகா வித்தியாலயத்தை
வளம்படுத்திய நலன்விரும்பி. பூநகரி புகழ் பாடி
இறுவெட்டு வெளியிட்ட –ஞானம்
வாரிசை தந்து செல்லும் அன்பரின் ஆத்மசாந்திக்கும்
உறவினர் மனவாறுதலுக்கும் – சிவபாலபிட்டி
பிள்ளையாரினை இறைஞ்சுகின்றேன்.
ஓம் சாந்தி!

முன்னாளில் யாழ்.இந்து பிரதி அதிபரும்,
பூநகரி பிரதேச சபைத் தலைவரும்,
ஆலோசகர் ம.வி - பூநகரி
பழைய மாணவர் சங்கம்.

(சி–1644)

# மரண அறிவித்தல்



ஆயுர்வேத வைத்திய கலாநிதி

## பேரம்பலம் பத்மநாதன்

(ஏழாலை மேற்கு கருணாகரப்பிள்ளையார் மடாலய அறங்காவலர் – ஐ.பேரம்பலம் அன் சன் உரிமையாளர் – சுன்னாகம்)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி பேரம்பலம் - பத்மநாதன் நேற்று (21.07.2015) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சித்த வைத்தியர் ஐ.பேரம்பலம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருஞானசெல்வம் - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நளினியின் பாசமிகு கணவரும், குமரகுருபரன் (அபிவிருத்தி உதவியாளர், போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்), கோகுலரமணன் (பிரான்ஸ்), செல்வபாரதி (கனடா), பவதாரணி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், பிரதீபா, மதிவண்ணன் (கனடா), பிரசன்னா (கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மஹஸ்மிதை, அஜாத்மிகன், அப்ஷரன், சாயிகிருத்திகா, ஆதீஸ், பிரீத்திகை ஆகியோரின் அன்புமிகு பேரனாரும், அமரர் பேராசிரியர் கனகசபாபதி, அமரர் சிவலிங்கம், வாமதேவன், பாலசுப்பிரமணியம், மகாதேவன், புனிதவதி, ராஜராஜேஸ்வரி, சாரதாதேவி, அமரர் மாலினி ஆகியோரின் சகோதரரும், அமரர் மீனாம்பிகை, அமரர் பார்வதவர்தினி, அமரர் சிவக்கொழுந்து, பத்மாசனி, அமரர் சீனா, அமரர் முருகவேள், அமரர் தெய்வேந்திரன், இளமுருகதாஸ், கவீந்திரதாஸ், ஆனந்தநடேசன் ஆகியோரின் மைத்துனரும் மற்றும் பாஸ்கரனின் உடன் பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.07.2015) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம். (1208)

தகவல் :
குடும்பத்தினர்

# European Language Training Centre

வெளிநாடு செல்வோருக்கான ஜேர்மன், பிரெஞ் ஆகிய மொழிகளும் கற்பிக்கப்படும்.
ஐரோப்பிய யூனியனின் அங்கீகாரம் பெற்ற ஒரேயொரு கல்வி நிறுவனம்.

**கற்பிக்கப்படும் மொழிகள்:-**

**French** – (பிரான்ஸ், கனடா, சுவிஸ் செல்வோருக்கான பரீட்சை. (DELF) Ai அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ். DELF - (Diploma d'etudes enlangue francaise)

**German** – ஜேர்மனி, சுவிஸ் செல்வோருக்கான Goethe Zertifikat Ai, d German Swiss Deutsh Ai) அவசியமான பரீட்சை

**English** – (Speaking, Ai, IELTS) தரம் 1 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கும்

**Sinhala** – அரச உத்தியோகத்தர்கள் மற்றும் புலமைப்பரீட்சை மாணவர்களுக்கான வகுப்புக்களும் ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அனுமதிக்கு முந்துங்கள்.

**கிளிநொச்சி**
T.P:- 021 228 3690
021 320 4822
075 077 3160
076 830 4043
இல.07, பழைய கச்சேரி அருகாமை
கிளிநொச்சி.

**வவுனியா**
T.P:- 024 561 6556
072 613 4725
சிவன் கோவிலடி,
கோயில்குளம்,
வவுனியா.

Email:-europeanlanguage2015@gmail.com
(C-1643)
அனுமதிக்கு முந்துங்கள்...

## உடனடி வேலைவாய்ப்பு (2016) Batch

சர்வதேச ரீதியில் இயங்கும் நிறுவனத்திற்கு அதன் வட மாகாண யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா பிரிவுகளுக்கு O/L, A/L சித்தியடைந்த 18-30 வயதிற்குட்பட்டவர்களுக்கான முகாமைத்துவ பயிற்சி வழங்கப்படும்.

- அனுபவம் அவசியமில்லை
- பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
- பயிற்சியின் பின்னர் தொழில் நிரந்தரமாக்கப்படுவதுடன் மாதாந்தம் 40,000/- ற்கு மேல் சம்பளம் பெறலாம்.
- பயிற்சியின் போது கொடுப்பனவு வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:-0779994807, 0774458134**

(1206)

## ஜே.வி.பி மீது மகிந்த அதிருப்தி

(கொழும்பு)

ஜே.வி.பி கட்சி வாக்காளர்களை பிழையாக வழிநடத்தி வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ சிவில் உரிமைகளை இழக்கக் கூடும் எனவும் இதனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு வாக்களிப்பதில் பயனில்லை என ஜே.வி.பி பிரசாரம் செய்து வருகின்றது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என மகிந்த ராஜபக்ஷவின் ஊடக இணைப்புச் செயலாளர் ரொஹான் வெலிவிட்ட தெரிவித்துள்ளார். ஜே.வி.பி கட்சியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க உள்ளிட்டவர்கள் மக்களை பிழையாக வழிநடத்தக் கூடிய வகையிலான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பணம் வழங்கியதாகவும் இதனால் அவரது சிவில் உரிமை பறிக்கப்படும் எனவும் செய்யப்படும் பிரசாரங்களில் உண்மையில்லை என அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## 2015 A/L கருத்தரங்கு

**அரசியல்**
N.V.A.Y

காலம்: 24.07.2015 வெள்ளிக்கிழமை
நேரம்: 8.00 am - 4.00 pm

- வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்.
- கையேடுகள் வழங்கப்படும்.

இடம்: **யுனிவேர்சல்**
யாழ்.இந்து மகளிர் கல்லூரி அருகாமை

(1205)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




## திரு.சின்னராசா நித்தியானந்தன்

மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை முகாமையாளராக கடமையாற்றி, வன்னிப் பிராந்தியத்திற்கு உதவிப் பிராந்திய முகாமையாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் எமது சிரேஷ்ட முகாமையாளர் திரு.சின்னராசா நித்தியானந்தன் அவர்கள் மேன்மேலும் பதவி உயர்வுகள் பெற்று அவர்தம் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதி.
மானிப்பாய் நீடித்தகருமபீடம்
நாவலர் வீதி நீடித்தகருமபீடம்

(1204)

முகாமையாளரும்,
பணியாளர்களும்.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் இடம் பெறும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

மஹோற்சவத்தினை சிவமங்களேஸ்வரக்குருக்கள் நடத்தி வைப்பார். (ந-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைச் சந்தேக நபர்களுக்கு தேர்தல் காலத்தில் பிணை வழங்குவது வன்முறைக்கு தூண்டுகோலாக அமையும்

## பிணை வழங்க மறுத்து நீதிபதி இளஞ்செழியன் கட்டளை

(யாழ்ப்பாணம்)

கொலைக்குற்றச்சாட்டு சந்தேக நபர்களுக்கு தேர்தல் காலத்தில் பிணை வழங்குவது வன்முறைக்குத் தூண்டுகோலாக அமைந்துவிடும் எனக் கூறி பருத்தித்துறை நீதிமன்றத்தின் கட்டளைப்படி விளக்கமறியலில் இருந்து வரும் இரண்டு சந்தேக நபர்களுக்கு நேற்றைய தினம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் பிணை வழங்க மறுத்து கட்டளை பிறப்பித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

# நாட்டைப் பாதுகாக்கவே தேர்தலில் குதித்துள்ளோம்

## பொது பல சேனா விளக்கம்

(கொழும்பு)

சூழ்ச்சியாளர்களிடமிருந்து நாட்டை பாதுகாக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திலேயே நாம் இம்முறை தேர்தலில் களமிறங்கியுள்ளோம் என பொது பல சேனாவின் பொதுச் செயலாளரும், பொதுஜன பெரமுனவின் வேட்பாளருமான கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று காலை பொது பல சேனா அமைப்பின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

நாட்டின் தலைவர் மற்றும் கட்சித் தலைவர்கள் அனைவருமே தங்களது பதவியினை தக்க வைத்துக் கொள்ளவே தேர்தலில் போட்டியிடுகின்றனர். அவர்களுக்கு சிங்கள மக்களின் உரிமை குறித்து கவலைகள் இல்லை.

இந்நிலையில் சூழ்ச்சியாளர்களிடமிருந்து நாட்டை பாதுகாக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திலேயே நாம் இம்முறை தேர்தலில் களமிறங்கியுள்ளோம்.

23ஆம் பக்கம் பார்க்க....

# சயனைட் குப்பியுடன் ஐவர் கைது

(சென்னை)

தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள உச்சிப்புளியில், இரு இலங்கைத் தமிழர்கள உள்ளிட்ட ஐந்து பேர் சயனைட் குப்பிகள், புவிநிலைகாட்டிகள் (ஜிபிஎஸ்) மற்றும் செய்மதி தொலைபேசியுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரிஐ செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டு பொலிஸார் நேற்று

23ஆம் பக்கம் பார்க்க....

# துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்ட படைவீரர்களுக்கு கடும் நடவடிக்கை

(கொழும்பு)

துப்பாக்கிகளுடன் நேற்று முன்தினம் இரவு மிரிஹான பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட இராணுவ வீரர்கள் மூவர் தொடர்பில் இராணுவப் பொலிஸ் பிரிவும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது

இவர்கள் குற்றவாளிகள் என உறுதி செய்யப்பட்டால், தராதரம் பாராமல் கடுமையான முறையில் தண்டிக்கப்படுவார்கள் எனவும் அமைச்சு மேலும் கூறியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் குடியிருக்கும் மிரிஹான பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமான போலி இலக்கத் தகடுடைய வெள்ளை வான் ஒன்றை மிரிஹான பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைப்பற்றியுள்ளனர் இதனை பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் உறுதிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு

## தேர்தல்கள் செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாதோருக்கு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவின் அனுமதியுடன் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் தேர்தல்கள ஆணையாளருக்கும் இடையில் தேர்தல்கள் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போதே இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது தேர்தல் பிரசாரங்களை முன்னெடுப்பது தொடர்பில் தெளிவுப்படுத்தப்பட்டது.

23ஆம் பக்கம் பார்க்க....

# சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களாக மூவர் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா நேற்றைய தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களாக மூவரை நியமித்துள்ளார்.

அவிசாவளை தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாள

23ஆம் பக்கம் பார்க்க....

# லசந்தவை கொலை செய்தவரை எனக்குத் தெரியும் - கம்மன்பில



(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளரான லசந்த விக்ரமதுங்கவை கொலை செய்தது மற்றும் பிரதிப் எக்னெலிகொட காணாமல் போனதற்கு காரணமானவர் யார் என்பது குறித்து தனக்கு தெரியும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சி தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

நல்லாட்சி அரசாங்கத்தின் பங்குதாரரே லசந்த விக்ரமதுங்கவை கொலை செய்தது மற்றும் பிரதிப் எக்னெலிகொட காணாமல் போனதற்கு காரணமானவர்.

இந்த ஊடகவியலாளர்களின் கொலை மற்றும் காணாமல் போன

23ஆம் பக்கம் பார்க்க....

# சிங்கள -முஸ்லிம் மக்களிடையே தேர்தலுக்கு முன் மோதல் அபாயம்

## தற்போதைய அரசே அதற்கு காரணமாகும் - விமல்

(கொழும்பு)

எதிர்வரும் பொது தேர்தலுக்கு முன்னர் சிங்கள - முஸ்லிம் மக்களுக்கு இடையில் மோதலை ஏற்படுத்தி, அம்மோதலை தங்கள் சார்பாக பயன்படுத்திக் கொள்ளும் அவசியம் தற்போதைய அரசாங்கத்திற்கு காணப்படுவதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொலன்னாவையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

சிங்கள - முஸ்லிம் சிவில் குழுக்

23ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 242

## அஹங்காரத்தை விடுதல்



...ஆசிரமத்தில் என்னுடைய வேலையைச் செய்பவர்களிடம்கூட கடுமைத்தனம் புக நான் ஒருபோதும் அனுமதிப்பதில்லை.

ஒரு சின்னக் கதை...

ஒரு சிறு நகரத்தில் பேசுவதற்காக ஒரு நகைச்சுவை பேச்சாளர் அழைக்கப்பட்டார். அவர் நிகழ்ச்சிக்கு ஒரு பெருங்கூட்டத்துடன் வந்தார். பேச்சாளருடன் வந்தவர்களின் எண்ணிக்கையைப் பார்த்து, அமைப்பாளர்களுக்கு ஒரே ஆச்சரியம்.

பேச்சாளர் அவர்களுடைய வியப்பான பார்வையைப் பார்த்துவிட்டுச் சொன்னார், இந் நாட்களில் சிரிப்பவர்கள் கிடைப்பதே அபூர்வமாக இருக்கிறது. அதனால் நான் என்னுடைய பார்வையாளர்களையும் அழைத்து வந்துவிட்டேன்.

(சிரிப்பு)

பெயரளவிலான உயர் வட்டங்களில் மக்கள் சிரிப்பார்கள்; ஆனால், மிகவும் நாகரிகமாக, மிகவும் பண்பட்ட வகையில்! இது உண்மையான சிரிப்பல்ல; உயிரற்ற சிரிப்பு, சிரிப்பை ஒருபோதும் நெறிப்படுத்த முடியாது.

நெறிப்படுத்தப்பட்டால், அது சிரிப்பல்ல; அது நல்ல பேசும் தியான மயமான சிரிப்பாக இருக்காது. அது உள்ளிருக்கும் அஹங்காரத்தின் வெறும் வெளிப் பாடாக இருக்கும். அவ்வளவே.

ஒரு நகைச்சுவை சொல்லப்படும் பொழுது நீங்கள் ஏன் சிரிக்கிறீர்கள் என்பதை ஆராய்ந்தால், அதைப் புரிந்துகொள்வீர்கள். முதலில் தர்க்க ரீதியாகத் தொடர்புடைய சில வாக்கியங்கள் சொல்லப்படுகிறது.

நீங்கள் உருவாக்கப்பட்ட தர்க்கத்தைப் பிடித்துக்கொண்டு தொங்கிக் கொண்டிருக்கும் பொழுதா உங்கள் தர்க்கம் ஆட்டம் காணும் வகையிலான முத் தாய்ப்பான ஒரு வாக்கியம் உதிர்க்கப்படுகிறது! உங்களுடைய தர்க்கம் ஆட்டம் காணும் அந்தக் கணத்தில் உங்களுடைய சிந்தனையும் மனமும் கூட ஆட்டம் கண்டு, நீங்கள் ஒரு மனமற்ற நிலை அல்லது ஸத்தோரியில் இருக்கிறீர்கள். நீங்கள் புத்தராக இருக்கிறீர்கள்!

மனமற்ற நிலையில் இருக்கும் பொழுது நீங்கள் நிகழ்காலத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் சிரிக்கும் பொழுது நிகழ்காலத்தில் இருக்கிறீர்கள்; ஏனெனில், சிரிக்கும் பொழுது எண்ணங்கள் இருக்க முடியாது.

எண்ணமற்று இருக்கும் பொழுது நீங்கள் நிகழ் காலத்தில் இருக்கிறீர்கள். எண்ணங்களுடன் இருக்கும்பொழுது நீங்கள் கடந்த காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோதான் இருப் பீர்கள்.

சிரிப்பு முழுமையானது; அதனால் உங்களை வெறுமனே குணப்படுத்தவும் உருமாற்றவும் முடியும். அதுவே மனித இனத்திற்குச் சிறந்த மற்றும் சுலபமாகக் கிடைக்கும் மருந்தாகும்.

நான் சொல்கிறேன்... மந்தமான மற்றும் உற்சாக மற்ற கணங்களில் செலவழிப்பதற்கு வாழ்க்கை மிகவும் விலை மதிப்பற்றது. சிரியுங்கள்; உங்கள் வாழ்க்கையில் சக்தியையும் ஆனந்தத்தையும் உட்புகுத்துங்கள்.

நீங்கள் என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் தொடர்ந்து மகிழ்ச்சியாக இருப்பது என்று தீர்மானியுங்கள். சிரத்தை யுடன் இருங்கள்; கடுமையுடன் அல்ல.

நீங்கள் சிரிக்கும்பொழுது உங்களைச் சுற்றி சக்தியைப் பரப்புகிறீர்கள்; அது தொற்றிக்கொள்ளும் இயல்புடையது; நீங்கள் உங்களைச் சுற்றி குணப்படுத்தக்கூடிய ஆனந்தத்தைப் பரப்புகிறீர்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# அதிசய உலகம்

### நட்சத்திர ஹோட்டலை வாடகைக்கு எடுத்து கடல் சிங்கத்திற்கு நடத்திய பிறந்த நாள் பார்ட்டி



செல்லமாக வளர்க்கும் கடல் சிங்கத்துக்கு பிறந்த நாள் விழா கொண்டாடுவதற்காக சீனாவில் உள்ள 5 நட்சத்திர ஓட்டலை முழுமையாக வாடகைக்கு எடுத்து பர்த்டே பார்ட்டி கொடுத்த கோடீஸ்வரரைப் பற்றிய தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

சீனாவின் மிகப்பெரிய கோடிஸ்வரர்களில் ஒருவரான வாங் ஜியலின் என்பவரின் 30 வயது மகன் தான் வளர்க்கும் கடல் சிங்கத்தின் பிறந்த நாளை வெகுவிமரிசையாக கொண்டாட நினைத்தார். இதற்காக கடலோர நகரமான க்விங்டாவோவில் ஓஷன் ஸ்பிரிங் என்ற 5 நட்சத்திர ஓட்டலை முழுமையாக இரண்டு நாட்கள் வாடகைக்கு எடுத்துள்ளார்.

இவர்கள் இருவரும் சேர்ந்து அந்த ஓட்டலையே அமர்க்களம் செய்துள்ளனர். இவர்களுக்கென தனி சமையல்காரர் நியமிக்கப்பட்டு பர்த்டே ஸ்பெஷல் உணவும் பரிமாறப்பட்டது. இப்படியொரு ஜோடியைப் பார்த்து ஹோட்டல் ஊழியர்கள் ஆச்சரியத்தில் மூழ்கினர். சீனாவில் இவ்வாறு கணக்கில்லாமல் பணத்தை வாரி இறைப்பவர்களை 'டுஹாவ்' என்று கிண்டல் செய்வார்கள்.

# சமைப்போம் சுவைப்போம்

## உளுந்து களி அல்வா



**தே.பொருட்கள்:**

உளுந்து - 250 மி.கிராம்

நெய் - 50 மி.லி

தேங்காய் பால் - 2 மூடிகள் துருவி எடுத்தது

அரிசி - 50 கிராம்

சர்க்கரை - 250 கிராம்

**செய்முறை**

உளுந்தையும், அரிசியையும் நன்கு ஊற வைத்து, சிறிது நேரம் காய வைத்து லேசாக ஈரப்பதத்துடன் பவுடர்போல் அரைத்து கொள்ள வேண்டும். பின்னர் அதனை ஈரத்துணியில் ஆவிக்கட்டி எடுக்கவும். பின்னர் பாத்திரத்தில் நெய்விட்டு நன்கு காய்ந்தவுடன் சர்க்கரையை கொட்டி சிறிது தண்ணீர் ஊற்றி பாகு போல் காய்ச்ச வேண்டும்.

பின்னர் ஆவிகட்டிய மா, தேங்காய் பால் ஆகியவை போட்டு கிளறவும். நன்கு காய்ச்சிய பிறகு களி போல் ஆனவுடன் வாசனைக்காக ஏலக்காய் தூள் அல்லது வெந்தயத்தூளை போட்டு இறக்கவும். சுவையான உளுந்து களி அல்வா ரெடி. இறக்கியவுடன் சூடாக பரிமாறவும். இது உடம்புக்கு குளிர்ச்சி தருவதுடன் சர்க்கரை நோயாளிகளுக்கு மிகவும் நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கியில் தற்கொலைத் தாக்குதல் முப்பது பேர் பலி; நூறு பேர் படுகாயம்



(இஸ்தான்புல்)

**சிரியா நாட்டின் எல்லையோரமுள்ள துருக்கி நாட்டின் சுரக் நகரில் நேற்று முன்தினம் நிகழ்ந்த தற்கொலை வெடிகுண்டு தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 100 பேர் படுகாயமடைந்துள்ளனர்.**

துருக்கி நாட்டின் தென் கிழக்கு எல்லைப் பகுதியில் உள்ள நகரம் சுரக். இது சிரியா நாட்டின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள குர்தீஸ் மக்கள் அதிகம் வசிக்கும் நகரமாகும். இந்த நகரில் நேற்று முன்தினம் மதியம், மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியில் திடீரென குண்டு வெடித்தது. இதில் சம்பவ இடத்திலேயே 30 பேர் கொல்லப்பட்டனர்.

100-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இவர்கள் அனைவரும் உள்ளூர் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

சிரியாவின் எல்லையை யொட்டி அமைந்த நகரம் என்பதால் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் இந்த குண்டு வெடிப்பை நிகழ்த்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (3-7)

# தாக்குதல் குறிதவறியது 7 ஆப். இராணுவம் பலி!

## வருத்தம் தெரிவிக்கிறது அமெரிக்கா



(காபூல்)

தீவிரவாதிகளை குறிவைத்து அமெரிக்க விமான படை நடத்திய தாக்குதலில் தவறுதலாக 7 ஆப்கான் இராணுவ வீரர்கள் பலியாகியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் இருக்கும் தீவிரவாதிகளையும் தலிபான்களையும் எதிர்த்து போராடுவதற்கு அந்நாட்டிற்கு அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படைகள் புலனாய்வு, நிதியுதவி மற்றும் வான்வழி தாக்குதல் ஆகியவை மூலம் உதவி செய்து வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை தலிபான்கள் ஆதிக்கம் செலுத்தும் லோகர் மாவட்டத்தில் உள்ள சோதனை சாவடி மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தின. இதில் 7 பேர் பலியானார்கள். 5 பேர் படுகாயம் அடைந்தனர். ஆனால் பிறகுதான் தெரிந்தது கொல்லப்பட்ட வர்கள் தீவிரவாதிகள் இல்லை, அவர்கள் அனைவரும் ஆப்கான் இராணுவ வீரர்கள் என்பது.

இதுபற்றி கருத்து தெரிவித்துள்ள அமெரிக்க பாதுகாப்பு படை அதிகாரிகள் இது திட்டமிடுவதில் ஏற்பட்ட தவறால் நிகழ்ந்த துன்பியல் சம்பவம் என தெரிவித்துள்ளனர். (3-7)

# கனடாவில் 15வது மாடியிலிருந்து விழுந்த குழந்தை உயிரிழந்தது

## திட்டமிட்ட கொலையா? பொலிஸ் சந்தேகம்

கனடா நாட்டில் உள்ள 15 அடுக்கு மாடியிலிருந்து விழுந்த குழந்தை ஒன்று உடல் சிதைந்து உயிரிழந்த சம்பவம் அப்பகுதி மக்களிடம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒண்டாரியோ மாகாணத்தில்உள்ளபொரண்டோ நகரில் தான் இந்த சோக சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்த காட்சியை கண்ட குழந்தையின் பெற்றோர் கதறி அழுதுள்ளனர் ஆனால், வைத்தியசாலையில் அனுமதித்த சிறிது நேரத்திலேயே குழந்தையின் உயிர் பிரிந்தது.


இந்த விபத்து சம்பந்தமாக விசாரணை நடத்திய பொலிசாரிடம், குழந்தை அலறியவாறு தன் கண் முன்னால் தரையில் விழுந்ததாக அந்த குடியிருப்பின் முதல் மாடியில் வசித்த நபர் ஒருவர் கூறியுள்ளார்.

குடியிருப்புவாசிகள் சங்கத்தின் தலைவரான அபாஸ் கொலியா கூறுகையில், இந்த கட்டடத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டின் ஜன்னல்களும் பாதுகாப்பாக கட்டப்பட்டுள்ளது. மேலும், ஜன்னலை முழுமையாக திறக்க முடியாதவாறு கொக்கிகள் அமைக்கப்பட்டுள்ளதால், 4 வயது குழந்தையால் ஜன்னலை திறந்கொண்டு விழுந்திருக்க முடியாது என்றார்.

குழந்தை தானாக விழுந்ததா அல்லது யாராவது திட்டமிட்டு தள்ளி விட்டு கொலை செய்துள்ளனரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (3-7)




# லிபிய போர் விமானங்கள் குண்டுவீச்சு எதிரிப்படைகளின் கப்பல் மூழ்கியது



லிபியாவில் ஜனாதிபதி கடாபி 2011 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டதில் இருந்து அங்கு குழப்பம் நிலவி வருகிறது. கிழக்கு பகுதியில் பெங்காசி நகரை தலைநகராக கொண்டு அதிகாரபூர்வ அரசு செயற்படுகிறது. எதிர் குழுவினர் தலைநகர் டிரிபோலியை கைப்பற்றி நிர்வாகம் செய்து வருகின்றனர்.

இரு தரப்பினரும் தங்களுக்கு உட்பட்ட எல்லைப் பகுதியை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள கடும் சண்டையிலும் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த மே மாதம் முதல் இரு தரப்பினருக்கும் இடையே சண்டை தீவிரம் அடைந்துள்ளது. ஒருவருக்கொருவர் விமானங்கள் மூலம் குண்டுகளை வீசி தாக்குதலும் நடத்துகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம், அதிகாரபூர்வ அரசு படைகள் பெங்காசி துறை முகம் அருகே மரீசா கடல் பகுதியில் எதிரிப் படையினரின் 2 கப்பல்கள் மீது போர் விமானங்கள் மூலம் சரமாரியாக குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. இதில் ஒரு கப்பல் கடலில் மூழ்கியது. இன்னொரு கப்பல் கடுமையாக சேதம் அடை ந்தது.

இந்த தகவலை அதிகார பூர்வ அரசின் செய்தி தொடர்பாளர் முகமது எஜ்ஹெஜாஜி உறுதிப்படுத்தி னார். கிழக்கு பகுதியில் தீவிர வாதத்தை தூண்டி விடுவதற்காக இந்த இரண்டு கப்பல்களிலும் ஏராளமான ஆயுதங்கள் ஏறப்பட்டு இருந்ததால் அவற்றின் மீது தாக்குதல் நடதப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (3-7)

# சீனாவில் 3 மணி நேரத்தில் 2 மாடி வீடு கட்டி சாதனை

## நிலநடுக்கத்தையும் சமாளிக்குமாம்



(பீஜிங்)

அழகிய வீடு கட்டி முடிக்க குறைந்தது 6 மாதம் ஆகும். ஆனால் சீனாவில் 3 மணி நேரத்தில் 2 மாடி வீடு கட்டி ஒரு கட்டுமான நிறுவனம் அசத்தியுள்ளது.

சான்ஸி மாகாணத்தில் ஸியான் என்ற இடத்தில் இந்த சாதனை படைக்கப் பட்டுள்ளது. இந்த வீட்டை கட்ட கட்டுமான நிறுவனம் '3டி பிரிண்டிங்' தொழில்நுட்பத்தை பயன்படுத்தியுள்ளது.

அதற்கான மாதிரிகள் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டன. அதி நவீன தொழில்நுட்ப முறையில் வீடு கட்ட சதுர மீற்றருக்கு ரூ.25 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரை செலவானது.

வீட்டின் வடிவமைப்பு உருவாக்கப்பட்டு 'கிரேன்' மூலம் தூக்கி பொருத்தப்பட்டது. இந்த வீடு சமையலறை, படுக்கையறை, ஓய்வு அறை மற்றும் விறாந்தை உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

தொழிற்சாலை மற்றும் விவசாய கழிவுகள் என்பன மூலப் பொருட்கள், கட்டுமான பொருட்களாக பயன்படுத்தப்பட்டன. இதுபோன்ற வீடு கட்டுவதன் மூலம் போக்குவரத்து, ஆட்கள் கூலி, பொருட்கள் போன்றவற்றின் செலவு குறையும். காலவிரயமும் தவிர்க்கப்படும்.

3 மணி நேரத்தில் 2 மாடிகளுடன் கட்டப்பட்ட இந்த வீடு 9 ரிக்டர் அளவில் பூகம்பம் ஏற்பட்டாலும் அதை தாங்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது என பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (3-7)

# கோழிகளை பயன்படுத்தி ஐ.எஸ்.ஐ.எஸ்.தாக்குதல்

ஈராக் சிரியாவின் சில பகுதிகளை கைப்பற்றி இஸ்லாமிய நாடாக ஆட்சி செய்து வரும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள், குர்திஸ் இன போராளிகள் குழுக்கள் மற்றும் பொது மக்கள் மீது முன் அறிவிப்பின்றி இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி வருவதாக சிரியாவும் ஈராக்கும் குற்றஞ் சாட்டியுள்ளன.



இந்த நிலையில் ஈராக் நகரமான பல்லூஜாவில் தங்கள் எதிரிகளை தகர்க்கும் முயற்சியாக கோழிகளுக்கு வெடிகுண்டு இணைக்கப்பட்ட வெடிகுண்டுஆடைகளை பயன்படுத்தி தாக்குதல் நடத்துகின்றனர்.

எதிரிகள் முகாம்களுக்குள் கோழிகளை வெடிகுண்டுகளுடன்நுழைய விட்டு குறிப்பிட்ட தூரத்தில் இருந்து ரிமோட் மூலம் வெடிகுண்டுகளை வெடிக்க செய்கின்றனர். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்திற்கு முரணான வகையில் யாழில் தேர்தல் சுவரொட்டிகள்

## கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி

(யாழ்ப்பாணம்)

**யாழில் சட்டத்திற்கு முரணான வகையில் தேர்தல் சுவரொட்டிகள் தொடர்ந்தும் ஒட்டப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.வூட்லர், இவ்வாறு சுவரொட்டிகளை ஒட்டுபவர்கள் இனங்காணப்பட்டால் அவர்கள் கைது செய்யப்பட்டு கடுமையான சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் தெரிவித்தார்.**

எட்டாவது பொதுத்தேர்தல் அடுத்த மாதம் நடைபெறவுள்ள நிலையில் அதற்கான தேர்தல்பிரசாரங்கள் தற்போது சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 15 கட்சிகளும் 12 சுயேட்சைக் குழுக்களும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு களமிறங்கியுள்ளன.

இங்கு தேர்தலுக்கான போட்டித்தன்மை அதிகளவில் காணப்படுகின்ற நிலையில் அதனையொட்டிய தேர்தல் பிரசாரங்களும்போட்டித் தன்மையில் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக தற்போது தேர்தல் பிரசாரக்கூட்டங்கள் ஆரம்பிக்கப்படாத நிலையில் தேர்தல் சுவரொட்டிகளே தற்போது முக்கியம் பெற்றுள்ளன.

இச்சுவரொட்டிகள் தேர் தல் விதிமுறைகளுக்கு அமை யாமல் சட்டவிரோதமான முறையில் பொது இடங்கள் பொதுச் சொத்துக்கள் மீது ஒட்டப்பட்டு வருகின்றன. போக்குவரத்து பேருந்துகள், முச்சக்கரவண்டிகள் மீது தேர்தல் சுவரொட்டிகள் ஒட்ட வேண்டாம் என பொலிஸ் தரப்பு பல தடவை எச்சரித்திருந்தபோதிலும் அவை தற்போதும் தொடர்ந்தவண்ணமேயுள்ளன.

சட்டத்திற்குமுரணானவகையிலான தேர்தல் சுவ ரொட்டிகள் பெரும்பாலும் இரவு வேளைகளிலேயே ஒட்டப்பட்டு வருகின்றன. இதனையடுத்து யாழ். பொலிஸார் இரவு நேர ரோந்து நடவடிக்கைகளிலும் தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் ஒட்டப்படுகின்ற சுவரொட்டிகள் உரிக்க முடியாதவாறும் மற்றும் வர்ணத்தாலும் சுவர்களில் அச்சிடப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகள் தேர்தல் விதிமுறைகளுக்கு முற்றிலும் முரணானவையாகும். ஆகவே இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளை இன்றிலிருந்து கைவிடுவது நல்லது அல்லது கடுமையான தண்டனை அனுபவிக்க நேரிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (3-4)

## கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொளளுமாறு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா. செந்தில்நந்தனன் கேட்டுள்ளார். (3-5)

## சேவை நயப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி இடைக்காடு ம்கா வித்தியாலயத்தில் 7 வருடங்கள் அதிபராக கடமையாற்றிய அ. அருந்தவநேசன் தனது சேவையில் இருந்து நாளை வியாழக் கிழமை ஓய்வு பெறுகின்றார்.

இவருக்கானசேவைநிறைவு நயப்புவிழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை சமூகத்தினரால நடத்தப்படவுள்ளது. (3-5)

## சுவரொட்டி ஒட்டிய இருவர் கைது

(கரணவாய்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர் எனும் சந்தேகத்தின் பேரில் தொண்டைமானாறு கம்பர் மலையைச் சேர்ந்த இருவர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் சுவரொட்டிகளை தனிப்பட்ட முறையில் விநியோகம்செய்தல், வீதிகளில்வரைதல் மற்றும் சுவர்களில் ஒட்டுதல் என்பன எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெற வுள்ள நாடாளுமன்றத் தேர்தல் வரை தடை செய்யப்பட்டுள்ளது.(3-5-60)

# யாழ்.சிவகுருநாதர் வீதியின் திருத்தப் பணிகள் ஆரம்பம்



(காரைநகர்)

யாழ்ப்பாணம் சிவகுருநாதர் வீதி கடந்த இருபது வருடங்களுக்கு மேல் புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்பட்ட நிலையில் பொது மக்களின் பல ஆண்டு கோரிக்கையின் பயனாக தற்போது புனரமைப்பதற்காக கற்கள் பறிக்கப்பட்டு புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆனால் மழைநீர் தேங்கி நிற்காது வழிந்தோடக் கூடிய வகையில் புனரமைக்கப்படாது சாதாரணமாக வேலைகள் நடைபெற்று வருகின்றன.

புனரமைப்பிற்காக தரமற்ற பழைய கட்டட உடைபாடு கற்களும் பறிக்கப்பட்டுள்ளன. பழைய கற்கள் பறிககப்பட்டமை தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இன்றுவரை ஒப்பந்தகாரரினால் அப்பழைய கற்கள் அகற்றப்படவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புனரமைக்கப்படும் குறித்த வீதியினை நேரடியாக பார்வையிட்டு மழைநீர் தேங்கி நிற்காத வகையில் நீண்ட கால பாவனைக்கேற்ற வகையில் வீதியினை உயர்த்தி புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதியை யாழ். இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆரம்பப்பிரிவு யாழ. இந்து மகளிர் கல்லூரி மாணவர்கள் மற்றும் பெருமளவு பாதசாரிகள் என பல்லாயிரக் கணக்கானவர்கள் பயன்படுத்தி வருகின்றார்கள் என்பதும குறிப்பிடத்தக்கது. (3-5-246)

## தொற்றா நோய்களுக்கு வாராந்த சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தொற்றா நோய்களுக்கான வாராந்த சிகிச்சை ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை மேற்படி சிகிச்சை நடைபெற்று வருகின்றது.

எனவே அரசாங்க ஊழியர்கள் உட்பட அனைத்துப் பொதுமக்களும் இச்சிகிச்சை நிலையத்தில் கலந்து கொண்டு பயன்பெறும்படி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் வி. ஜெயராஜா கேட்டுள்ளார். (3-5)

யாழ்.செய்திகள்

## பரீட்சை அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. (உ/த), தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைகளில் கடமையாற்றும் இணைப்பு நிலைய அலுவலர்கள், உதவி இணைப்பு நிலைய அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் யா/வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலையில் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாண வலயம், தீவக வலயம், தென்மராட்சி வலயம் ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் அனைவரும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டால் மாத்திரமே பரீட்சைக்கடமைகளில் கடமையாற முடியும் என்பதனால் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (3)

# 3 உணவகங்களில் சுகாதார சீர்கேடு முப்பதாயிரம் ரூபா அபராதம் விதிப்பு

(கரணவாய்)

சுகாதார சீர்கேடு காரணமாக வடமராட்சிப் பகுதிகளில் உள்ள மூன்று உணவகங்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதில் கரணவாய் பகுதியில் உள்ள உணவகத்துக்கு 6 ஆயிரம் ரூபாவும் நெல்லியடிப் பகுதியில் உள்ள உணவகத்திற்கு 19 ஆயிரம் ரூபாவும் உடுப்பிட்டிபகுதியில் உள்ள உண வக த்துக்கு 5 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதிகளில் உள்ள மேற்படி உணவகங்களில் கடந்த வியாழக்கிழமை கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் திடீர் சுகாதார பரிசோதனை களை சுகாதார பிரிவு மேற்கொணடது.

இதன்போது மேற்படி உணவகங்களில் உள்ள உணவுகள் வைக்கப்பட்ட அலுமாரிகள் மூடப்படாது இருந்தமையினாலும் உணவுத் தட்டு கள் கழுவுப்படாமல் இருந்தமையினாலும் மற்றும் உணவுகள் திறந்த நிலையில் வைக்கப்பட்டு இருந்தமையாலும் சுகாதாரப் பிரிவு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (3-5-60)

# அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு இந்து இறுதிப் பரீட்சை செப்டெம்பரில்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை திணைக்களத்தினால் வருடந்தோறும் நடத்தப்படும் இந்து இறுதி நிலை பரீட்சை இவ்வருடம் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ளதால் இதற்கான விண்ணப்பங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 21.08.2015 ஆகும். பரீட்சை திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் இதுவரை கிடைக்காத அறநெறிப் பாடசாலைகள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை பெற்று விண்ணப்பிக்குமாறு திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒருங்கமைப்பு வெளிநா ட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத்திணைக்களம், தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, பெலவத்தை,பத்தரமுல்ல.

கடந்த ஆண்டில் மாணவர்களைபரீட்சைக்கு அனுப்பி வைத்த எல்லா இந்து அறநெறிப்பாடசாலைகளுக்கும் போதுமான விண்ணப்பப்படிவங்களும் அறிவுறுத்தல்களும் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பப் படிவம் கிடைக்காத அல்லது 2013 (2014) ஆம் ஆண்டுப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகளை அனுப்பாத இந்து அறநெறிப் பாடசாலையாயின் பாடசாலையின் பெயர், முகவரி, தோற்றவுள்ள விண்ணப்பதாரிகளின் தொகை, போன்ற விபரங்களை குறிப்பிட்டு மேற்குறிப்பிட்ட முகவரிக்கு 2015.08.01 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்கவேண்டும்.

இப்பரீட்சைக்கு தனிப்பட்ட முறையில்(வெளியார்) விண்ணப்பிக்க முடியாது. சகல விண்ணப்பதாரிகளும் அறநெறிப்பாடசாலையினூடாகவே விண்ணப்பித்தல் வேண்டும். முதற் தடவையாகத் தோற்றுபவர்கள், பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. ஏனையோருக்கான பரீட்சைக்கட்டணம் 150 ரூபா ஆகும். நூனசித்தி பெற்ற பாடமொன்றிற்கு 50 ரூபா ஆகும் என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார் என திணைக்களம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# மில்க்வைற் கனகராசாவின் 17-வது நினைவுதின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் நடத்தவுள்ள மில்க் வைற் கனகராசாவின் 17 ஆவது நினைவு தின நிகழ்வுஅகிலஇலங்கைகாந்திசேவா நிலையத்தால் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கமைய திருநெல்வேலி, யாழ்ப்பாணம், உருத்திரபுரம் ஆகிய இடங்களில் மேற்படி நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இதன் காலை நிகழ்வு யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் இ.பசுபதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அறிமுக உரையினை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பொதுச்செயலாளர் எம்.ஷாந்தன் சத்திய மூர்த்தி வழங்குவதுடன் நினைவுரையினை சங்கத்தின் யாழ். மாவட்ட கிளைத்தலைவர் கா.கார்த்திகேசு வழங்கவுள்ளார். இதன் மாலைநிகழ்வு இல. 774, வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள சங்கத்தின் யாழ். கிளை அலுவலகத்தில் சங்கத்தலைவர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் எம்.ஷாந்தன் சத்தியமூர்த்தியின் வரவேற்புரையும் மூத்த ஊடகவியலாளர்ந.கணேமூர்த்தியின்நினைவுரையும் இடம்பெறவுள்ளது.

இதன்போது காந்தீயம் நூல் வெளியீடும் இடம்பெறுவதுடன் நூல் வெளியீட்டுரையினை ஓய்வுநிலை அதிபர் செ.சுப்பிரமணியம் வழங்க வுள்ளார். (3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.ஒஸ்மானியா கல்லூரியின் உயர்தர வகுப்பு இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் இன்று புதன்கிழமை க.பொ.த உயர்தர வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

1990 ஆம் ஆண்டுடன் நிறுத்தப்பட்ட மேற்படி வகுப்புகள் இவ்வாண்டு (2015) கல்லூரி அதிபர் ரி.மகேந்திரராசா மற்றும் பிரதி அதிபர் மௌலவி எம்.ஏ பைசர் மதனி ஆகியோரின் முயற்சியினால் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக கலைப்பீடத்தில் மாணவர்கள் இணைக்கப்பட்டு இன்று உயர்தர வகுப்பு அதிபர் தலைமையில் கல்லூரியின் மஹ்மூத் மண்டபத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் அடுத்த ஆண்டில் ஏனைய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ள அதே வேளை இதன் மூலம் இப்பாடசாலையின் 1 ஏபி தரத்தினை பாதுகாப்பதோடு தரமான கல்வியை எதிர்காலத்தில் சமூகத்திற்கு பயனுள்ள முறையில் வழங்க முடியும்.

அத்துடன் தற்போதைய சூழலில் தடைப்பட்டுள்ள முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை இதன் மூலம் சாத்தியப்படுத்த முடியும் எனவும் கல்லூரியின் பிரதி அதிபர் குறிப்பிட்டார்.

இவ் உயர்தர வகுப்பில் கலைப்பீடத்தில் இஸ்லாம், அரபு, அரபியல் மூலதத்துவம், புவியியல்,தமிழ்,ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படவுள்ளன.

எனவே இதில் இணைய ஆர்வமுள்ள வெளிமாவட்ட மாணவர்கள் இருபாலாரும் உடனடியாக தொடர்புகளை மேற்கொள்ளுமாறும் கல்லூரி நிர்வாகம் கேட்டுள்ளது. (3-4)


பாராளுமன்றத் தேர்தல்-2015
யாழ். மாவட்டம்



5
ந.மதிஅழகராசா(மதி)
தமிழர் விடுதலைக் கூட்டணி
X 5
உண்மைகள் மலர்ந்திட பொய்மைகள் ஒழிந்திட...

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 41 சூரி, செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Dip.in computer கனடா
தொ.இ: B/4770

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 16 செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L லண்டன் PR
தொ.இ: B/4775

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 40
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பொறியியலாளர்/ அவுஸ்திரேலியா
தொ.இ: B/4779

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 62.5
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BSC,MSC/ அரச தொழில்
தொ.இ: B/4780

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 38 சூரி,செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L தனியார் தொழில்
தொ.இ: G/1647

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 07
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L தனியார் தொழில்
தொ.இ: G/1656

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 26 செவ் 12 இல்
உயரம்: 153 cm
தகைமை/தொழில்: A/L அரச தொழில்
தொ.இ: G/1657

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 52
உயரம்: 153 cm
தகைமை/தொழில்: BA/ அரச தொழில்
தொ.இ: G/1667

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ் தேர்தல் மாவட்டம்
X 7
அர்ப்பணிப்பு! அனுபவம்!! நேர்மை!!!



7
திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள் பா.உ அமரர் வி.தர்மலிங்கம் அவர்களின் புதல்வன்)
- யாழ் மக்கள்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)


## ராசி பலன்

22.07.2015
(ஆடி 06, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சஷ்டி பிற்பகல் 4.30 மணிவரை
அத்தம் பின்னிரவு 5.10 மணிவரை
இராகுகாலம் 12.01-1.31 மணிவரை
சுபநேரம்-4.31-6.01 மணிவரை
குமார சஷ்டி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | செவ் |
| | | | சூரி புதன் |
| | | | குரு சுக் |
| | | சனி | சந் ராகு |

**மேடம்:** குடும்ப மகிழ்ச்சி கூடும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**இடபம்:** அரசு வழியில் அனுகூலமுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிள்ளைகள் வழியில் சுபசெலவுகள் அதிகரிக்கும், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**மிதுனம்:** பொதுக்காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பணவரவு திருப்திதரும்.

**கடகம்:** பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி:** கோரிக்கைகள் நிறைவேற கணபதியை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**துலாம்:** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வேலைச்சுமை கூடும், தொழிலில் கூட்டாளிகளிடம் கொஞ்சம் கவனம் தேவை, ஒருசில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கும் சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்:** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், சகோதர வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**தனுசு:** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், புதிய திட்டங்கள் கைகூடும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், கடன் தொல்லைகள் அதிகரிக்கும்.

**மீனம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், செய்தொழில் மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டவாளத்தில் படுத்துறங்கிய குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(மல்லாவி)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தபால் புகையிரதத்தில் மோதுண்டு குடும்பஸ்தர் சம்பவ இடத்தில் பலியானார்.

இச்சம்பவம்நேற்றுமுன் தினமிரவு 9.30 மணியளவில் மாங்குளம் புகையிரத நிலையத்திற்கும் புளியங்குளம் புகையிரத நிலையத்திற்கும் இடைப்பட்ட தண்டவாளத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் ஓமந்தைப் பகுதியைச் சேர்ந்த வடிவேல் சதாசிவம் (வயது -49) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மதுபோதை காரணமாக தண்டவாளத்தில் படுத்துறங்கிய பிரஸ்தாப நபர் தபால் புகையிரதத்தில் மோதுண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் தகவலறிந்த கனகராயன் குளம் பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்ததுடன் புலன்விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (2-15)

# இணைந்த சேவையல்லாத உத்தியோகத்தர்களின் விபரத்தை விரைவுபடுத்தி அனுப்பி வைக்குக

## மத்திய கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

மத்திய கல்வியமைச்சின் கீழ் இயங்கும் ஆசிரிய மத்திய நிலையங்களில்கடமைபுரியும்இணைந்தசேவை அல்லாத உத்தியோகத்தர்




களின் விபத்தினை விரைவாக அனுப்பி வைக்குமாறு மத்தியகல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் (தாபனம்) எம். எச். பீ.மல்காந்தி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மத்திய கல்வி அமைச் சின் கீழுள்ள ஆசிரிய மத்திய நிலையங்களில்கடமைபுரியும்இணைந்த சேவை அல்லாத உத்தியோகத்தர்களின் விபரங்களை எதிர்வரும் 29 ஆம் திகதி புதன் கிழமைக்கு முன் பாக அனைத்து ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர்கள் அனைவரும் உதவிச் செயலாளர், பொது தாபன (இணைந்த சேவை அல்லாத) கிளை, கல்வி அமைச்சு இசுறுபாய, பத்தரமுல்ல, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

# நிர்வாகத்தெரிவு

முல்லைத்தீவு மாவட்டத் தின் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தின் நடப்பாண் டிற்கான நிர்வாகத் தெரிவு கடந்த வாரம் முல்லைத்தீ வில் மேற்படி சங்கத்தின் பணிம னையில் நடைபெற்றது. இதில் தலைவராக கனக ராசா அரவிந்தன், உப- தலை வராக இராசையா இரா மேஸ், செயலாளராக தர்சியத் நவரெட்ணம் மரிய கிறிஸ்ரி, உப செயலாளராக சுப்பிரமணியம் மனோகரன், பொருளாளராக இராஜகோபால் நிறைந்தன் ஆகியோர் தெரிவாகினர்.

நிர்வாக உறுப்பினர்களாக அழகராசா தேவசுதன், தம்பிராசா குகனேஸ்வரன், மிக்கல் பிள்ளை ஜோன்சன் மோகனராசா, சங் கரப் பிள்ளை சுரேஸ் குமார், அமி ர்தலிங்கம் சிவலோகேஸ்வரன், விஜய ரெட்ணம் யோகரட்ணம், இளையதம்பி, ஜெயவீரசிங்கம், நாகராசா சற்குணராசா ஆகியோர் தெரிவாகினர். (2-15)




# வடிரக வாகனம் குடை சாய்ந்தது

## மூவர் மரணம்; 11 பேர் காயம்!





(மன்னார்)

வடி ரக வாகனம் வேகக்கட்டுப் பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி குடை சாய்ந்ததில் மூவர் சம்பவ இடத்தில்உயிரிழந்தனர். 11பேர்காயம் அடைந்தனர். இச் சம்பவம் நேற்றுக் காலை மன்னார்-புத்தளம் எலுவஸ்குளம் வீதியிலுள்ள கல்லாறு பாலத்தில் இடம் பெற்றுள்ளது. இதில் என்.பி. ஜவ்பர் (வயது -63), எஸ்.எச்.ரஜீம் (வயது-68), ஏ.ஆர். சுகைல் (வயது -42) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, உறவினர்கள் 14 பேர் இணைந்து வடிரக வாகனம் ஒன்றில் விடத்தல் தீவு பெரிய மடு கிராமத்திற்கு பயணித்துள்ளனர். குறித்த வாகனம் கல்லாறு பாலத் திற்கு அண்மையாக வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி குடை சாய்ந்தது.

இச் சம்பவத்தில் மூவர் பலியானதுடன் 11 பேர் காயம் அடைந்தனர்.

காயமடைந்த அனைவரும் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். அத்துடன் மூவரின் சடலங்களும் மன்னார் பொது வைத்திய சாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டதுடன் விபத்து தொடர்பான [illegible] கொண்டனர். (2-9)

# வாய்த்தர்க்கம் ஏற்பட்டு வாள்வீச்சில் முடிந்தது

## ஜெயபுரத்தில் சம்பவம்

(மல்லாவி)

குடும்பத்தகராறு காணமாக வாள் வீச்சிற்கு இலக்கான குடும்பஸ்தர் முழங்காவில் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் காலை பூநகரி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஜெயபுரம் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இதில் பல்லவராயன்கட்டு சோலைப்பகுதியைச் சேர்ந்த கு.கதிரவேற்பிள்ளை (வயது-48 ) என்ற குடும்பஸ்தரே கழுத்திலும் தோளிலும் வாள் வெட்டிற்கு இலக்கானவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

ஜெயபுரம் நகரப்பகுதியில் பட்டப்பகலில் மக்கள் தேவையின் நிமிர்த்தம் கூடியிருந்தவேளை இருவருக்குமிடையில் வாய்த்தகராறு மூண்டது.

வாய்த்தகராறு முற்றிய நிலையில் ஒருவர் மற்றைய நபர் மீது வாள் வீச்சினை மேற்கொண்டார்.

இதில் பிரஸ்தாப நபர் தோள் பகுதியிலும் கழுத்துப்பகுதியிலும் வாள்வெட்டிற்கு இலக்கானார்.

சம்பவம் தொடர்பில் தகவலறிந்த முழங்காவில் பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்ததுடன் வாள்வெட்டிற்கு இலக்கானவரை மேற்படி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். (2-15)

# பெரியமடு பிரதேசத்தில் காடழிப்பு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்

பெரியமடு பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோதமான காடழிப்பு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வன இலாகா திணைக்களம் தெரிவித்திருக்கின்றது.

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்டதாக பெரியமடு பிரதேசம் அமைந்திருக்கின்றது. குறித்த பெரியமடு பிரதேசத்தில் உள்ள காட்டுப் பகுதி சட்டவிரோத மாக அழிக்கப்பட்டு வருவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் படுகின்றன.

இந்நிலையில் குறித்த காட்டுப் பகுதியில் இடம்பெற்றுவந்த சட்டவிரோத நிர்மாணப் பணிகள் மற்றும் காடழிப்பு ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை குறித்த சம்பவங்களோடு தொடர்புடையோர் மீதான விசாரணைகளில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வன இலாகா திணைக்களம் தீர்மானித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (2-9)

valampuri002.pdf 1 7/21/2015 6:13:53 PM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த எனக்கு அடிக்கவுமில்லை நான் அடிவாங்கவுமில்லை-சுசில்

வேட்பு மனு ஏற்கப்படும் இறுதி தினத்திற்கு முதல் நாள் எவரும் எனக்கு அடிக்கவுமில்லை அடிவாங்கும் வகையில் நான் செயற்படவுமில்லை. பேஸ்புக்குகளிலும் இணைய தளங்களிலும் காணப்படுவது அப்பட்டமான பொய் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த நேற்று முன்தினம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கி உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஐ.ம.சு.முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிக்கும் பணி தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இதில் சகல தரப்பனரதும் அபிப்பிராயங்களை உள்ளடக்கவே நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன்படி முழுமையான தேர்தல் விஞ்ஞாபனத்தை இன்னும் ஒரு வாரத்தில் உத்தியோக பூர்வமாக வெளியிடுவோம்.

நாம் நாட்டுக்கு உயிர் கொடுப்போம்" எனும் தொனிப் பொருளைப் பிரதமர் ரணில் விக்கிரம்சிங்க, குடும்பத்திற்கு உயிர் கொடுக்கப்படுகிறது என விமர்சித்துள்ளார். எமக்கு அது பிரச்சினை இல்லை. உயிருள்ளவர்களால் தான் நாட்டுக்கு உயிர் கொடுக்கலாம். அந்த வகையில் பிரதமர் உயிரற்றவர் என்பதை எல்லா வகையிலும் வெளிப்படுத்தியுள்ளார். அதனால்தான் நாம் உயிருள்ள மனிதரைப் பிரதமராக்கப் போகின்றோம் என்றார்.

செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு முன்னாள் எம்.பி. சுசில் பிரேமஜெயந்த பதிலளிக்கையில்,

தேசிய அரசாங்கம் குறித்து நாம் பேசவில்லை. ஐ.தே.கவினர்தான் தேசிய அரசாங்கம் குறித்து பேசி வருகின்றனர். அவர்களால் தனித்து நின்று ஆட்சியமைக்க கூடிய பெரும்பான்மையை பெற முடியாது என்பதை அவர்கள் முன்கூட்டியே அறிந்து கொண்டிருக்கின்றனர். அதனால்தான் அவர்கள் தேசிய அரசாங்கம் குறித்து பேசி வருகின்றனர்.

ஆனால் ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடைபெறும் தேர்தலில் நாம் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சி அமைப்போம். அதற்கான நம்பிக்கை எம்மிடமுள்ளது. எமக்குத் தேசிய அரசாங்கம் தேவையற்றது. 2010இல் பெற்ற வெற்றியை நாம் பெறுவோம் என்றும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அரசசார்பற்ற நிறுவனமொன்று அண்மையில் நுகேகொடவில் கூட்டமொன்றை நடத்தியது. அக்கூட்டத்தில் உரையாற்றிய ஒருவர், சுசில் பிரேமஜெயந்தவுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேட்பு மனு தாக்கல் செய்யும் இறுதி தினத்திற்கு முதல் நாள் தாக்கியதாகவும் அதனாலேயே அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், இத் தாக்குதலுக்குப் பதில் தாக்குதல் நடத்தவென சுசிலுக்கு பிள்ளைகள் கிடையாதா எனக் கேள்வி எழுப்பினார்.

இணையத்தளங்களிலும், பேஸ்புக்குகளிலும் உள்ள அப்பட்டமான பொய் செய்தியை ஒரு சொற்பொழிவில் பிரதான கருப்பொருளாகக் கொண்டு பேசியதையிட்டு நான் பெரிதும் கவலை அடைகின்றேன்.

எனக்கு எவரும் அடிக்கவுமில்லை அப்படி அடிக்க வேண்டிய தேவையும் கிடையாது. அவ்வாறு செயற்படுபவன் நானல்லன். நான் நள்ளிரவுக்கு பின்பு வைத்தியசாலைக்கு சென்று மறுநாள் காலையில் வந்து விட்டேன். வேட்பு மனுவையும் சமர்ப்பித்தேன். அதனால் பொய் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு உரையாற்றாதீர்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன் என்றும் குறிப்பிட்டார். (3-7)

# ஜனாதிபதியின் உரையைக் கேட்டபோது கெட்டவார்த்தையே வாய்க்குள் வந்தது

## ஜனக பண்டார ஆவேசம்

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி வெற்றிக்கு தலையிட மாட்டேன் என கூறி அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டிற்கு உரையாற்றிய போது மனதில் கெட்டவார்த்தைகளே வாய்க்குள் வந்ததாக சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தம்புள்ளை பிரதேசத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியினால் ஆற்றிய உரையினை உடனடியாக இரத்துச் செய்துகொள்ள வேண்டும் எனவும் அவ் உரையினை வன்மையாக கண்டிப்பதாக கூறப்படும் யோசனை இதன்போது ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை உயிராக பாதுகாக்க வேண்டும் எனவும் கட்சிக்கு பாதிப்பு ஏற்படுமென்றால் எந்த ஒரு முடிவுக்கும் வருவதற்கு தான் தயார் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் ஆற்றிய உரையினை கேட்டுக் கொண்டிருந்த போது தனக்கு கெட்டவார்த்தை வாய்க்குள் வந்ததாக ஜனக பண்டார மேலும் குறிப்பிட்டுள்ளார். (3-7)

# 02 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
04.08.1947

இறைவன் அடியில்
22.07.2013

எமது குடும்ப குலவிளக்கு
The Beacon of Our Family

அமரர் திருமதி விஜயலக்ஷ்மி
சோதிலிங்கம்

அவர்களின்
திதி வெண்பா
சீரோங்கும் விஜயாண்டில்
ஆடித்திங்கள் பூரணையில்
பேரேந்தும் "விஜயலக்ஷ்மி"
யெனும்சோதி- பூர்புகழும்
அருட்சோதி யாழ்.நாச்சிமார் அம்மனென்னும்
பேரொளியில் கருத்துடனே கலந்ததென் றறி!

76, கண்டி வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

A. சோதிலிங்கம்
(கணவர்)

# 45 ஆம் நாள் நீங்காத நினைவில்



அமரர் கந்தசாமி
திருவருட்செல்வன்
(றஜி)
(பனிக்கன்குளம், மாங்குளம்)

கண்ணீருக்கு தடை போட்டது போல
உன் நினைவுகளுக்கு தடை போட முடியவில்லை
நினைவுகளை மட்டும் நிறையவே - தந்துவிட்டு
நீர் எங்கு சென்றீரோ

தோற்றம் : 1986.08.10
மறைவு : 2015.06.08

கடந்த 08.06.2015 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு எல்லா வகையிலும் உதவியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்து இறுதிவரை இணைந்து நின்ற உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று 22.07.2015 (புதன்கிழமை) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பனிக்கன்குளம்
மாங்குளம்.

(1203)

அம்மா, அப்பா, சகோதரர்கள்,
மகன் :- பாணுசன், மருமக்கள்.

# பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

குழந்தைகளைப் பராமரிப்பதற்கான விடுதி மேற்பார்வையாளர்- பெண் மட்டும்

**தகைமைகள்:**

1. க.பொ.த.சாதாரண தரத்திற்கு குறையாத கல்வித் தகைமை
2. அரச பதவிகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்கள், ஏனைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பராமரிப்புத் துறையில் அனுபவம் மிக்கவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பித்தல் விரும்பத்தக்கது.
3. வயதெல்லை-35-65
4. விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும் இல்லக் குழந்தைகளை அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து சைவ நெறி ஒழுக்கத்திற்கு அமைவாக வழிப்படுத்தும் ஆற்றல், தியாக சிந்தனை, சம்பளத்துக்காக மட்டும் வேலை செய்பவராக இல்லாது சமூக அர்ப்பணிப்புமிக்க உணர்வோடு கடமை புரிவோர் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு:** சம்பளம் மாதம் ரூபா 18,000/-ற்கு குறையாது வழங்கப்படும். கடமையின் ஈடுபாட்டிற்கேற்ப பின்னர் அதிகரிக்கப்படும். உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.

**சாரதி:-**

**தகைமைகள்**

1.சகல வாகனங்களும் செலுத்தக்கூடிய சாரதி அனுமதிப்பத்திரம் (Heavy Vehicle License-AD வகை) கொண்டிருத்தல்.

2.மலைநாடு, கண்டி, கொழும்பு உட்பட இலங்கையின் அனைத்து பிரதேசங்களிலும் பஸ் உட்பட கனரக வாகனம் செலுத்தக்கூடிய அனுபவமும் சேவை மனப்பான்மையும்.

3. விண்ணப்பதாரர் 21 வயதுக்கு மேற்பட்டவராகவும் 60 வயதுக்குட்பட்டவராகவும் நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:-** கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். உணவு, தங்குமிடம் என்பனவும் சாரதி உடைகளும் இலவசமாக வழங்கப்படும்.

**மிருதங்க வித்துவான்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் மிருதங்க வித்துவான் பட்டத்தினைப் பெற்றிருத்தல் அல்லது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அல்லது

வட இலங்கை சங்கீத சபையினால் வழங்கப்பட்ட ஆசிரியர் தர சான்றிதழ் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆண் பாலார் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

**குறிப்பு:-** சம்பளம் மாதம் ரூபா 18,000/-ற்கு குறையாது வழங்கப்படும். கற்பித்தலின் திறனுக்கேற்ப பின்னர் அதிகரிக்கப்படும். உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.

**● கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் எந்த பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**விண்ணப்ப முடிவுத் திகதி:-28.07.2015**

**குறிப்பு:-** மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் சகலரும் கிழமை நாட்கள் மட்டுமன்றி சனி, ஞாயிறு ஆகிய நாட்களிலும் பணியாற்ற வேண்டும். நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து சேவைபுரிய விருப்பம் கொண்டவர்கள் மட்டும் தங்களின் சுயவிபரமடங்கிய விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு 28.07.2015ற்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:-**
**தி.இராசநாயகம், தலைவர், மகாதேவா சுவாமிகள்**
**சிறுவர் இல்லம்,ஜெயந்திநகர், கிளிநொச்சி.**
**தொலைபேசி இல.077 060 4950, 021 492 3118**
**மின்னஞ்சல் முகவரி:-rasa46@yahoo.com**

(1642)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1194

## விமர்சனம்



அன்று ராஜ சபை கூடிய போது அரசர் மகிழ்ச்சிகரமான அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

"தன் பிறந்த நாள் அன்று கவிதை போட்டி ஒன்று நடைபெறுகிறது. இந்த போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறுபவர்களுக்கு ஆயிரம் தங்கக் காசுகளும், வீடும், நிலமும் வழங்க இருக்கிறேன். அயல்நாடுகளிலிருந்தும் பல கவிஞர்கள் வர இருக்கின்றனர்," என்றார் அரசர்.

அதைக் கேட்டு அனைவரும் மகிழ்ச்சியடைந்த போது பசுபதி மட்டும் அமைதியாக இருந்தான்.

தான் போட்டியில் கலந்து கொண்டால் நிச்சயமாக வெற்றி பெற முடியாது.

காரணம், அந்த விமலன் விமர்சனம் செய்தே தன்னை அவமானப்படுத்துவான், தோல்வி அடைந்தால் தன் ஆஸ்தான கவிஞர் பதவி போய்விடும்.

இப்படி பலவிதமான சிந்தனையில் வேர்த்துப் போனான் பசுபதி. அரசனின் பிறந்த நாள் வந்தது.

நாடே விழாக்கோலம் பூண்டது.

மக்கள் அனைவரும் புத்தாடை அணிந்து மகிழ்ச்சியாக இருந்தனர்.

போட்டியில் கலந்து கொள்ள வேண்டுமா வேண்டாமா என்று முடிவெடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான் பசுபதி.

வருவது வரட்டும்என்று போட்டியில் கலந்து கொள்ள முடிவு செய்தான் பசுபதி.

கவியரங்கம் ஆரம்பமாகிவிட்டது. அரசர் சிம்மாசனத்தில் அமர்ந்துவிட்டு கவிஞர்களை வாழ்த்தினார்.

பிறகு, "கவிதை போட்டியை ஆரம்பிக்கலாம்," என்றார்.

பல கவிஞர்களும் தங்கள் கவிதைகளை அழகாக பாடினர். அதைக் கேட்டு அரசர் மகிழ்ச்சி அடைந்தார்.

அனைத்தையும் கவனித்துக் கொண்டு மௌனமாக இருந்தான் விமலன்.

அடுத்தபடியாக ஆஸ்தான கவிஞன் பசுபதி கவிதை பாடுவார் என்ற அறிவிப்பு வந்த போது விமலன் சிரித்தான்.

அதைக் கவனித்த பசுபதிக்கு கடும் கோபம் வந்தது.

ஆனால், கோபத்தை வெளியே காட்டிக்கொள்ளாமல் இருந்தான்.

பசுபதி எழுந்து அரசனை வணங்கிவிட்டு கவிதை பாட தொடங்கினான்.

அரசர் உட்பட அனைவரும் பசுபதியை பாராட்டினர்.

விமலன் அந்தக் கவிதையை அக்கு வேறு ஆணி வேறாக பிரித்து விமர்சனம் செய்து அனைவரையும் வியக்க வைத்தான்.

முதல் பரிசு பசுபதிக்கே கிடைத்தது.

பரிசு பெற்றாலும் அவன் மனதில் விமலன் மீது இருந்த ஆத்திரம் தணியவில்லை.

பழிவாங்கும் எண்ணம அவனை ஆட்டி வைத்தது.

அவன் ஒரு வாளுடன் வீட்டை விட்டு ஓடினான்.

"விமலனை கொன்றுவிட்டுத் தான் மற்றவைகளை கவனிப்பேன்" என்று மனதுக்குள் கூறிக் கொண்டே அவன் வீட்டை நோக்கி ஓடினான்.

யார் கண்களிலும் படாமல் விமலன் வீட்டு பூங்காவில் ஒளிந்து கொண்டான்.

அப்போது விமலன் தன் மனைவியுடன் பேசும் சப்தம் கேட்டது.

அவன் மெதுவாக ஜன்னலை அடைந்து வீட்டுக்குள் எட்டி பார்த்தான்.

"இன்னிக்கு கவிதை போட்டியில் பரிசு கிடைத்தது. யாருக்கு?" என்றாள் மனைவி.

"வேறு யாருக்கு, நம்ம பசுபதிக்கு தான்," என்றான் விமலன்.

"பசுபதிக்கு அற்புதமான திறமை இருப்பதாக நீங்களே சொல்கிறீர். பிறகு ஏன் தினமும் அவர் கவிதை களை விமர்சனம் செய்து கொண் டிருக்கிறீர்கள்?" என்றாள் மனைவி.

"அடியே! பசுபதி அற்புதமான கவிஞன்தான். அவன்திறமையை மேலும் சிறப்பாக்குவதற்காகத் தான் அப்படி விமர்சனம் செய்கிறேன்.

என் விமர்சனத்துக்கு பயந்து அவன் மேலும் சிறந்த கவிதைகளை படைக்க வேண்டும் என்று கடும் முயற்சி செய்து கொண்டிருக்கிறான். அந்த முயற்சி அவனுக்கு பெரும் வெற்றியை தேடித்தருகிறது.

இன்று அவனிடம் போட்டி போட்டு வெற்றி பெறும் தகுதி யாருக்கும் கிடையாது. இப்போது, நான் ஏன் விமர்சனம் செய்கிறேன் என்ற கேள்விக்கு விடை கிடைத்துவிட்டதா" என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தான்.

வாளுடன்விமலனை கொல்ல வந்த பசுபதி இந்த உரையாடலைக் கேட்டு அதிர்ச்சியடைந்தான்.

இப்பேற்பட்ட உயர்ந்த உள்ளம் கொண்டவரை தான் தவறாக நினைத்துக் கொலை செய்யும் அளவுக்கு வந்துவிட்டோமே என்று நினைத்த போது அவனுக்கு அழுகையே வந்தது.

அவன் அழுது கொண்டே ஓடிச் சென்று விமலனின் கால்களில் விழுந்து மன்னிப்பு கேட்டான்.

"அய்யா! நான் உங்களை தவறாக நினைத்தேன். இந்த உயர்ந்த உள்ளத்தை புரிந்து கொள்ள முடியாமல் போயிற்று. என்னை மன்னித்து விடுங்கள். அந்த பரிசு உங்களை தான் சாரும். அதைப் பெறும் தகுதி எனக்கு இல்லை," என்று கூறி அழுதான் பசுபதி.

**நீதி : நம்மை விட பெரியவர்கள் நம்மை விமர்ச்சிக்கும் போது அதைக் கண்டு ஆத்திரப்பட வேண்டாம். பெற்றோர்களும் ஆசிரியர்களும் தம்மை குறை கூறும் போது கோபம் கொள்ளத் தேவையில்லை. நம் மீது இருக்கும் பற்றினால்தான் அவர்கள் அவ்வாறு கூறுகின்றனர். புரிந்ததா?** (முற்றும்)



## 07.2015 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1499 - புனித உரோமப் பேரரசின் முதலாம் மாக்சிமிலியனின் படைகளை சுவிஸ் படைகள் டொனார்க் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில வென்றன.
- 1587 - வட கரோலினாவின் ரோனோக் தீவில் ஆங்கிலேயர்களின் இரண்டாவது தொகுதி குடியேற்றவாதிகள் வந்திறங்கினர்.
- 1812 - வெல்லிங்டன் பிரபு தலைமையிலான பிரித்தானியப் படைகள் ஸ்பெயினில் சலமாங்கா என்ற இடத்தில் பிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1823 - யாழ்ப்பாணத்தில் டாக்டர் டானியல் வோரன் புவர் தலைமையில் அமெரிக்க மிஷனின் பட்டிக்கோட்டா செமினறி திறக்கப்பட்டது.
- 1916 - கலிபோர்னியா, சான் பிரான்சிஸ்கோவில் ஊர்வலமொன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 10 பேர் கொல்லப்பட்டனர்.
- 1933 - வைலி போஸ்ட் 15,596 மைல்களை 7 நாட்கள், 18 மணி, 45 நிமிடங்களில் உலகைக் கடந்து தனியே உலகைச் சுற்றி வந்த முதல் மனிதன் என்ற பெருமையைப் பெற்றார்.
- 1944 - போலந்தின் தேசிய விடுதலைக்கான குழு நாட்டில் சீர்திருத்தங்களையும், நாசிகளுக்கெதிரான போரை முன்னெடுத்துச் செல்லவும், தொழிற்சாலைகளை தேசிய மயமாக்கும் திட்டத்தையும் அறிவித்தது. போலந்தில் கம்யூனிச ஆட்சி ஆரம்பமானது.
- 1962- நாசாவின் மரைனர் 1 விண்கலம் ஏவப்பட்டு சில நிமிடங்களில் கட்டுக்கடங்காமல் சென்றதால் அது அழிக்கப்பட்டது.
- 1999- விண்டோஸ் லைவ் மெசன்ஜர் மைக்ரோசாப்டினால் வெளியிடப்பட்டது.
- 2003- ஈராக்கில் சதாம் உசேனின் புதல்வர்கள் குவாசி, உதய் இருவரும் அமெரிக்க இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். இவர்களுடன் சதாமின் 14- வயதுப் பேரனும் கொல்லப்பட்டான்.
- 2009- சூரிய கிரகணம், ஜூலை 22: 21 ஆம் நூற்றாண்டின் மிக நீண்ட சூரிய கிரகணம் நிகழ்ந்தது. வட இந்தியா, நேபாளம், வங்காள தேசம் போன்ற இடங்களில் முழு கிரகணம் ஏற்பட்டது.

### பிறப்புகள்


- 1923 - முக்கேஷ், இந்தியப் பாடகர் (இ. 1976)
- 1983 - நுவன் குலசேகர, இலங்கைத் துடுப்பாட்ட வீரர்

### இறப்புகள்

- 1832 - இரண்டாம் நெப்போலியன், பிரான்சின் பேரரசன் (பி. 1811)
- 1972 - டி. எஸ். பாலையா, தமிழ்த் திரைப்பட நடிகர் (பி. 1914)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கேள்விக்குறியாகும் இலங்கையின் எதிர்காலம்!





இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டி யிடுவது தொடர்பில் எடுத்துள்ள தீர்மானமானது பெரியளவில் அதிர்ச்சி தரக்கூடிய ஒன்றல்ல.

ஜனவரி 2015 இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மகிந்த ராஜபக்ச எதிர்பார்த்திராத அளவுக்கு தோல்வியடைந்திருந்தார். இந்நிலையில தற்போது மீண்டும் தான் அரசியலில் நிலைப்பதற்காக தனது ஆதரவாளர்களை ஒன்று சேர்த்து வருகிறார்.

இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்ததுடன் வரும் மாதம் தேர்தல் இடம்பெறவுள்ளதாகவும் அறி வித்தார். இந்த வாய்ப்பைத் தற்போது ராஜபக்ச தனதாக்கிக் கொண்டுள்ளார்.

சிறிசேனவால் தலைமை தாங்கப் படும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி யானது ராஜபக்சவைத் தனது வேட்பாள ராக நிறுத்தவுள்ளதாக திடீரெனத் தீர்மானித்தமையானது ஆச்சரியமளிக்கக் கூடிய ஒன்றாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் ஒன்றுகூடிய எதிரணியின் ஆதரவுடனேயே கடந்த ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்சவைத் தோற்கடித்து ஜனாதிபதியாகப் பதவியேற்ற சிறிசேன தொடர்ந்தும் மகிந்தவின் வேட்பாளர் நியமனம் தொடர்பில் அமைதி காத்துள்ளார்.

இந்நிலையில், 'ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் தேர்தல் பரப்புரைகளின் தலைவராக மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ளார். இவரது இந்த நியமனமானது ஜனாதிபதி சிறிசேனவின் ஆசியுடனும் ஆலோசனையுடனும் இடம்பெற்றுள்ளது' என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பொதுச் செயலர் சுசில் பிறேமஜயந்த தெரிவித்திருந்தார்.

ஐ.ம.சு.கூட்டணிக்குள் செயற்படும் ராஜபக்சவின் ஆதரவாளர்களின் அழுத்தத்தின் பேரிலேயே ராஜபக்ச வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது சிறிசேனவின் நடவடிக்கைகள் மூலம் உறுதியாகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் ஐ.ம.சு.கூட்டணியினதும் தலைமைப் பொறுப்பை சிறிசேன வகிக்கின்ற போதிலும் இவற்றுள் ராஜபக்சவின் ஆதரவாளர்கள் அதிகாரம் செலுத்துவதால் சிறிசேனவால் இவ்விரண்டையும் முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெருமளவான உறுப்பினர்கள் ராஜபக்சவின் விசுவாசிகளாவர். பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடும் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை எதிர்த்துப் போட்டியிடத்தக்க ஒருவர் ராஜபக்ச மட்டுமே என்பது இக்கட்சி உறுப்பினர்களின் கருத்தாகும்.

சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்று கடந்த ஆறு மாத காலத்தில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் ஐ.ம.சு.கூட்டணியையும் ஒன்றுபடுத்துவதில் சிறிசேன பல்வேறு சவால்களைச் சந்தித்துள்ளார். ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட பல்வேறு அதிகாரங்களை நீக்குவதற்கு சிறிசேன முயற்சிகளை முன்னெடுத்த போதிலும் இவ ரது சொந்தக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட இதனை எதிர்த்தனர்.

குறிப்பாக இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களை மட்டுப்படுத்துதல் மற்றும் இரண்டு தடவைகள் மட்டுமே ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியும் போன்றன தொடர்பில் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்காக சிறிசேன பல்வேறு இடர்களைச் சந்தித்தார். இதற்கு ஐ.ம.சு.கூட்டணி உறுப்பினர்கள் கூட தமது எதிர்ப்பைக் காண்பித்தனர். இறுதியில் சிறிசேன இவற்றை வெற்றி கொண்டு சட்டத்தில் மாற்றங் களைச் செய்தார்.


ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரையின் போது சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இவரது சக உறுப்பினர்களின் ஆதரவு கிட்டாமையே காரணமாகும். நாட்டில் மீளிணக்கப்பாட்டைக் கட்டியெழுப்புவதாக சிறிசேன வாக்குறுதி வழங்கியிருந்தார்.

ராஜபக்ச மீண்டும் நாடாளுமன்றிற்குத் தெரிவானால் தற்போதைய சூழலுக்கு எதிராகவே செயற்படுவார். ராஜ பக்சவின் சிங்கள தேசியவாத அரசியற் கோட்பாடுகள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியளிக்காத போதிலும், பௌத்த பெரும்பான்மையினர் மத்தியில் ராஜபக்சவின் பௌத்த தேசியவாதக் கோட்பாடுகள் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளன.

தற்போதைய அரசாங்கம் தேசிய பாதுகாப்பைக் குழிதோண்டிப் புதைப்பதாகவும் பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிப்பதாக வும் ராஜபக்ச தனது வேட்பாளர் அறிவிப்பு உரையில் குறிப்பிட்டிருந்தார். இது சிங்களப் பெரும்பான்மையினர் மத்தியில் ராஜபக்சவின் ஆதரவை அதிகரிப்பதற்கான ஒரு கருவியாக அமைந்துள்ளது. சிறிசேனவின் அரசியல் யாப்பு சீர்திருத்தங்களுக்கு சவாலாக அமையும்.

இலங்கையின் போருக்குப் பின்னான சவால்கள் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை இராணுவத்தினரால் உள்நாட்டுப் போர் வெற்றி கொள்ளப்பட்ட போதிலும், அரசியல் மற்றும் இன வடுக்கள் இன்னமும் எஞ்சியுள்ளன. எல்லாத் தரப்பினர்களுக்கும் நிலையான மீளிணக்கப்பாட்டை உருவாக்குவதிலேயே இந்த நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது.

-தி இந்து-





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து-193

...தண்டித்தல் என்பதும் ஒரு சமூக தர்மம்தானே! நீ ஏன் தண்டிக்கத் தலைப்படவில்லை?

சாமி! பல்லுக்குப் பல்லுன்னா ஒலகமே பொக்கவாயாப் போயிரும். கண்ணுக்குக் கண்ணுன்னா ஒலகமே குருடாப் போயிரும். யாராச்சும் ஒருத்தர் நிறுத்தியாகணுமில்ல; நான் நிறுத்திட்டேன். அப்படியே கண்ணு மூடி நெத்தியில நெருப்பெரிய விட்டாரு சாமியாரு. ஞானமார்க்கங்களின் சாரமாயிற்றே இந்த வார்த்தை! எப்படிக் கற்றாள் இந்த ஏடறியாப் பாமரச்சி?

கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல் என்று கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். உங்களை வலக்கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்.

மத்தேயு நற்செய்தி இந்த மாதரசிக்கு எப்படிப் பரிச்சயமாயிற்று?

சாமியார் கண்ணத் தொறக்க, கையில இன்னொரு கவளம் புழிஞ்சு வச்சிருந்தா கருவாச்சி.

உன் வாழ்வில் நீ தோற்றுப் போன தாய் உன்னை வாழவிடாதவர்கள் சொல்லலமில்லையா?

எப்பிடி சாமி சொல்லுவாக? நான் ஊருக்கெல்லாம் முந்தி விரிச்சு அவுசாரியாப் போயிருந்தாத் தோத்துப் போயிருப்பேன். எம் புருசன அருவாள எடுத்து வெட்டிட்டுத் தூக்குக்குப் போயிருந்தாத் தோத்துப் போயிருப்பேன். என் வழிக்கு வராத மகனக் கொல்ல எலி மருந்து வச்சிருந்தா நான் தோத்துப் போயிருப்பேன். இல்ல ஆத்துல கெணத்துல விழுந்து செத்திருந்தா நான் தோத்துப் போயிருப்பேன். செயிக்கிறதுன்னா என்னா சாமி? எல்லாரையும் அழிச்சிட்டு ஒரு ஆளு மட்டும் பொழைக்கிறதா செயிக்கிறது? எல்லாரையும் பொழைக்கவிட்டுத் தானும் பொழைக்கிறதுதானே செயிக்கிறது?



ஆமாம் ஆமாம் சன்னமாத் தலையாட்டிக்கிட்டாரு சாமியாரு.

இளம்வயதில் கணவனால் வீசியெறிப்பட்டவள் தபசிகளும் யோகிகளும் கடக்க முடியாத இந்திரியங்களை எப்பிடி வென்றெடுத்தாய் மகளே?

நானும் மனுசிதானே சாமி. கெட்ட ஆசைக அப்பப்ப வந்து எம் முந்தானையில முள்ளுப் போட்டு இழுத்திருக்குக. ஏய் பக்கிகளா! சும்மா கெடங்கன்னு அப்பப்ப அமட்டி வச்சிருக்கேன். இன்னொண்ணு சாமி எதை மறக்காம இருக்கப் பார்க்கிறீகளோ அதுல நல்லதையே நெனச்சு வாங்க; லேசுல மறக்காது. எதை மறக்க நெனைக்கிறீகளோ அதுல கெட்டதையே நெனச்சு வாங்க; பொட்டுன்னு மறந்துபோயிரும்.

ஒருநான் நெனச்சேன் சாமி. இந்த ஆம்பள பொம்பள சொகம் இருக்கே, இது நல்ல கழுதையா இருக்க முடியாதுன்னு நெனச்சேன். கடவுள் வார வழியும் கழிவுத் தண்ணி வாழ வழியும் ஒரே வழியாவா இருக்க முடியும்? இருக்காதுன்னு நெனச்சேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக்கல்வி அலுவலகங்களில் அபிவிருத்திக்குழுக் கூட்டம்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

**வடக்கு மாகாணத்தில் கல்வி அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு ஒவ்வொரு வலயக்கல்வி அலுவலகங்களிலும் அபிவிருத்திக்குழு கூட்டம் நடைபெற்று வருவதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகணத்தில் 12 கல்வி வலயங்கள் அமைந்துள்ளன. அதில் கல்வி அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளை விரிவாக செய்து முடிப்பதற்காக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

இந்த அபிவிருத்தி குழு கூட்டத்தில் நிர்வாகம், திட்டமிடல், முகாமைத்துவம், கணக்கீடு, ஏனைய பொதுவான விடயங்கள் என 5 பிரிவுகளைக் கொண்ட விடயங்கள் கலந்துரையாடப்படும்.

அதில் நிர்வாகம் தொடர்பான விடயங்களில் பதவி உயர்வு, உள்ளீர்ப்பு, சுயவிபரக் கோவை, அதிபர் பதவி உயர்வு, சம்பள விடயம், இடமாற்றம், நியமனம், ஆளணி, ஓய்வூதியம், வாகனம், சுகாதார சேவை, பாடசாலை விஜயங்கள் போன்ற விடயங்களும். திட்டமிடல் தொடர்பான விடயங்களில் கல்வி தொடர்பான கருத்திட்டம், முன்னேற்ற அறிக்கை தொடர்பாக கலந்துரையாடப்படும்.

முகாமைத்துவம் தொடர்பான விடயங்களில் பொதுப்பரீட்சை, தவணைப் பரீட்சை, பாடசாலை விடயம், சுகாதார விடயங்களும். கணக்கீடு தொடர்பான விடயங்களில் நிதி, நடைமுறை செலவீனம், மூலதன செலவு, சம்பள நிலுவைகள், இடர்கடன், வருடாந்த இருப்பு கணக்கெடுப்பு, வங்கி கணக்கிணக்க கூற்று தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படும்.

இச் செயற்பாடானது கடந்த மே மாதம் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் ஜூலை மாதத்துடன் அனைத்துவலயங்களிலும் நடைபெற்று முடிவடையும்.

அதனை தொடர்ந்து ஆரம்பத்தில் இருந்து ஒவ்வொரு கல்வி வலயத்திலும் தொடர்ச்சியாக நடைபெற்று புதிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்படும். அத்துடன் தீர்வுகளும் பெற்றுக் கொள்ளப்படும்.

இந்த அபிவிருத்திக் குழு கூட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கல்வி முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடல்களை மேற்கொள்வார்கள்.

இந்த கூட்டத்தை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தி வருவதால் வடக்கு மாகாண கல்வி நடவடிக்கைகளில் ஒரு சீரான அமைப்பை ஏற்படுத்துவதோடு கல்வியில் முன்னேற்றத்தையும் அடைய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-9)

## நிர்வாகத்தெரிவு

மாங்குளம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் இவ்வாண்டிற்கான புதிய நிர்வாகத்தெரிவு கூட்டம் நேற்று முன்தினம் மாலை மாங்குளம் முன்னாள் கிராம அபிவிருத்தி சங்க செயலாளர் தலைமையில் மாங்குளம் கிராம அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது முன்னைய சங்கம் ஆற்றிய சேவைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு அந் நிர்வாகம் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. அந்த வகையில் தலைவராக பா.பார்த்தீபன், செயலாளராக அ.சுஜாத்தன் பிரசாத், பொருளாளராக ச.அனஸ்ராஜ் ஆகியோர் தெரிவாகினர்.

நிர்வாக உறுப்பினர்களாக க.நாகேந்திரகுமார், அ.பார்த்தீபன், த.ஆனந்தராஜா, ஜோ.ஜெயரூபன், ரா.சத்தியசீலன், தி.பிரியந்தன், ஏ.பிரதீபன் , கை.சிவானந்தம் ஆகியோரும் கணக்கு பரிசோதகராக திருநாவுக்கரசு தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட இளம் சமூகத்தினரை மக்களுக்கான சிறந்த சேவையை வழங்குமாறும் மாங்குளத்தின் அபிவிருத்திக்காக உழைக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (2-281)

## வீதிகளின் இருமருங்கும் பற்றைகளால் சூழ்ந்துள்ளன



(முள்ளியவளை)

முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரியைச் சுற்றியுள்ள வீதிகளின் இரு மருங்கிலும் பற்றைகள் வளர்ந்து வீதியால் பயணிப்போருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இருமருங்கிலும் காணப்படும்பற்றைகள் வழியாக பயணிக்கின்ற மாணவர்கள், பொது மக்கள் விஷஜந்துக்களின் தாக்கத்திற்கு உட்பட வேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

வளர்ந்துநிற்கும்மரங்களின் கிளைகள் பயணிப்போருக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவும் சில வேளைகளில் உடல்களில் கீறல்கள் ஏற்படுவதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வீதிகள் அனைத்தும் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் பராமரிப்பிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமது தொழிலாளர்கள் மூலம் இப்பற்றைகளை வெட்டித் துப்புரவாக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென பொது மக்கள் கோருகின்றனர். (2-302)

## வீதிகள் செப்பனிடும் பணி ஆரம்பிப்பு


(கிளிநொச்சி)

வீதி அபிவிருத்தி திணைக்கள்தின் ஏற்பாட்டில் ஸ்கந்தபுரம் பகுதியில் 13 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் கோணாவிலிலிருந்து அக்கராயன் பிள்ளையார் கோவில் வரையான 6 கிலோ மீற்றர் வீதியும் அக்கராயன் வைத்தியசாலையிலிருந்து கரும்புத் தோட்டம் வரையான 7 கிலோமீற்றர் வீதியும் செப்பனிடப்பட்டு வருகின்றது. குறித்த வீதிகளின் புனரமைப்பின் மூலம் மாணவர்கள், பொதுமக்கள் எனத் பலதரப்பினர் நன்மையடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-272)




## டெனீஸ்வரனின் உப-அலுவலகம் மன்னாரில் திறந்து வைக்கப்பட்டது



(மன்னார்)

வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி அமைச்சரின் உப அலுவலகம் மன்னாரில் மக்களின் நலன் கருதி திறக்கப்பட்டுள்ளது. குறித்த அலுவலகம் நேற்று முன்தினம் மன்னார் புனித செபஸ்தியார் வீதியில், பொலிஸ் நிலையம் முன்பாக வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அலுவலக பெயர்ப்பலகையினை மதத் தலைவர்கள் கூட்டாக இணைந்து திறந்து வைத்தனர்.

இதில் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெலிசியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதேவேளை வீதி அபிவிருத்தி திணைக் களத்தின் மாகாணபணிப்பாளர் டிசிவராசலிங்கம்,மாகாண மீன்பிடி உதவிப்பணிப்பாளர் திருமதி. அ.ஷகிலா பானு மற்றும் மன்னார் வலய கல்வி பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். மக்களது நலன் கருதியே தாம் மிகுந்த அக்கறையுடன் இவ் உப அலுவலகத்தை திறந்துள் ளதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

தாம் மதத்தையோ அல்லது இனத்தையோ வைத்து சேவை செய்வதில்லை என்றும் தனது சேவை வடக்கு மாகாணத்தில் உள்ள தேவை உள்ளவர்களுக்கு சென்றடைய வேண்டும் என்றே சிந்திப்பதாகவும் அவர் கூறினார். (2-9)

### சைவ சமய பாட பரீட்சைக்கு

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

(முல்லைத்தீவு)

விவேகானந்தசபை நடத்தும் அகில இலங்கை சைவசமயப் பாடப் பரீட்சை இவ்வாண்டு கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் இலவசமாக நடத்தப்படவுள்ளது.

மேற்படி சபையின் 112 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் அண்மையில் இடம் பெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற அனர்த்தங்களினால் இம்மாவட்டங்களில் பரீட்சை பல ஆண்டுகளாக நடைபெறவில்லை. மீண்டும் இம் மாணவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்குவதற்கு சபை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

ஆகவே இத்தீர்மானத்துக்கமைய இவ்விரு மாவட்டங்களிலுமுள்ள பாடசாலைகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

மாணவர் விபரங்கள் வகுப்பு ரீதியாகத் தனித்தனித் தாள்களில் எழுதுவதுடன் பாடசாலையுடன் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்களையும் அறியத் தர வேண்டும்.

எமது சபையின் யாழ்ப்பாணத்திற்கு பொறுப்பான பரீட்சைப் பொறுப்பாளர் ரி.திருஞானசம்பந்தருடன் தொடர்புகொள்வதன் மூலம் தகவல்களைப் பெற முடியும்.

இதற்கான தொலைபேசி இலக்கம் 077 727 9426 என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பரீட்சை நவம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

## நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

சட்ட உதவி ஆணைக்குழுவின் நடமாடும் சேவை இன்று புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு உருத்திரபுரம் வடக்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

இந்நடமாடும் சேவையில் இலவச சட்ட உதவிச் சேவையினை பெற்றுக் கொள்ள முடியுமென சட்ட உதவி ஆணைக்குழுவின் கிளிநொச்சி அலுவலகம் அறிவித்துள்ளது. (2-272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த என்ற பூதத்தினை மீண்டும் ஆட்சியிலேற்ற மக்கள் தயாரில்லை

## சரத்பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷ என்ற பூதத்தை கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி போத்தலில் அடைத்து மூடி போட்டு மூடியதாகவும, எனினும் கட்சிக்காரர்கள் மூடியை மீண்டும திறந்து விட முயற்சிப்பதாக பீல்ட்மார்ஷல சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**



அவிசாவளை பிரதேசத்தில இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஒருவராலும் தோல்வியடைய்ய செய்ய முடியாதென கூறிய மகிந்த ராஜபக்ஷவை நாங்கள் தோற்கடித்தோம்.

30 வருட யுத்தத்தினை ஒழுங்கான திட்டத்தின் மூலம இரண்டு வருடங்களில் நிறைவடைய செய்தோம்.

யுத்தத்தை நிறைவடைய செய்தமையினால் சிறை வாழ்க்கை ஒன்றையும் மகிந்த எனக்கு ஏற்படுத்தி கொடுத்தார்.

சிறைச்சாலையில் இருந்து வெளியேறியதும் அடுத்த திட்டமாக மகிந்த ராஜபக்ஷவை வீட்டிற்கு அனுப்ப திட்டமிட்டேன்.

அந்தத் திட்டத்திற்கமைய 03 மாத செயற்பாடுகளின் மூலம் அவரை வீட்டிற்கு அனுப்பி வைத்தேன்.

எதிர்வரும் 17ஆம் திகதி எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மகிந்த ராஜபக்ஷ என்ற பூதத்தை அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்கு இந்நாட்டு மக்கள் தயார் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (3-7)

# சஜின்வாஸ் குணவர்தனவின் விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு



பொதுச் சொத்துக்களை சட்டவிரோதமாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தனவின் விளக்கமறியல் எதிர்வரும் ஓகஸ்ட மாதம் 4ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சஜின் வாஸ் குணவர்தனவுக்கு எதிரான வழக்கு விசாரணை நேற்று இடம் பெற்றது. கொழும்பு கோட்டை நீதவான் பிரியந்த லியனகே இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

சுகயீனம் காரணமாக பிணை வழங்குமாறு கோரிய சஜின்வாஸ் குணவர்தனவின் மனுவை நீதவான் நிராகரித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான வாகனங்களை, சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில், நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 300 | 350 |
| தக்காளி | 120 | 140 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 100 | 80 | 100 | 80 |
| கரட் | 140 | 120 | 240 | 160 |
| பூசணி | 40 | 40 | 40 | 30 |
| புடோல் | 40 | 40 | 80 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 150 | 200 | 130 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 150 | 100 | 140 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 60 | 90 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 90 |
| பீற்றூட் | 160 | 80 | 120 | 120 |
| கறிமிளகாய் | 250 | 180 | 200 | 170 |
| முருங்கைக்காய் | 120-180 | 140 | 160 | 140 |
| போஞ்சி | 250 | 180 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 60 | 50 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 60 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 200 | 140 | – | 120 |
| வெங்காயப்பூ | 120 | 150 | 200 | 180 |
| முள்ளங்கி | 100 | 30 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 20 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 439

Search for people, places and things Nagendram Home

**நவாயினி சந்திரசேகரம்**

சந்தோஷமாக வாழ வேண்டும்
என்று நினைப்பதை விட
நிம்மதியாக வாழ வேண்டும்
என்று நினை
அதனை செயற்படுத்து
உன் வாழ்க்கை முழுவதும்
சந்தோஷசமாக இருக்கலாம்

**ரஜீத் இசிலின்**




**மதுரா சபாநாயகம்**


நீதிபதி : உனது கடைசி ஆசை என்ன?
குற்றவாளி : சரியாக வாதாடாமல் எனக்கு தூக்குத் தண்டனை கிடைத்ததற்கு காரணமான எனது வக்கீலையும் என்னுடன் தூக்கில் போட வேண்டும்



**சுலோச்சன் லோகன்**





**தர்மினி சிவராசா**




**விஜி சிவா**



மாடு முன்னாடி
போனா முட்டும்...



பிகர் பின்னாடி
போனா முட்டும்

இரண்டையும் மேய்க்கிறது
ரொம்ப கஷ்டம்

**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் தமிழரின் தீர்வு!

## லண்டனில் வடக்கு முதல்வர் ஆற்றிய உரை

...நடைமுறையில் உள்ள ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண முடியாது. இது பன்னெடுங்காலமாகத் தொடரும் சம்பவங்களால் நாம் கற்றறிந்த உண்மை.

எனினும், ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை நீடிக்கும் வரை, நிலையான சமாதானமோ, இதயசுத்தியுடனான இனநல்லிணக்கமோ ஏற்படாது எனத் தெரிந்தும், அதனை மாற்றுவதற்கு சிங்கள அரசியல் தலைவர்கள் தயாராக இல்லை.

சில நாட்களுக்கு முன்னர் இரு சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளின் தலைவர்கள் ஒற்றையாட்சி முறை மாற்றப்படாது என்று ஒரு உடன்பாட்டில் கையெழுத்திட்டதாகச் செய்தி வந்துள்ளது. அவர்களின் இந்த மனோநிலை மாறாத வரை அரசியலமைப்பிலோ அல்லது இனப்பிரச்சினைக்கான தீர்விலோ நல்ல மாற்றங்களை நாம் எதிர்பார்க்க முடியாது.

இதுவரை நடந்துள்ளவற்றைக் கருத்தில் கொண்டே எமது தலைமையின் கீழுள்ள வடமாகாண சபை, தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. தமிழ் மக்களுக்கான நீதியை அடைவதற்கான பாதையில் இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு என்று கருதப்படுகின்றது.

தமிழினத்துக்கு நிகழ்த்தப்பட்ட இன அழிப்புக்கு நீதி தேடும் போராட்டத்தில் சிங்கள முற்போக்கு சக்திகள் இணைவார்களானால் அது நிலையான ஒரு சமாதானத்தை இலங்கைத் தீவில் ஏற்படுத்துவதற்கான அரசியல் தீர்வுக்கு வழியமைக்கும். உண்மை தெரிந்தால்த்தான் உண்மையான நல்லிணக்கத்திற்கு வழிகோலலாம்.

தென்னாபிரிக்க ஆணைக்குழு உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு எனப் பெயரிடப்பட்டிருந்தது உங்களுக்கு நினைவிலிருக்கலாம். உண்மையை ஏற்றால்த்தான் நல்லிணக்கம் ஏற்படலாம் என்பதைத் தென்னாபிரிக்க மக்கள் உணர்ந்திருந்தார்கள்.

இத்தகைய தருணத்தில் திம்பு கோட்பாடுகளின் முக்கியத்துவத்தை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். முதன்முதலில் சர்வதேச அனுசரணையுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை திம்புப் பேச்சுவார்த்தையாகும்.

இந்த பேச்சுவார்த்தையிலேயே அகிம்சை வழியில் போராடிய எமது தலைவர்களும், ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட எமது போராளிகளும் ஒரே மேசையில் தமிழர் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி வீற்றிருந்தனர்.

இந்தியாவின் மத்தியஸ்தத்துடன், தமிழ் பேசும் தேசிய இனமும், சிங்களம் பேசும் தேசிய இனமும் சமதரப்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன. இந்தப் பேச்சுவார்த்தையின் ஒரு முன்னெடுப்பாகப் பிறப்பெடுத்ததே திம்புக் கோட்பாடுகளாவன.

அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கோட்பாடுகள் என்பது இனப்பிரச்சினைக்கான எத்தகைய தீர்வு முயற்சியின் போதும் கருத்துக்கெடுக்கப்பட வேண்டும் என்பதை நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. அரசியல் தீர்வுத் திட்டங்களைத் தயாரிப்போர் திம்புக் கோடுபாடுகளை மனதிற்கொண்டு செயலாற்ற வேண்டும்.

சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக, சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் அரசியல் தீர்வுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இனப்பிரச்சினையை மனதிற்கொண்டு கைச்சாத்திடப்பட்ட முதலாவது சர்வதேச ஒப்பந்தம் இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஆகும். இந்த ஒப்பந்தத்திற்கு அமைவாக, தமிழ்ப் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழ்நதுவரும் மண் என்ற அடிப்படையில், வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டன.

ஆரம்பத்தில் இனஅழிப்பிலிருந்து தப்பிப் போன எமது மக்களுக்கு அடைக்கலம் கொடுத்த இந்தியா, பின்னர் திம்புவில் அனுசரணையாளராக செயற்பட்டது. பின்னர் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இது இந்தியாவுக்கு இருக்கும் முக்கிய வகிபாகத்தை சுட்டிக்காட்டியது மட்டுமன்றி, தமிழ் மக்களுக்கு உரிமையும், நீதியும் கிடைக்க இந்தியா இதயசுத்தியுடன் பணியாற்ற முன் வரவேண்டும் என்ற வரலாற்று பொறுப்பையும் எடுத்துக்காட்டி நின்றது. இப்பொறுப்பினை அண்மையில் இந்தியப் பிரதமர் வடமாகாணத்திற்கு வந்தபோது நான் அவருக்குக் கோடிட்டுக் காட்டினேன்.

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி அன்றைய இந்தியப் பிரதமராக இருந்த திரு.ராஜீவ் காந்தி அவர்களுக்கு, அன்று தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்குத் தலைவராக இருந்த திரு.சிவசிதம்பரம், செயலாளர் நாயகமாக இருந்த திரு.அமிர்தலிங்கம், உபதலைவராக இருந்தவரும் இன்றைய தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவராகவும் இருக்கின்ற திரு.சம்பந்தன் அவர்களும் கூட்டாக கையொப்பமிட்டு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தனர்.

அந்தக் கடிதத்தில், இனப்பிரச்சினை தீர்வுக்காக இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 13 ஆம் திருத்தச் சட்டம் மற்றும் மாகாண சபை தொடர்பான மசோதாக்கள் தொடர்பாகத் தமது ஏமாற்றத்தைத் தெரிவித்ததோடு, இந்த திட்ட முன்மொழிவுகள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பதையும் விளக்கமாகக் குறிப்பிட்டிருந்தார்கள்.

இன்று வடமாகாண சபையின் முதலமைச்சராக நான் இருக்கின்றேன். அவர்களின் கூற்றின் உண்மைத்தன்மையை என்னால் இன்று நடைமுறையில் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

13 ஆம் திருத்தச் சட்டமோ, மாகாண சபை முறைமையோ இனப்பிரச்சினைக்கான ஆரம்பப் புள்ளியாகவோ, இடைக்காலத் தீர்வாகவோ அல்லது இறுதித் தீர்வாகவோ இருக்க முடியாது என்பதை வெளிப்படையாகவே கடந்த காலங்களில் தெரிவித்து வந்துள்ளேன். இதனைத் தொடர்ந்தும் வலியுறுத்துவேன்.

சிங்கள மக்கட்தலைவர்களுக்கும் தமிழத் தலைவர்களுக்குமிடையில் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு பின்னர் இனவாதத்துக்கு முகம் கொடுக்க முடியாமல் கிழித்தெறியப்பட்ட கசப்பான வரலாறு எம் கண்முன்னே விரிந்து கிடக்கின்றது.

தமிழர்களாகிய நாங்கள் அடிப்படையில் அமைதியையும், சகோதரத்துவத்தையும் கூடி வாழ்வதையும் விரும்புபவர்கள். இவ்வாறான கருத்துகளுடன்தான் எமது சமூகக் கட்டமைப்பு கட்டியெழுப்பப்பட்டது. அவற்றின் அடிப்படையிலேயே எமது போராட்டங்களும் அகிம்சை வழியில் ஆரம்பிக்கப்பட்டது.

காந்திய முறையில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேற்கொண்ட எமக்கு வன்முறை வழியில் பதில் தரப்பட்டது. அது மட்டுமன்றி, சட்டங்களும் எம்மை அடக்கி ஆள்வதற்காகவே உருவாக்கப்பட்டன.

இதில் முக்கியமாகத் தரப்படுத்தல் சட்டமானது, கல்வியைத் தொடர்ந்து கொண்டிருந்த இளைஞர்கள் உட்பட எமது இளைஞர்களை ஆயுதமேந்த நிர்ப்பந்தித்தது. உரிமை மறுக்கப்பட்டதாலும் அநீதி தொடர்ந்ததாலுமே எமது இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.



அத்தகையவர்களின் தியாகத்தை நாம் வீணடிக்கக் கூடாது, கொச்சைப் படுத்தக் கூடாது. அவர்களின் உற்றார் உறவினர்கள் இன்றும் வந்து எம் முன் கண்ணீர் சிந்துவதைக் காண்கின்றேன்.

எனவேதான், தேர்தல் காலங்களில் வாக்குகளை அள்ளுவதற்காக மட்டும் அவர்களைப் பயன்படுத்திவிட்டு மற்றைய காலங்களில் அவர்களின் அர்ப்பணிப்புக்கு அபகீர்த்தியையும் அவமானத்தையும் ஏற்படுத்துவதுவதை நாங்கள் தவிர்க்க வேண்டும்.

முள்ளிவாய்க்காலில் நடந்த இன அழிவிலிருந்து மீண்டெழுவதற்கு எமது இனம் போராடிக்கொண்டிருக்கிறது. போரினால் எமது சமூகக் கட்டமைப்பு சிதைக்கப்பட்டு, வாழ்வாதாரங்கள் மறுக்கப்பட்டு நாளை என்ன நிகழுமோ என்று அந்தரித்து ஏங்கி நிற்கின்றார்கள் எங்கள் மக்கள். 150,000 இராணுவ வீரர்கள் மத்தியில் காலம் கடத்தி வருகின்றார்கள்.

அவர்களுக்கு உதவிக் கரம் நீட்டி, அழிந்து போன பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி, எமது தேசம் மீண்டும் மீண்டெழுவதற்கு நீங்கள் உதவ முன்வரவேண்டும். நீங்கள் எவ்வாறு உதவி செய்யலாம் என்பதற்கான பொறிமுறையை வகுத்து அதனை இறுதி செய்யும் நிலையில் வடமாகாண சபை தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இதனை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு உங்களுடைய பேருதவி தேவைப்படு கிறது. எமது சமூகத்தையும் எமது வாழ்விடங்களையும் எமது மக்களின் உதவியாலேயே கட்டியெழுப்புவது எமக்காக உயிர்நீர்த்தவர்களுக்கு நாம் செய்யும் மரியாதையும் அர்ப்பணிப்பும் ஆகும்.

அத்துடன், எமது இனத்தை அழிப்பவர்களுக்கான பதிலாகவும் இருக்கும். பல தடைகளை அவர்கள் மீது விதித்து வருவது உண்மைதான். அண்மையில் முதலமைச்சர் நிதியத்தை உருவாக்க தேர்தல் முடிவுகள் வரும் வரையில் காத்திருப்போம் என வடமாகாண சபையின் ஆளுனர் கூறியதாக அறிகின்றேன். ஜனாதிபதி சரியென்று கூறியும் ஆளுனர் தாமதம் காட்டுவதும் புலப்படுகிறது.

இவ்விடத்தில் இன்னொரு முக்கிய விடயத்தை இங்கு பகிர விரும்புகின்றேன். கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், கள யதார்த்தத்தை நன்கு புரிந்துகொண்டு, வடமாகாணசபை நடவடிக்கைகளில் இறங்கியது.

பொதுவேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட 100 நாள் வேலைத் திட்டத்திற்கு சமாந்தரமாக, எமது மாகாணசபைத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட சில விடயங்களை உள்ளடக்கியதாக டிசம்பர் 31 ஆம் திகதி நாமும் ஒரு 100 நாள் திட்டத்தை பொது வேட்பாளரிடமும்,

அவ்வேளையில் இருந்த முன்னாள் ஜனாதிபதியிடமும், அன்றைய எதிர்க்கட்சித் தலைவரிடமும் சமர்ப்பித்தோம். இத்திட்டமானது வடமாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்டவர்களின் சமூக கட்டுமானத்தை மறுசீரமைப்பதற்கான அத்தியாவசியமான விடயங்களை உள்ளடக்கியதாக நடைமுறைச் சாத்தியமான, அரசியற் கலப்பற்ற ஒரு வேலைத்திட்டத்தையும் அது நிறைவேற்றப்பட வேண்டிய கால அட்டவணையையும் கொண்டதாக அமைந்திருந்தது. புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் மாகாண ஆளுனரை மாற்றுவது உட்பட சில விடயங்கள் நிறைவேற்றியிருந்தாலும், நாம் குறிப்பிட்டிருந்த முக்கியமான விடயங்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

கடந்த ஆட்சிக்காலத்திலும் சரி, இப்போதைய அரசாங்கத்தின் ஆட்சியிலும், போரினால் அங்கவீனப்பட்ட சிறுவர்கள், இளையவர்கள், பெண்கள், முதியோர், போராளிகள் போன்றோருக்கு வழங்கப்பட வேண்டிய மருத்துவ சிகிச்சைகளும், உளநல சிகிச்சைகளும் வழங்கப்படவில்லை.

முன்னைய அரசாங்கம் உள்ளக கட்டுமானப்பணிகளில் ஈடுபட்டதே தவிர போரில் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்து அவர்கள் தமது சொந்தக்காலில் நிற்க வைப்பதற்கான வாழ்வாதாரத் திட்டங்கள் எதனையும் முன்னெடுக்கவில்லை. இவற்றைக் கவனத்தில் எடுத்து மாகாண சுகாதார அமைச்சின் கீழ் சிறுவர்கள், பெணகள், அங்கவீனமுற்றோர், முதியோர் நலன் பேணும் பிரிவு ஒன்றினை உருவாக்கி அது செயற்பட ஆரம்பித்துள்ளது.

ஆகவே, எமது தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான மனிதாபிமான உதவியை வழங்குதல் குறுங்கால இலக்காகவும், நிகழ்த்தப்பட்ட இன அழிப்புக்கு நீதி பெறுவதை மத்திம கால இலக்காகவும், திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் நிலையான அரசியல் தீர்வைக் காணுதல் எமது நீண்டகால இலக்காகவும் கொண்டு நாம் அனைவரும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

அதற்கு நீங்கள் அர்த்தம் பொதிந்த ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்குவர்கள் என்ற நம்பிக்கையில் எனது உரையை இத்துடன் நிறைவு செய்கிறேன் என்றார்.


(முற்றும்)

-தமிழ்வின்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருடரையும் மோசடிக்காரரையும் சிறையில் அடைப்போம்

### பிரதமர் ரணில் அறிவிப்பு



(கொழும்பு)

**திருடர்களையும் ஊழல் மோசடிக்காரர்களையும் சிறையில் அடைப்போம் . அதற்காக ஐ.நாவின் ஊழல் மோசடிகள் பிரகடனத்துக்கமைய புதிய சட்டங்கள் நாட்டில் அறிமுகப்படுத்துவதோடு, விசாரணைகளை மேற்கொள்வதற்காக பொலிஸாருக்கு வெளிநாடுகளில் பயிற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

மகிந்த ஆட்சியில் இலங்கைக்கு வரமறுத்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எமது ஆட்சி வந்ததும் இங்கு வர காத்திருக்கின்றனர்.

கரனதெனியவில் இடம்பெற்ற ஐ.தே.முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார். பிரதமர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஊழல் மோசடிக்காரர்களை சிறையில் அடைப்போம். அதற்காக ஐ.நாவின் பிரகடனத்திற்கு அமைய புதிய சட்டங்களை கொண்டு வருவோம்.

அத்தோடு சர்வதேச ரீதியில் பாரிய ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை விசாரிப்பதற்கு கண்டுபிடிப்பதற்காக எமது பொலிஸாருக்கு அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் தற்போது பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அன்று நாட்டின் சொத்துக்களை கொள்ளையடித்தது போல் மீண்டும் நாட்டின் சொத்துக்களை கொள்ளையடிப்பதற்கு எவருக்கும் இடமளிக்க மாட்டோம்.மோசடிக்காரர்கள் திருடர்களுக்கு பதவி, தராதரம் பார்க்காது தண்டனை வழங்கப்படும்.

அமெரிக்கா பிரான்ஸ் போன்ற உலகின் பொருளாதாரத்தில் அபிவிருத்தி கண்ட நாடுகள் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் முதலீடு செய்ய விரும்பவில்லை என்பதை பகிரங்கமாக அறிவித்தன.

அதேவேளை ஐ.தே. முன்னணி ஆட்சியில் இணைந்து செயறபடவும் இங்கு முதலீடுகளை மேற்கொள்ளவும் பல நாடுகள் இப்போதே தமது விருப்பத்தை வெளியிட்டுள்ளன. எனவே நாட்டை எமது ஆட்சியின் கீழேயே அபிவிருத்தி செய்ய முடியும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இன்று பல்வேறு முரண்பாடுகளுக்கு முகம் கொடுத்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மைத்திரிபால சிறிசேனவை முன்னணியினதும் சுதந்திரக் கட்சியினதும் தலைவராக ஏற்றுக் கொண்டனர். மகிந்த சிந்தனையை தூக்கியெறிந்தனர்.

ஆனால் இன்று நல்லாட்சி என்ற மைத்திரியின் வாகனத்தை மகிந்த சிந்தனையின் பக்கமாக திருப்பிச் செலுத்த முயற்சிக்கின்றனர்.

நல்லாட்சி என்ற வாகனத்தை மைத்திரியின் கைகளில் கொடுத்துவிட்டு அதனை மகிந்த சிந்தனை பக்கமாக திருப்புமாறு அழுத்தம் கொடுக்கின்றனர்.

தாம் எந்தப் பாதையில் பயணிக்கின்றோம் என்பதை தீர்மானித்துக்கொள்ள முடியாதவர்கள் எவ்வாறு நாட்டை சரியான பாதையில் வழிநடத்துவார்கள்.

இவ்வாறான ஒரு கோஷ்டியினால் நாட்டில் அரசியல் சமூக பொருளாதார சீர்திருத்தங்களையோ மக்களுக்கு சுபீட்சத்தையோ வழங்க முடியாது என்பது தான் உண்மையாகும்.

நாம் நாட்டை கட்டியெழுப்புவதற்கான பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான தெளிவான திட்டத்தை முன்வைத்துள்ளோம்.

45 முதலீடுகளை அடையாளம் கண்டுள்ளோம். அதற்கமைய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவோம் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (3-7)

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தலில் வெற்றிபெற முடியாது

## ஆருடம் சொல்கிறார் கருணா

வடக்கு, கிழக்கின் நிலைமைகள் இப்போது முற்றிலுமாக மாறிவிட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் வெற்றிபெற முடியாது என முன்னாள் பிரதி அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு நாடாளுமன்றத் தேர்தல் நிலவரங்கள் தொடர்பாக அவர் கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முழுமையான பரப்புரையும் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவே இருந்தது. இப்போது அவர் எப்படி மாறமுடியும்? அவரால் முடியாது.

எனவே, ராஜபக்ஷ தோல்வியடைவார், அவருக்கு பிரதமர் பதவியை வழங்குவதில்லை என்ற ஜனாதிபதியின் நிலைப்பாடு சரியானதே. அதற்கு அவருக்கு அதிகாரமும் உள்ளது.

வடக்கு, கிழக்கின் நிலைமைகள் இப்போது முற்றிலுமாக மாறிவிட்டன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் வெற்றி பெற முடியாது.

அவர்கள் புலம்பெயர்ந்தோர், இனவாதம், போர் பற்றியே பேசுகின்றனர். தமிழ் மக்களின் மனோநிலை அத்தகைய தேசியவாதத்திற்கு எதிரானது.

பலர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை எதிர்ப்பார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகாரத்துக்கு வரும்.

புலம்பெயர்ந்தோர் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை எதிர்த்தனர். அவர்களுக்கு ராஜபக்ஷவின் மீள் திரும்பல் பயத்தை அளித்துள்ளது.

குறிப்பாக முஸ்லிம்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கோ, ஐக்கிய தேசியக் கட்சிக்கோதான் வாக்களிப்பார்கள்.

மாகாணங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும். இப்போது யாரும் தனிநாடு கேட்கவில்லை, அவர்களின் தனிப்பட்ட உரிமைகளைத்தான் கேட்கின்றனர்.

வடக்கு, கிழக்கில் பெருமளவு தமிழர்கள், பொலிஸார் இணைந்துள்ளனர். காணி அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

மக்கள் மிதவாத அரசியலையே விரும்புகின்றனர். அவர்கள் அடிப்படைவாதத்தையோ இனவாதத்தையோ விரும்பவில்லை.

போருக்குப் பின்னர், பல விடயங்களை மாற்றியிருக்க முடியும். ஆனால் ராஜபக்ஷ அதனைச் செய்யவில்லை. அவர் பல தவறுகளையும் கெட்ட விடயங்களையும் செய்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தப்பியோடினார். நாமும் கூட மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக பரப்புரை செய்தோம். ஆனால் தப்பியோடவில்லை.

இப்போது பசில் ராஜபக்ஷ திரும்பி வந்திருக்கிறார். தலையீடுகளை செய்கிறார். அவரால் அரசியலில் தொடர்புபட்டால் வெற்றியடைய முடியாது.

சுசில் பிரேமஜெயந்தவும், பசில் ராஜபக்ஷவும் இரகசியமாக பல தவறுகளையும், கெட்ட செயல்களையும் செய்துள்ளனர்.

பல சாராயத் தொழிலதிபர்களுக்கு வேட்புமனு வழங்கப்பட்டுள்ளது. எனவே எதற்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு வேட்புமனு வழங்கவில்லை?

எந்த தவறுகளையோ, கெட்ட செயல்களையோ செய்யாத பெண் அரசியல்வாதி ஒருவருக்கும் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் ஒரு மத்திய குழுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். எனக்கு இன்னமும் அழைப்பு விடுக்கப்படவில்லை.எனவேதான் கட்சியின் யாப்புக்கு ஏற்ப மைத்திரிபால சிறிசேன [illegible] உத்தரவை [illegible] வேண்டி ஏற்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (3-7)

# இன்று ஒரு தகவல்

## ஒரு விசித்திர வழக்கு!

இன்றைய உலகத்தில் சுவாரஸ்யமான சம்பவங்களெல்லாம் கண்முன் நடந்து கொண்டிருக்கிறது. பிரான்சில் நடந்த சம்பவம் இது. ஒரு பாறையில் கார்மோதி எரிந்து போய் விட்டது. அதில் போனவரும் காலியாகி விட்டார்.

உடனே பொலிஸ் அந்த இடத்துக்கு விரைந்து கார் நம்பரைப் பார்த்து ஆள் யார் என்று கண்டு பிடித்தார்கள். அவருடைய வீட்டுக்குத் தகவல் கொடுத்தார்கள். அந்த ஆளுக்கு ஒரு மனைவி... ஒரு காதலி, ஆக இரண்டு பேர். இருவரும் சண்டை பிடிக்காமல் ஒற்றுமையாக இருந்தார்களாம்.

நடந்த சம்பவத்தைக் கேள்விப்பட்ட இருவரும் உடனே கறுப்பு உடை அணிந்துகொண்டு விபத்து நடந்த இடத்துக்கு வந்தார்கள். கருகிப் போன சடலத்தைப் பார்த்தார்கள்.

அது எங்களுடைய கணவர் தான் என்று அடையாளம் காட்டினார்கள். அதன்பின் முறையான பிரேத பரிசோதனை நடந்து அந்த ஆள் விபத்தினால் இறந்து போனதாக அதிகாரிகள் கூறினார்கள். அவர்களும் சடலத்தை பொறுப்பேற்று எரித்து விட்டார்கள். இறந்து போனவர் மூன்று கம்பனிகளில் 8 ஆயுள் இன்சூரன்ஸ் பொலிஸி எடுத்திருந்தாராம்.

அதில் இரண்டு கம்பனிகள் அவருடைய மனைவிக்கு இன்சூரன்ஸ் பணத்தைக் கொடுத்து விட்டன. ஒரு கம்பனி மட்டும் கொடுக்காமல் கொஞ்சம் தாமதமாக்கிக் கொண்டே வந்தது.

அந்தக் கம்பனி தனியார் துப்பறியும் நிறுவனத்திடம் ஒரு துப்பறியும் நிபுணரை வாடகைக்கு அமர்த்தி அந்த ஆள், இறந்தவரின் மனைவியையும் – காதலியையும் கண்காணிக்கும் படி பணித்தது.

அந்த நிபுணர் விபத்து சம்பந்தமான குறிப்புக்களையெல்லாம் பார்த்தார். கார் தீப்பிடிக்க எந்தக் காரணமும் இல்லை என்பது தெரிந்தது. கருகிப் போன சடலத்தின் பல் அமைப்பு சம்பந்தமான குறிப்புகளையும் பார்த்தார்.

இறந்தவராகக் கூறப்பட்டவரின் மனைவியும் காதலியும் தொலைபேசி மூலமாக பேசிக் கொள்வதையெல்லாம் இரகசியமாக ஒட்டுக் கேட்டார். எல்லாவற்றையும் வைத்து கவனிக்கும் போது காரில் இறந்து போனது உண்மையிலேயே அந்த ஆள் இல்லை என்பது தெரிந்து விட்டது! அப்படியானால் அந்த ஆள் எங்கே?

அந்த ஆசாமிக்கு 46 வயது இருக்கும். அவனைக் காணவில்லையே... ஆனால், மனைவியுடனும் காதலியுடனும் வேறொரு இளைஞன் அடிக்கடி பேசுவதைக் கவனித்தார்கள்.

ஒரு நாள் திடீரென பிடித்து விசாரிக்கையில், இந்த இளைஞன் தான் அந்த ஆள் என்பது தெரிந்தது! என்ன விடயம் நடந்தது தெரியுமா? இந்த ஆள் முதலில் ஒரு ஆஸ்பத்திரியில் வேலைபார்க்கும் சிநேகிதனிடம் போய் ஏதாவதொரு அநாதை சடலம் கிடைக்குமா என்று கேட்டிருக்கிறான்.

இந்தச் சமயம் பார்த்து ஆஸ்பத்திரியில் அப்படி எதுவும் இருக்கவில்லை. உடனே இரண்டுபேரும் சேர்ந்து ஒரு பிளான் பண்ணி ஒரு பிச்சைக்காரனை அழைத்துவந்து அவனுக்கு அளவுக்கு மீறி தூக்க மாத்திரை கொடுத்து காலி பண்ணி... அவனைத் தனது காரில் வைத்து கொண்டு போய் ஒரு பாறையில் மோதவிட்டு தீயும் வைத்திருக்கிறார்கள்.

அதன் பின் அந்த ஆள் பிளாஸ்ரிக் சேர்ஜரி செய்து தன் முகத்தை அடையாளம் தெரியாமல் மாற்றி விட்டானாம். எப்படியிருக்கிறது இந்த ஏமாற்று வேலை?

அவன் திட்டம் மட்டும் நிறைவேறியிருந்தால் சுமாராக ஒரு எட்டுக்கோடி அவனுக்குக் கிடைத்திருக்கும். மாட்டிக் கொண்டதால் இப்பொழுது ஆயுள் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கிறானாம்.

இந்தக் காலம் எப்படி இருக்கிறது என்றால்... தவறு செய்பவனும் புத்திசாலித்தனமாக அதைச் செய்கிறான். கொள்ளையடிப்பவனும் புத்திசாலித்தனமாகக் கொள்ளையடிக்கிறான். அதனால் நாம் அதைவிடப் புத்திசாலித்தனமாக இருந்து அதை சமாளிக்க வேண்டியிருக்கிறது.

(வெளிநாட்டில்) ஒரு அம்மா இன்சூரன்ஸ் கம்பனியைத் தேடி வந்தாராம். வந்து அங்கிருந்த அதிகாரியைப் பார்த்து, "ஏன் சார்... இன்றைக்கு எனது கணவரின் உயிரை இன்ஷூர் பண்ணிக் கொண்டு, நாளைக்கு அவர் செத்துப் போனால் எனக்கு ஏதாவது கிடைக்குமா?" என்று கேட்டிருக்கின்றார். 'கிடைக்கும்!' என்றார் அவர். "என்ன" என்று கேட்டார் இவர். 'ஆயுள்தண்டனை' என்றாராம் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையர்களின் நீண்டகால காத்திருப்பு வீணாகக்கூடாது

## -அமெரிக்க ஊடகம்-



AFP PHOTO ISHARA S.KODIKARA

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு என அறியப்படும் இலங்கையில் கடந்த பத்தாண்டாக குடும்ப ஆட்சி நிலவியது. உலகின் இரண்டாவது மிகப் பெரிய நாடான சீனாவின் ஆதிக்கம் இலங்கைத் தீவில் நிலைநாட்டப்படுவதற்கு இக்குடும்ப ஆட்சி வழிகோலியது.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் அதிகாரம் மிக்க அமைச்சுகளுக்குப் பொறுப்பாக இருந்த இவரது இரண்டு சகோதரர்களும் நாட்டின் 70 சதவீத வரவுசெலவுத் திட்டத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

இவர்கள் மட்டுமல்ல இவர்களுடன் இணைந்து ராஜபக்சவின் அரசாங்கத்தில் கடமையாற்றிய 29 உறுப்பினர்கள் பல்வேறு உயர் பதவிகளை வகித்தனர். ராஜபக்சவின் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் நெருங்கியவர்கள் நாட்டின் சிவில் சேவைகள் மற்றும் தொழிற்துறை போன்ற பல்வேறு முக்கிய பொறுப்புக்களில் அமர்த்தப்பட்டனர். இதனால் கடந்த பத்தாண்டாக இலங்கை ஒரு அதிகாரம் பொருந்திய குடும்ப ஆட்சி இடம்பெறும் ஒரு தீவாக மாறியது.

ராஜபக்சவின் குடும்ப ஆட்சியை இல்லாதொழிப்பதற்காக இவ்வாண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையின் சிறுபான்மை மக்கள் உட்பட 20 மில்லியன் வரையான மக்கள் ராஜபக்சவிற்கு எதிராக அணிசேர்ந்தனர். இதற்கான தலைமைப் பொறுப்பை மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தில் சுகாதார அமைச்சராகப் பணியாற்றிய மைத்திரிபால சிறிசேன ஏற்றுக்கொண்டார். இவர் முன்னாள் விவசாயி ஆவார். இவர் கடந்த காலங்களில் இலங்கையின் அரசியலில் பல்வேறு பதவிகளை வகித்திருந்தார்.

ராஜபக்சவை எதிர்த்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக கடந்த நவம்பர் மாதம் சிறிசேன அறிவித்தார். இதற்குச் சில நாட்களுக்கு முன்னர், ராஜபக்சவின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட இரவு விருந்துபசார நிகழ்வில் சிறிசேன கலந்து கொண்டார். இந்த விருந்துபசாரமானது தனக்கு எதிராக எந்தவொரு எதிர்ச் சக்திகளும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்கின்ற ராஜபக்சவின் மமதையின் ஒரு வெளிப்பாடாகவே நோக்கப்பட்டது.

இதனை ராஜபக்சவும் தெரிவித்திருந்தார். தன்னை எதிர்த்து நிற்க எவரும் இல்லாததால் அதனைக் கொண்டாடுவதற்காகவே விருந்து வழங்குவதாக ராஜபக்ச தெரிவித்திருந்தார். ஆனால் இதற்குச் சில நாட்களின் பின்னர் ராஜபக்சவை எதிர்த்து தேர்தலில் தான் போட்டியிடப் போவதாகவும் இதற்காக ராஜபக்சவிடம் மன்னிப்புக் கோருவதாகவும் சிறிசேன அறிவித்தார். இதுவே இலங்கையின் அரசியலில் திடீர் மாற்றத்தை ஏற்படுத்தியது.

இதற்கு ஆறு வாரங்களின் பின்னர் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் சிறிசேன வெற்றி பெற்றார். இந்நிலையில் பல மில்லியன் கணக்கான மக்கள் சிறிசேனவின் அடுத்தகட்ட நகர்வு தொடர்பாக ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

2005 இல் ராஜபக்ச இலங்கை அரசாங்கத்தைப் பொறுப்பெடுத்தார். அப்போது நாட்டின் வடக்கில் போர் தீவிரம் பெற்றிருந்தது. ராஜபக்ச அதிபராகப் பதவியேற்ற பின்னர் 2009 இல் உள்நாட்டுப் போர முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது. ராஜபக்சவால் போர் வெற்றி கொள்ளப்பட்டதானது சிங்கள மக்கள் மத்தியில் இவருக்கான வரவேற்பை மேலும் அதிகரித்தது. இதனால் ராஜபக்சவின் குடும்பத்தினர் மற்றும் இலங்கை சுதந்திரக் கட்சி போன்றன நாட்டில் குடும்ப ஆட்சி ஒன்று நிலைபெறுவதற்கு வழிவகுத்தன.

போர் வெற்றியைப் பெற்றுத்தந்த ராஜபக்ச தமது மீட்பர்கள் என சிங்களப் பெரும்பான்மை சமூகம் கருதியது. இதுவே நாட்டில் ராஜபக்சவின் குடும்பத்தினர் முக்கிய பொறுப்புக்களை வகிப்பதற்கும் குடும்ப ஆட்சி நீடிப்பதற்கும் வழிகோலியதாக அனைத்துலக நெருக்கடிகள் குழுவின் மூத்த ஆய்வாளர் அலன் கீனன் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் மூன்றாவது தடவையாகவும் ராஜபக்ச ஜனாதிபதியாவதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது. அரசியல் யாப்பின் மூலம் இது சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இவ்வாறான அதீத நம்பிக்கையின் மறுபக்கமாகவே தனது ஆட்சிக்காலம் முடிவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவதற்கான ஒரு உந்துதலை ராஜபக்ச பெற்றுக்கொண்டார். இவரது அதீத நம்பிக்கைக்கு சிறிசேனவின் தேர்தல் வெற்றி முற்றுப்புள்ளி வைத்தது.

வெவ்வேறு அரசியல் அவாக்களுடன் வாழும் இலங்கையின் சிறுபான்மை சமூகத்தினர் மற்றும் அரசியற் கட்சிகள் ராஜபக்சவை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்ட சிறிசேனவின் கைகளைப் பலப்படுத்தினர்.

சிறிசேனவின் தந்தையார் இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் புகழ்பெற்ற ஒருவராவார். இவரது தாயார் பாடசாலை ஆசிரியையாகக் கடமையாற்றியிருந்தார். இவ்வாறான பின்புலத்தைக் கொண்ட சிறிசேன வடமத்திய மாகாணத்திலுள்ள கிராமம் ஒன்றைச் சொந்த இடமாகக் கொண்டவர்.

1971 இல் இலங்கை அரசாங்கத்திற்கு இடம்பெற்ற மார்க்சிய கிளர்ச்சிகளில் சிறிசேன பங்குபற்றியிருந்தார். இதற்காக இவர் ஒரு ஆண்டிற்கும் மேல் சிறையில் அடைக்கப்பட்டார். இதன் பின்னர் இவர் தனது சொந்த ஊரில் விவசாயம் செய்து கொண்டு விவசாயத்துறை மற்றும் அரசியல் சார் பட்டப்படிப்பைத் தொடர்ந்தார். இதனைத் தொடர்ந்து 1989 இல் இலங்கைய சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டார்.

இலங்கை சுதந்திரக் கட்சியில் மிகவும் மதிப்பு மிக்க ஒருவராக சிறிசேன விளங்குகிறார். சுகாதார அமைச்சராகப் பணியாற்றிய போது புகைப்பிடித்தலை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார். ஆனாலும் இவரது இந்த நடவடிக்கை வெற்றியளிக்கவில்லை.

'நாட்டின் முழுப் பொருளாதாரமும் சமூகக் கட்டமைப்பு முழுவதும் ஒரு குடும்பத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது' என சிறிசேன முன்னர் தெரிவித்திருந்தார். இவர் இலங்கையின அதிபராகப் போட்டியிடும் போது தனது தேர்தல் பரப்புரையில் 100 நாள் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவேன் என வாக்குறுதி வழங்கியிருந்தார். இந்த 100 நாள் வேலைத் திட்டத்தில் ஊழல் மற்றும் மோசடிகளை ஒழித்து சட்ட ஆட்சியை நிலைநாட்டுவதற்குப் பாடுபடுவேன் என சிறிசேன உறுதியளித்திருந்தார்.

கடந்த ஜனவரி மாதம் இலங்கையின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட சிறிசேன, ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களை மட்டுப்படுத்தியுள்ளார். இது தற்போது அரசியல் சட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ராஜபக்ச குடும்பத்தவர்கள் மற்றும் நண்பர்கள் மீது ஊழல் மோசடி விசாரணைகள் இடம்பெறுவதற்கு சிறிசேன எவ்விதத்திலும் தடைக்கல்லாக இருக்கவில்லை. இது தொடரபில் ராஜபக்ச தரப்பிலிருந்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் சிறிசேன அமைதி காத்தார்.

இவ்வாறான சம்பவங்கள் இலங்கையின் அரசியலில் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன என அரசியல் பொருளியலாளரும், யாழ்ப்பாணத்தில் செயற்படும் ஆய்வாளருமான அகிலன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். கடந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றங்கள் இன்னமும் சீர்செய்யப்பட வேண்டியுள்ளதாக ஆய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் மேற்கொள்ளப்படும் என சிறிசேன வாக்குறுதியளித்திருந்தார். இதுவும் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 17 ஆம திகதி நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறும் என சிறிசேன அறிவித்துள்ளார். இவரது தாமதமான செயற்பாட்டால் வெளிநாட்டு முதலீடுகள் முடங்குவதற்கும் மேலும் அரசியற் சீர்திருத்தங்கள் மேற்கொள்வதற்குத் தடையாக உள்ளதாக சிலர் விமர்சித்துள்ளனர்.

இதேவேளையில், ஐ.தே.க வரும் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெறுவதற்கான சாத்தியங்கள் நிலவுகின்றன. இது சிறிசேனவை மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளியது. சிறிசேன தனது ஜனநாயக சார் மதிப்பையும் பாதுகாக்க வேண்டியுள்ளதுடன் தனது சொந்தக் கட்சி தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு உதவி செயதல் ஆகிய இரண்டையும் சமப்படுத்த வேண்டியதொரு இக்கட்டான சூழலில் சிறிசேன தள்ளப்பட்டுள்ளார்.

'கட்சியின் தலைமைக்கு எதிராகச் செயற்பட்டு, அவரைத் தோற்கடித்து, பின்னர் அவரது கட்சி பல ஆண்டுகளுக்கு அரசியலில் வெற்றி பெற முடியாதவாறு தடைகளைப் போடுகின்ற ஒரு நயவஞ்சக அரசியலை நடாத்தும் ஒரு சராசரி மனிதனாக இருப்பதற்கு சிறிசேன விரும்பவில்லை' என அலன் கீனன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் பல்வேறுபட்ட தரப்பினர் தற்போதும் செயற்படுகின்றனர். சிலர் ராஜபக்ச மீண்டும் அரசியலில் நுழைய வேண்டும் என்பதற்கு ஆதரவாக பேரணிகளை நடத்துகின்றனர். இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது இடம்பெற்ற பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பில் வெளியிடப்படவுள்ள ஐ.நா அறிக்கையானது இலங்கையின் அரசியலில் அங்கம் வகிக்கும் பலரை விசாரணை செய்வதற்கு உந்துசக்தியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவுடன் எத்தகைய உறவைப் பேண வேண்டும் என்பது தொடர்பாகவும், சீனா மற்றும் அமெரிக்காவுடன் எத்தகைய வெளியுறவுக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்எனவும் குறிப்பாக சீனாவின் ஆதரவுடன் இலங்கையில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொடர்பாகவும் இவை நாட்டின் பொருளாதாரத்திற்கு நன்மை பயக்குமா என்பது தொடர்பாகவும் சிறிசேன மிகவும் ஆழமாக ஆராயவேண்டும்.

'காலம் நகர்ந்து கொண்டு செல்கிறது. ஆகவே இலங்கையர்களின் நீண்டகாலக் காத்திருப்பு வீணாகக் கூடாது. இத்தகைய காத்திருப்பை இழப்பதற்கான நேரம் இதுவல்ல. ஆனால் மக்களின் அதிருப்தியும் அதிகரிக்கிறது. இலங்கையின் தற்போதைய அரசியல் குழப்பமுற்றுள்ளதானது அரசாங்கம் மீதான மக்களின் அதிருப்தி மேலும் அதிகரிக்கும் என்பதையே சுட்டிக்காட்டுகிறது' என அலன் கீனன் தெரிவித்துள்ளார்.

-நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 தமிழர் படுகொலை விவகாரம்

# சாட்சிகளை குற்றவாளிகள் போல் நடத்துகிறது ஆந்திர பொலிஸ்

(வேலூர்)

**ஆந்திர மாநிலத்தில் கடந்த செப்டெம்பர் மாதம் 20 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில் புலனாய்வு விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஆந்திர பொலிஸார் சாட்சிகளை குற்றவாளிகள் போல் நடத்துவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**



ஆந்திராவில் செம்மரம் கடத்தி 20 தமிழர்கள் படுகொலை செய்யபட்ட விவகாரத்தில் விசாரணைக்காக திருப்பதிக்கு அழைத்துச் செல்லப்பட்ட சாட்சிகளிடம் சிறப்பு புலனாய்வு துறையினர் கெடுபிடி காட்டுவதால் விசாரணையில் அதிருப்தி நிலவுகிறது. செம்மரம் வெட்டும் கூலி தொழிலாளர்கள் 20 பேர் ஆந்திர வனத்துறையால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம்நாடுமுழுக்க பெரும் அதிர்ச்சி அலையை ஏற்பபடுத்தியது.

அதில் நேரடி சாட்சிகளாக உள்ள பாலசந்திரன், சேகர், இளங்கோ மூவரும் மதுரை மக்கள் கண்காணிப்பகம் இயக்கத்தின் பாதுகாப்பில் இருந்து வருகிறார்கள்.

இவர்களிடம் ஆந்திர பொலிஸார் ஏற்கனவே மதுரையில் விசாரணை நடத்தியிருந்தினர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மூன்று பேரையும் திருவண்ணாமலை அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

இவர்களில் இளங்கோ, சேகர் இருவரும் திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்தவர்கள். பாலச்சந்திரன் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்தவர்.

அவர்கள் ஊரிலிருந்து திருப்பதிக்கு எப்படி சென்றார்கள், எங்கு வைத்து ஆந்திர வனத்துறையினர் கைது செய்தார்கள் என்ற விபரங்களை கேட்டறிந்து அவர்கள் போன வழியாகவே நேற்று முன்தினம் மாலை திருப்பதி அழைத்துச் சென்றனர் சிறப்பு புலனாய்வு துறையினர். மக்கள் கண்காணிப்புக் குழுவினரும் அவர்களுடன் திருப்பதி சென்றனர். சேகர் இளங்கோ மட்டும் திருப்பதிக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்கள்.

சேகர், இளங்கோ ஆகியோருடன் சென்ற சட்டத்தரணி உமர் நம்மிடம் குற்றம் புரிந்தவர்கள் ஆந்திர வனத்துறையினர்.


ஆனால் ஆந்திர சிறப்பு புலனாய்வு குழுவினர் சாட்சிகளை சாட்சிகளாக நடத்தாமல் குற்றவாளிகளை போல நடத்துகிறார்கள். பேசக்கூடாது, அங்கு நிற்கக்கூடாது, இங்கு நிற்கக்கூடாது என மிகவும் கெடுபிடி காட்டுகிறார்கள்.

தமிழகத்திலிருந்து சாட்சிகளை திருப்பதிக்கு அழைத்து சென்று விசாரணை நடத்த வேண்டும் என்றனர். உடன் தமிழக பொலிசும் வர வேண்டும் என்று கேட்டதற்கு அதை ஏற்க மறுத்தனர்.

பின்னர் வற்புறுத்தவே தமிழக பொலிஸார் வர அனுமதித்தனர். சம்பவம் நடந்த சேஷாசலம் வனப்பகுதிக்கு கூட்டிச்செல்லாமல் திருப்பதியிலேயே விசாரணையை முடித்துக்கொண்டனர்.

இது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. தற்பொழுது விசாரணை முடிந்து சாட்சிகளுடன் திரும்பிக் கொண்டிருக்கிறோம் என்றார். (3,7)

# சிங்கப்பூர் செல்கிறார் பிரதமர் நரேந்திரமோடி



பிரதமர் மோடி பதவி ஏற்ற ஓராண்டில் 20இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். சமீபத்தில் ரஷ்யா மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கு சென்றார். அங்கு நடைபெற்ற பிரிக்ஸ் நாடுகள் மாநாட்டிலும், சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

மோடி அடிக்கடி வெளிநாடு பயணம் மேற்கொள்வதை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக குறை கூறி வருகின்றன. ஆனால் பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயணத்தால் இந்தியாவில் தொழில் வர்த்தக முதலீடுகள் அதிகரித்து நாடு வளர்ச்சி பாதையில் சென்று கொண்டு இருப்பதாக பாரதீய ஜனதா பதிலடி கொடுத்து வருகிறது.

இந்த நிலையில் பிரதமர் மோடி மீண்டும் வெளி நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கிறார். வருகிற செப்டெம்பர் மாத இறுதியில் நியூயோர்க் நகரில் ஐ.நா. சபையின் ஆண்டுக் கூட்டம் நடைபெறுகிறது. இதில் கலந்து கொள் வதற்காக பிரதமர் மோடி மீண்டும் அமெரிக்க செல்கிறார்.

ஐ.நா.சபையில் உரையாற்றிய பின்பு சான் பிரான்சிஸ்கோ விரிகுடா பகுதியில் உள்ள சிலிகான் வேலி பகுதிக்கு பிரதமர் மோடி செல்கிறார். அங்கு தொழில் நுட்ப வல்லுநர்கள் உள்ளிட்ட அமெரிக்க வாழ் இந்தியர்கள் மத்தியில் உரை நிகழ்த்துகிறார்.

கடந்த ஆண்டும் பிரதமர் மோடி அமெரிக்கா சென்றிருந்தார். அப்போது நியூயோர்க் நகரின் மேடிசன் சதுக்கத்தில் அமெரிக்க வாழ் இந்தியர்கள் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதேபோல் இந்த முறை அமெரிக்கா செல்லும் பிரதமர் மோடிக்கு சிலிகான் வேலி பகுதியில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகளை அமெரிக்காவின் மேற்கு கடலோர அமெரிக்க வாழ்இந்தியர்கள் சமுதாய இயக்கம் செய்து வருகிறது. (3-7)

## பாரதச் செய்தி

# ஜெயலலிதா தலைமையில் ஆலோசனைக் கூட்டம்



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், முதலமைச்சருமான ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. அமைச்சர்கள் கூட்டமும் எம்.பி.க்கள் கூட்டமும் நேற்று முன்தினம் நடந்தது.

இது குறித்து அ.தி.மு.க. தலைமைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் 21 ஆம் திகதி தொடங்கவுள்ளதை முன்னிட்டு, அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், முதலமைச்சருமான ஜெயலலிதா தலைமையில், கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநிலங்களவை உறுப்பினர்கள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

பாராளுமன்ற கூட்டத் தொடரில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து, ஜெயலலிதா அறிவுரை வழங்கினார்.

இந்த கூட்டத்தின்போது, அ.தி.மு.க. பொருளாளரும், ஒழுங்கு நடவடிக்கைக் குழு உறுப்பினரும், நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சருமான ஓ.பன்னீர் செல்வம், திண்டுக்கல் மாவட்ட செயலாளரும், மின்சாரம், மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான நத்தம் விஸ்வநாதன், தஞ்சாவூர் தெற்கு மாவட்ட செயலாளரும், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சருமான ஆர். வைத்திலிங்கம், சேலம் புறநகர் மாவட்ட செயலாளரும், நெடுஞ்சாலைகள், சிறு துறைமுகங்கள் மற்றும் வனத்துறை அமைச்சருமான எடப்பாடி மு. பழனிசாமி, உயர் கல்வித்துறை அமைச்சர் பழனியப்பன் ஆகியோரும் உடன் இருந்தனர். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த அரசு கடன்களை பெற்றதே தவிர பொருளாதாரத்தை முன்னேற்றவில்லை

## கிழக்கு முதலமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**கடந்த அரசாங்கம் உலக நாடுகளில் பாரிய கடன்களைப் பெற்று நாட்டு மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றும் நடவடிக்கை எதுவும் செய்யாது நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு செலவு செய்தோம் என்று கூறியிருக்கிறது என்று கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் குற்றஞ்சாட்டியுள்ளார்.**



நோன்புப் பெருநாளை அடுத்த விருந்துபசார நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், நாட்டில் இன்று மக்கள் பொருளாதார சிக்கலுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கற்றோர், கல்லாதோர், பட்டம்பெற்றோர், இளைஞர், யுவதிகள் என்று நாட்டில் தொழிலில்லாமல் செய்வதறியாது சிலர் யோசித்துக் கொண்டிருக்கிறன்றனர்.

ஆனால் இலங்கைத் திருநாட்டில் எத்தனையோ தொழில் வாய்ப்புக்களை உருவாக்கலாம், சகல வசதிகளும் கொண்ட இலங்கை நாட்டில் பாரிய தொழிற்பேட்டைகளை உருவாக்கி நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்க எத்தனையோ வழிமுறைகள் இருந்தும் அப்படி செய்யாதது ஏன்..?

கிழக்கில் எந்த அபிவிருத்தியும் சரியாக இடம்பெறவில்லை, வீதி அபிவிருத்தி என்று தனிநபர் தொழில் நடைபெற்றிருக்கிறது.

பல நூறு கோடிகள் செலவு செய்து அமைக்கப்பட்ட சில வீதிகள் இன்று 1990ஆம் ஆண்டளவில் போடப்பட்ட பாதைகளைப் போன்ற தோற்றத்தில் காட்சியளிக்கிறது. இது தனிநபர் முன்னேற்றத்துக்காக மக்களுக்கான ஒதுக்கீடுகள் வீண் செலவு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கில் வேலையற்றோர் அதிகரித்து ஒவ்வொரு வீட்டிலும் தொழிலற்ற இளைஞர், யுவதிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

கிழக்கில் பெரும் மோசடிகள் நடந்துள்ளன. கிழக்கு மாகாணத்தில் அரசியல் அதிகாரத்தில் இருந்தோர் சிலர் முன்னேறி இருக்கிறார்களே தவிர மக்களுக்கு எந்த விதவேலைப்பாடுகளும், எந்த சேவைகளும், எந்த தொழில் வாய்ப்புகளும் வழங்கப்படவில்லை.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல வைத்தியசாலைகளில் ஒரு கட்டிலில் 3பேர் உட்காரும் அவல நிலை காணப்படுகிறது. நேரத்துக்கு உண்ண உணவில்லாமல் எத்தனையோ குடும்பங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

• அதிகாரங்களில் இருந்தோர் அவர்களின் முன்னேற்றங்களை மட்டும் பார்த்தார்களே தவிர மக்களைப் பற்றிய எந்த சிந்தனைகளும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கவில்லை. எனவே அவர்கள் இன்னும் மக்களிடம் வாக்குகள் கேட்டு மீண்டும் அதிகாரங்களுக்கு வர முயற்சிக்கிறார்கள். எனவே இவர்களுக்கு மக்கள் சரியான பாடம் புகட்ட வேண்டும்.

நான் அரசியலை தொழிலாக எடுக்கவில்லை. அரசியல் எனக்கு தொழிலுமல்ல. ஆனால் என் அரசியல் பிரவேசத்தின் மூலம் கிழக்கில் தொழிலில்லாமல் இருக்கும் அனைத்து இளைஞர், யுவதிகளுக்கும் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்காகவே என்னை நான் பயன்படுத்துகிறேன். எனது எண்ணங்களும் அப்படியே இருக்கிறது.

எனவே என் ஆட்சிக்காலத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருவருக்கேனும் வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்க முழு மூச்சாய் செயற்பட்டுக்கொண்டிருக்கிறேன்.

விரைவில் அந்த நடவடிக்கை இடம்பெறும். இதற்காக அனைவரும் பேதங்கள் மறந்து என்னுடன் ஒன்றிணைந்து வருமாறு அழைக்கிறேன். ஒன்றுபட்டால் வென்று விடுவோம் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் மேலும் தெரிவித்தார். (3-7)

# ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அம்பாந்தோட்டையில் தோற்குமாம்

எதிர்வரும் பொது தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி பெரிய அளிவலான தோல்வியை சந்திக்கும் என புலனாய்வு பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி அம்பாந்தோட்டை மாவட்டத்தை கைவிட்டு சென்றுள்ளமையினாலும், நாமல் ராஜபக்ஷ மீது கொண்டுள்ள அதிருப்தியுமே இந்நிலைமைக்கு முதல் காரணம் என புலனாய்வு பிரிவின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த காலங்களில் அம்பாந்தோட்டை கிராம மக்களை மறந்துவிட்டு பயன் இல்லாத பெரிய அளவிலான திட்டங்களை அறிமுகப்படுத்தியமையினாலும் கிராம மக்கள் அதிருப்தியடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலைமை காரணமாக இதனை அனுகூலம் ஐக்கிய தேசிய கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் சமமான வாக்குகள் கிடைக்கும் எனவும், பல காலங்களின் பின்னர் அம்பாநதோட்டை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்திற்கு மக்கள் விடுதலை முன்னணி சார்பில் ஒருவர் தெரிவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


ஐக்கிய தேசிய கட்சிக்கு இது வரை கிடைத்த ஆசனங்கள் 02 எனினும் இம்முறை இலகுவாக 03ஆக அது உயரும் எனவும் புலனாய்வு பிரிவு கூறியுள்ளது. கூட்டணிக்கு கடந்த தேர்தலின் போது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிடைத்த 05 ஆசனங்கள் 03ஆக குறைவது உறுதியாகியுள்ளதாக மேலும் குறிப்பிட்டுள்ளது. (3-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## வெள்ளரி

Botanical Name: Cucumis Sativus
Family: Cucurbitaceae
Engl: Cucumber
Sinh: Pipingna



உரோமங்களையுடையதும் சராசரி பருமனுடையதுமான ஒரு கொடித்தாவரமாகும். தனியிலை ஒன்றுவிட்ட இலையமைப்புக் கொண்டவை. 11 தொடக்கம் 16 சென்ரி மீற்றர் நீளமும் 16 சென்ரிமீற்றர் அகலமும் உடைய கோளவடிவ இருதய வடிவ கூரிய முனைகளையுடைய இலைகளைக் கொண்டது.

இலையின் இரு பக்கங்களும் சுனைகளையுடையது. இலைக் காம்பு 5 தொடக்கம் 8 சென்ரி மீற்றர் நீளமுடையது. பூக்கள் ஒரு பாலானவை. அவை பிரகாசமான மஞ்சள் நிறம் கொண்டவை. நீள் வட்ட வடிவான பெரிய புயங்களைத் தரும். விதைகள் தட்டையான வெள்ளை நிறமானவை. இவ்விதைகள் கிட்டத்தட்ட 6 மில்லிமீற்றர் நீளமானவை.

**இனவிருத்தியும் பரம்பலும்**

யாழ்.மாவட்டத்தில் தோட்டப்பயிராக பயிரிடப்படுகின்றது. விதைகள்மூலம் இனவிருத்தி செய்யலாம். தை முதல் சித்திரை காலப்பகுதியிலும் ஆனி முதல் புரட்டாதிகாலப்பகுதியிலும் இனவிருத்தி செய்யப்படுகிறது.

**வெள்ளரிக்காயின் உண்ணும் பகுதி 100 கிராமில் உள்ள சத்துக்கள்**

புரதம்-0.4 கிராம்
கொழுப்பு-0.1 கிராம்
காபோவைதரேற்று-25 கிராம்
நார்ப்பொருள்-0.4 கிராம்
கல்சியம் 10 மில்லி கிராம்
பொஸ்பரஸ் -25 மில்லிகிராம்
இரும்புச்சத்து 1.5 மில்லிகிராம்
தயமின் -0.03 மில்லிகிராம்
நியாசின் - 0.2 மில்லிகிராம்
சோடியம் -7 மில்லிகிராம்
பொட்டாசியம்-50 மில்லிகிராம்
காம்பிரம் (செப்பு)-0.1 மில்லி கிராம்
நைட்ரஜன்-0.06 கிராம்

**மருத்துவப் பண்புகள்**

வெள்ளரிப்பிஞ்சினை தினமும் சாப்பிட்டுவர தாகத்தைக் குறைக்கும். குளிர்ச்சியைத்தரும், உணவை எளிதில் சீரணம் செய்யும்.

வெள்ளரிப்பிஞ்சைசிறுசிறுதுண்டுகளாக நறுக்கி தயிர்ப்பச்சடியில் சேர்த்தோ மோரில் போட்டு [illegible]த்தோ அருந்தலாம். அல்லது சிறுசிறு துண்டுகளுடன் உப்பு, மிளகாய்ப் பொடி சேர்த்து உண்ணலாம். இதனால் சிறுநீர் எரிச்சல், அப்பகுதியில் ஏற்படும் அரிப்பு தீரும்.

வெள்ளரிக்காயை மிக்சியில் அடித்து மென்பானமாக அருந்திவர இரத்தத்திலுள்ள உஷ்ணத்தை குளிர்மையாக்கும். மலச்சிக்கலை நீக்கும். இச்சாறு வயிற்றுப்புண் ஆற்ற வல்லது. இதில் 96.3 சதவீத நீர்ச்சத்து உள்ளதால் வயிற்றெரிச்சலை உடனடியாக குணமாக்க வல்லது.

வெள்ளரிக்காயை அறுத்து அதைத் தினமும் முகத்தின்மீது பூசி வந்தால் முகத்தோலின் வரட்சி நீங்கும். முகப் பருக்கள் வராமல் தடுக்கும். தேமல் நீங்கும். முகம்பளபளப்பாக அமையும்.

வெள்ளரிப் பிஞ்சுச்சாறு. பசளிக் கீரைச்சாறு, கரட்சாறு மூன்றையும் சம அளவு கலந்து சீனி சேர்த்து கரைத்து மொத்தமாக 300 மில்லி கிராம் சாறுக்கு 150 கிராம் சீனி விகிதம்) அடுப்பில் வைத்துப் பானமாகத் தயாரித்து காலை; மாலை 5 தேக்கரண்டி அளவில் சாப்பிட்டால் முடிவளரும். முடி உதிர்வதும் நின்று விடும்.

தோலில் அடிக்கடி அரிப்பு ஏற்பட்டுக் கொப்புளங்கள் உண்டாகும். நகத்தால் கீறிவிடுவதால் புண்ணாகி விடும். இவற்றை நிரந்தரமாக குணமாக்க வெள்ளரிக்காய்ச்சாறு, அறுகம் புல் சாறு, கரட்சாறு மூன்றையும் சம அளவு கலந்து தினமும் ஒருவேளை குடித்து வரலாம்.

வாந்திபேதி முதலியன ஏற்பட்டு உடலில் நீர்ச்சத்து குறைந்து உடலுக்கு சக்திதேவைப்படும் போது வெள்ளரிக்காய்ச்சாறும் இளநீரும் சம அளவு கலந்து ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை 30 மில்லி முதல் 60 மில்லிவரை அருந்தலாம்.

வெள்ளரி இலையை சீரகத்துடன் கலந்து வறுத்து பொடி செய்து 100 மில்லி கிராம் உட்கொள்ள தொண்டை தாபிதம் தணியும்.

பேரீச்சம்பழத்தையும் வெள்ளரிப் பழத்தையும் சேர்த்து கலந்துண்ணல் மருத்துவ குணமிக்க கலவையாகும். பேரீச்சம்பழம் உடலில் உஷ்ணத்தை உண்டாக்கும். வெள்ளரிக்காய் அல்லது பழம் குளிர்மையைத்தரும். இரண்டையும் சேர்த்துண்ண அனைவருக்கும் ஏற்ற உணவாக அமையும். மருந்தாகவும் மாறி விடுகிறது.

35 கிராம் விதைகளை நன்கு அரைத்து 175 மில்லி நீரில் கரைத்து வடிகட்டி 30 மில்லி அளவு தினமும் 3 வேளை குடிக்க சிறுநீரகக் கற்கள் கரைந்து சிறுநீர் நன்கு வெளியேறும். தொடர்ந்து 40 நாட்கள் இவ்வாறு பயன்படுத்தி வரலாம்.

நன்றாக பழுத்த வெள்ளரிப் பழத்திலிருக்கும் சதைப்பகுதியை விதைகளை நீக்கி பிரித்தெடுத்து அதன் சாற்றை உப்பு அல்லது சீனியும் மோரும் கலந்து அருந்த தாகம் தணிந்து புத்துணர்ச்சி உண்டாகும். சிறுநீர் முறையான அளவுடன் வெளியேறும்.

வெள்ளரி விதைகளை பிரித்தெடுத்து வெயிலில் நன்கு உலர்த்த வேண்டும். உலர்த்தப்பட்ட விதைகளின் மேற்றோலை எளிதாக பிரித்தெடுத்து உள்ளிருக்கும் பருப்பை தாம்பூலத்தில் (வெற்றிலை, பாக்கு கலவை) சேர்த்து உண்டால் குளிர்ச்சியைத் தரும். இரத்தத்தைச் சுத்தப்படுத்தும். தசைவெடிப்பை நீக்கும். சமிபாட்டைத்தூண்டும்.

வாதுமைப்பருப்பு 10 கிராம், வெள்ளரிப்பருப்பு 10 கிராம் ஆகியவற்றை காய்ச்சி சூடான பசும்பாலில் 250 மில்லியில் போட்டு ஊற வைத்து தேன் சேர்த்து இளம் சூடான பதத்தில் 30 மில்லி அளவு காலை, மாலை அருந்த உடல் பலவீனத்தை நீக்கி உடலுக்கு சக்தியைக் கொடுக்கும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்கச்சார்பான பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்படுவர்


### பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

பக்கச்சார்பான முறையில் செயற்படும் பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வேட்பாளர்களுடன் நட்பு பாராட்டி அவர்களுக்கு சார்பாக செயற்படும் பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படுவர் என தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளையே இவ்வாறு இடமாற்றம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பக்கச்சாரபாக செயற்படும் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும்.

பக்கச்சார்பாக செயற்பட்டு வரும் பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் ஏற்கனவே தகவல் கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவர்கள் தொடர்பில் இரகசிய விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வேட்பாளர்களுக்கு சார்பாக செயற்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்கள் கிடைத்தால் அது பற்றி தன்னிடம் அறிவிக்க முடியும் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன கொழும்பு ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். (3-7)




# மக்கள் வென்றெடுத்த ஜனநாயகத்தை சீரழிக்கப்பார்க்கிறார் மகிந்த ராஜபக்ஷ

### சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)



**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை புறந்தள்ளிவிட்டு மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை கைப்பற்றும் சூழ்ச்சியை மகிந்த ராஜபக்ஷ மேற் கொள்வதோடு, மக்கள் வென்றெடுத்த ஜனநாயகத்தை மீண்டும் சீர்குலைக்கப் பார்க்கின்றார் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றம் சுமத்தியுள்ளார்.**

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக கொண்டு வருவோம் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தொடர்ச்சியாக குறிப்பிட்டுவரும் நிலையில் இது தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற காரணத்தினால் தான் மகிந்த ராஜபக்ஷவை ஆட்சியில் இருந்து வீழ்த்தினர். நாட்டில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை மக்கள் ஆதரிக்கின்றனர். அந்த மாற்றத்தை தொடர்ந்தும் தக்கவைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மக்கள் உள்ளனர். அதேபோல் நாம் கடந்த காலத்தில் மகிந்த அரசாங்கத்தில் இருக்கும் போதும் இந்த நாட்டை ஒற்றுமைப் படுத்தவே முயற்சித்தோம்.

அதேபோல் இந்த நாட்டில் யுத்தம் முடிவுக்கு வரவும் நாம் முக்கிய பங்காற்றினோம். ஆனால் மகிந்த அரசாங்கம் ஒரு கட்டத்தில் நாட்டின் ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்காது தமது குடும்ப ஆட்சியை தக்க வைக்கவே அதிகமாக முயற்சித்தனர். ஆகவே மக்களின் எதிர்ப்பை சம்பாதித்து தொடர்ந்தும் மகிந்த ஆட்சியில் இருப்பது மக்களுக்கு நாம் செய்யும் மிகப்பெரிய துரோகமாகும். அதன் காரணத்தினாலேயே நாம் மகிந்த அணியை விட்டு வெளியேறினோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மகிந்த அரசாங்கத்தை வீழ்த்துவோம் என்று சவால் விடுத்தோம். அதற்கேற்ப நாம் மக்களை மகிந்தவுக்கு எதிராக அணிதிரட்டி மகிந்தவை தோற்கடித்தோம். நாட்டில் சர்வாதிகார ஆட்சியை வீழ்த்தி ஜனநாயக ஆட்சியை உருவாக்கினோம். ஆனால் நாம் வென்றெடுத்த ஜனநாயக ஆட்சியை சீரழித்து மீண்டும் குடும்ப ஆட்சியை கொண்டுவரவே மகிந்த அணியினர் முயற்சிக்கின்றனர். மகிந்தவை தலைமையாகக் கொண்ட அவரது ஆதரவாளர்கள் கூட்டம் மக்களை திசை திருப்ப முயற்சிக் கின்றனர். இதற்கு மக்கள் ஒரு போதும் இடம் கொடுக்கக் கூடாது. ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் சார்பில் மகிந்தவை களம் இறக்கியிருப்பது கட்சிக்கு நல்லதல்ல. ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவை புறம் தள்ளி மீண்டும் கட்சியின் தலைமையை மகிந்த கைகளில் கொடுக்கும் சூழ்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் இது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தெரியும். அவர் கட்சியின் ஒரு சிலரின் சூழ்ச்சித் திட்டங்களை தெரிந்து வைத்துள்ளார். ஆனால் கட்சியின் அழுத்தமும் கட்சியை பிளவுபட விடக் கூடாது என்ற நிலைப் பாட்டிலும் உள்ளார். ஆனால் நாட்டுக்கு மீண்டும் அழுத்தங்கள் ஏற்படுத்தும் ஆட்சி பாதையை ஏற்படுத்த ஜனாதிபதி இடம் கொடு க்க மாட்டார்.

இப்போதும் அவர் ஜனநாயகத்தின் பக்கமே உள்ளார். அதே போல் ஐக்கிய தேசிய முன்னணியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஒன்றிணைந்து மீண்டும் நாட்டில் நல்லாட்சியை உருவாக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் செயற்பட்டு வருகின்றோம். அதேபோல் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரு நோக்கத்தை கவனத்தில் கொண்டே நாம் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை தோற்கடித்தோம். அதேபோல் இப்போதும் நாம் வென்றெடுத்த ஜனநாயகத்தை தக்கவைக்க மீண்டும் மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்போம். நாம் மக்களுடன் ஒன்றிணைந்து மீண்டும் நாட்டில் நல்லாட்சியை உருவாக்குவோம் என அவர் தெரிவித்துள்ளார். (3-7)

## மகிந்த ஆட்சிக்கு வந்தால் எனது உயிருக்கு ஆபத்து

### சுனில் பெரேரா அச்சம்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ உட்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு வெற்றிபெற்றால், தமது உயிருக்கு ஆபத்து நேரும் என்று பிரபல ஜிப்சீஸ் இசைக்குழு தலைவர் சுனில் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தொலைக்காட்சி ஒன்றின் நிகழ்ச்சியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வந்தால், பழிவாங்கல்களில் ஈடுபடுவார். மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்திருப்பவர்கள் திருடர்களும் கொள்ளையர்களுமாவர். இவர்கள் தம்மை காப்பாற்றிக்கொள்வதற்காகவே மகிந்தவை முன்னிலைப்படுத்துகின்றனர். மகிந்த இந்த முறை தேர்தலில் போட்டியிடாவிட்டால், அர்ஜுன ரணதுங்க பெறப்போகும் வாக்குகளை இந்த அனைவரும் சேர்ந்து பெறப்போவதில்லை, மகிந்த ராஜபக்ஷ கடந்த ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிக்கப்படுவதற்கு ஜேவிபியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவே முதன்மை காரணமாக இருந்தார்.

இலங்கையின் கிரிக்கெட்டில் மஹேல ஜயவர்த்தன, குமார் சங்கக்கார போன்றவர்களின் இரத்தங்களை எடுத்து ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பினருக்கு சொட்டு சொட்டாக செலுத்த வேண்டும்.

உரிய காலம் பதவியில் இருந்த பின்னர் மற்றவர்களுக்கு இடம் விட்டு விலகிக்கொள்ள வேண்டும் என்ற பாடத்தை இந்தரத்தம் ஏற்றப்பட்டாவது மகிந்தவுக்கு புரிய வைக்க வேண்டும் என்று சுனில் பெரேரா தெரிவித்துள்ளார். (3-7)

## மகிந்த பாராளுமன்றம் வந்தால் சட்டத்திற்கு முன் நிறுத்துவோம்

### ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார சூளுரை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சட்டத்தின் முன் நிறுத்த ஒத்துழைப்பு வழங்கப்படும் என ஜே.வி.பி யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டால் அவரை சட்டத்தின் முன் நிறுத்த தேவையான சகல ஒத்துழைப்பையும் வழங்க நாம் தயாராகவுள்ளோம். இதற்கு முன்னதாகவும் விசாரணைகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கவுள்ளோம். கடந்த அரசாங்கத்தின் ஊழல் மோசடிகள் தொடர்பில்



அதிகளவான முறைப்பாடுகளை நாமே செய்துள்ளோம். எனினும் அதிகளவு முறைப்பாடுகளை ஐக்கிய தேசியக் கட்சியே செய்திருக்க வேண்டும். ஒவ்வொரு அமைச்சுகளையும் பொறுப்பேற்றுக் கொண்ட போது ஊழல் மோசடிகள் பற்றிய ஆதாரங்கள் கிடைத்திருக்கும். அதன் அடிப்படையில் முறைப்பாடு செய்திருக்க முடியும். ஆன்ால் ஐக்கிய தேசியக் கட்சி முறைப்பாடுகளைச் செய்யவில்லை.

மகிந்த ராஜபக்ஷவினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இனவாத பிரசாரத்திற்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை உருவாக்க வேண்டும். மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான விசாரணைகளை சுயாதீனமாக மேற்கொள்ள பொலிஸாருக்கும் நீதிமன்றிற்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஜே.வி.பி நாட்டை கட்டியெழுப்பும் கொள்கையொன்றை முன்னெடுத்து வருகின்றது என் றும் சிங்கள ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் அவர் தெரிவித்துள்ளார். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர், சுன்னாகம் ஹெறிரேச் றோட்டரி கழக அனுசரணை

# கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நோவூட், மகாஜனா வெற்றிவாகை





(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் மலையக விளையாட்டு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நல்லூர் றோட்டறிக் கழகம் மற்றும் சுன்னாகம் ஹெறிரேச் றோட்டறிக் கழகங்களின் அனுசரணையுடனும் பாடசாலைமட்ட ஆண், பெண் இரு பாலஏருக்குமான கரப்பந்தாட்டப்போட்டி அண்மையில் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் நடைபெற்றது.

இதில் ஆண்கள் மற்றும் பெண்கள் சார்பில் தலா நான்கு அணிகள் மோதிக் கொண்டன. இப் போட்டிகளில் பெண்கள் அணியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பெண்கள் அணி சம்பியனானது.

இரண்டாம் இடத்தை வசாவிளான் மகா வித்தியாலயமும் மூன்றாம் இடத்தை மலையகம்-தர்மகீர்த்தி மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

ஆண்கள் அணியில் நுவரெலியா நோவூட் தமிழ் மகாவித்தியாலயமும். இரண்டாம் இத்தை புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

இப் போட்டிகளுக்கான முழுமையான அனுசரணையினை நல் லூர் றோட்டறிக்கழகமும் சுன்னாகம் ஹெறிரேச் றோட்டறிக் கழகமும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## இன்றைய போட்டி

யாழ்.உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் புத்தூர் ஸ்ரீவிக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்ட போட்டியில் இன்று புதன்கிழமை மாலை 3.45 மணிக்கு இடம் பெறும் போட்டியில்கலைமதி நவிண்டில் அணியை எதிர்த்து எவறஸ்ட் அணியும்,

மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் போட்டியில் உடுப்பிட்டி யூத் அணியை எதிர்த்து சென் அன்ரனிஸ் அணியும் மோதவுள்ளது. (க)

## கிளிநொச்சி மாணவி தேசிய மட்டத்திற்கு தகுதி

வடமாகாண பாடசாலை களுக்கு இடையிலான மெய்வல்லு நர் போட்டி கடந்த வாரம் வவுனியா கல்வியியற் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவி தே.டென்சிகா 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் புதிய சாதனை படைத்ததோடு தங்கப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

இவர் தனது சாதனைக்காக 2 நிமிடம் 31 செக்கன் 1 மில்லி செக்கனை எடுத்துக் கொண்டார்.

மற்றும் இவர் 400 மீற்றர் ஓட்டம்,ஆயிரத்து ஐந்நூறு மீற்றர் ஓட்டம் போட்டியில் தங்கப் பதக்கத்தை கைப்பற்றிக் கொண்டார்.

**4 x 400** மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியிலும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் முதலாமிடத்தினைப் பெற்றுக் கொண்டது.

மேலும் அதே பாடசாலையில் 21 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆயிரத்து ஐந்நூறு மற்றும் 5 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் தே.அன்ரனி டெல்மன் தங்கப் பதக்கத்தினை பெற்றுக் கொண்டார்.

13 வயதுப் பிரிவு பெண்களுக்கான 100,200 மீற்றர் ஓட்டப் போட்டியில் எஸ்.சர்மினி தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார். (க)





## ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III - 2015 ஓல்ட்கோல்ஸ் அரையிறுதிக்கு தகுதி

ஸ்ரீலங்கா கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்.நகரில் இருந்து ஓர் அணியை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் போட்டிகள் வரிசையில் 3-வது கால் இறுதிப் போட்டியும் தொடரின் 14-வது போட்டி கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் ஓல்ட்கோல்ஸ் அணி கே.சீ.சீ.சீ.அணியை 2 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இதுவரை காலமும் நடைபெற்ற டிவிஸன் **(III)** சுற்றுப் போட்டியில் ஓல்ட்கோல்ஸ் அணி அரை இறுதிக்கு தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஓல்ட்கோல்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சீ.சீ.சீ. அணி 37.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 229 ஓட்டங்களை பெற்றனர்.

ஜெயரூபன் 72, உமாநாத் 36, மனுதாஸ் 16, வல்லவன் 21, தனலக்ஸன் 23, ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பை மேற்கொண்ட ஓல்ட்கோல்ஸ் அணி சார்பில் சிறிகுகன், பிரியலக்ஸன், நிரோஸன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும், கஜேந்திரா 4 விக்கெட்டுக்களையும், திலீபன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

230 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய ஓல்ட்கோல்ஸ் அணி 45 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 230 ஓட்டங்களை பெற்றனர்.

சிறிகுகன் 37, தூதஸன் 39, மாதகன் 43, கஜேந்திரா 13, மயூரன், பிரியலக்ஸன் தலா 17, திலீபன் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களை பெற்றனர்.

சாம்பவன் ஒரு விக்கெட்டையும், யனுதாஸ் 3, பிரதீபன் 2, உமாநாத் 2, விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப் போட்டியில் வெற்றி பெற்ற ஓல்ட்கோல்ஸ் அணி, யாழ்.ஜொனியன்ஸ், சென்றலைட்ஸ் அணிகளுக்கிடையிலான முதலாவது கால் இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் அணியுடன் எதிர்கொள்வர்.

இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு ஓல்ட்கோல்ஸ் அணி 8.50 புள்ளிகளையும், கே.சீ.சீ.சீ. 3.09 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டிக்கு Y.குமரேசனும், Y.நிஸாந்தனும் மத்தியஸ்தர்களாக கடமை ஆற்றினர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையில்லாத போது வாயை மூடிக் கொள்ளுங்கள். சரியான சந்தர்ப்பம் வந்தால் சொல்லுங்கள். சொல்வதை தீப்பொறி எழச் சொல்லுங்கள்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இளையவள் வரும் போது அழகு மூத்தவள் போகும் போது அழகு

எங்கள் கிராமத்துப் பண்பாட்டில் மூத்தவள், இளையவள் என்று பேசும் வழக்கம் உண்டு. செல்வத்திற்கு அதிபதியானவள் இளையவள். தரித்திரத்தின் அதிபதி மூத்தவள். இருவரும் ஒரே இடத்தில் இருக்க முடியாதவர்கள்.

ஒருநாள் மூத்தவளுக்கும் இளையவளுக்கும் இடையே சர்ச்சை.

இருவரில் யார் அழகி என்பதே சர்ச்சைக்கான காரணம். தமக்குள் ஏற்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இருவரும் கிருஷ்ண பரமாத்மாவிடம் செல்கின்றனர்.

சுவாமி! எங்கள் இருவருக்குள்ளும் கடும் சர்ச்சை. இருவரில் யார் அழகானவர் என்று நீங்கள் கூற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

கிருஷ்ண பரமாத்மாவுக்கு தர்மசங்கடமாகிப் போயிற்று. ஒருவரைப் பார்த்து இவர்தான் அழகி என்றால் மற்றவர் தன்மீது கோபம் கொள்வார். எனவே இருவரும் தன்மீது கோபம் கொள்ளாத வகையில் தீர்ப்புக் கூறவேண்டும். அந்தத் தீர்ப்பு சரியானதாகவும் இருக்கவேண்டும் என கிருஷ்ண பரமாத்மா நினைத்தார்.

அதற்காக ஓர் உபாயத்தைக் கையாண்டார். இருவரும் சிறிது தூரம் நடந்து சென்று திரும்பி வாருங்கள் என்றார் கிருஷ்ணன்.

கிருஷ்ணனால் அறிமுகப்படுத்தப்பட்ட நடந்து செல்லும் முறை இன்றைய அழகு ராணிப் போட்டித் தெரிவுகளிலும் அமுல்படுத்தப்படுவது இங்கு கவனிக்கத்தக்கது.

கிருஷ்ணனின் உத்தரவுப்படி மூத்தவளும் இளையவளும் சிறிது தூரம் நடந்து சென்று மீளவும் கிருஷ்ணனிடம் வந்தனர். இப்போது கிருஷ்ணனின் தீர்ப்பு. மூத்தவளைப் பார்க்கின்றார். நீ போகின்ற போது நல்ல அழகாக இருக்கின்றாய்.

இளையவளைப் பார்த்து, நீயோ வருகின்ற போது மிக்க அழகாய் உள்ளாய் என்றார் கிருஷ்ணன். தீர்ப்பு இருவரையும் திருப்திப்படுத்தியது.

மூத்தவள், இளையவள் தொடர்பில் கிருஷ்ணன் வழங்கி தீர்ப்பு நடைபெறப்போகும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கும் பிரயோகிக்கக் கூடியது.

அன்புக்குரிய தமிழ் மக்களே! சிலர் போகின்ற போது அழகாக இருப்பார்கள். சிலர் வருகின்ற போது அழகாக இருப்பார்கள்.

போகும் போது அழகாக இருப்பவர்கள் வருவதாகவும்; வரும் போது அழகாக இருப்பவர்கள் போவதாகவும் நாங்கள் தீர்ப்பளித்தால் எல்லாம் அம்போ தான்.

ஆகையால் உங்களுக்குத் தெரியும் யார் போக வேண்டியவர்; யார் வரவேண்டியவர் என்று.

நிதானமாக ஆராயுங்கள். உங்களிடம் வருகின்றவரிடம் கேள்வி கேளுங்கள். எங்களுக்காக நீங்கள் செய்தது என்ன? தமிழ் இளைஞர்களின் விடுதலைக்கு உங்கள் பங்களிப்பு என்ன? இனப்பிரச்சினைக்கான உங்களின் தீர்வுப் புத்தகம் எங்கே இருக்கிறது?

காணாமல் போனவர்களின் பட்டியல் அடங்கிய விபரக்கொத்தை ஒரு தடவை காட்டுங்கள். தமிழ் இளைஞர்களுக்கு நீங்கள் நடத்திய அரசியல் வகுப்புக்கள் எத்தனை? உங்களால் தீர்த்து வைக்கப்பட்ட பொதுமக்களின் குறைபாடுகளைச் சொல்லுங்கள்.

இந்தக் கேள்விகளை நெஞ்சை நிமிர்த்திக் கேளுங்கள். உங்கள் கேள்விகளுக்கு சரியான பதில் கிடைக்கிறதா? என்பதை பாருங்கள். முகத்துக்கு அஞ்சி வாக்களிக்காதீர்கள்.

நடிப்பும் போலிப் பிரசாரமும் செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நம்பாதீர்கள்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வேட்பாளர்களாகப் போட்டியிடுபவர்கள் கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்காக ஆற்றிய வகிபங்கை உங்கள் மனச்சாட்சி என்னும் தராசில் இட்டு நிறுவை செய்யுங்கள். பாராளுமன்றப் பதவியில் இருந்தவர்கள்- இருக்காதவர்கள் என்ற வேறுபாட்டையும் உங்கள் நிறுவையில் கணித்துக் கொள்ளுங்கள்.

இப்போது உங்கள் தீர்ப்பை வழங்குங்கள். உங்கள் தீர்ப்பு நிச்சயம் கிருஷ்ணன் அளித்த தீர்ப்பாக அமையும்.

# குப்பை, கழிவகற்றல் பிரச்சினைக்கு மூன்று வருடங்களில் தீர்வு-ஜனாதிபதி

(கொழும்பு)

பல தசாப்தங்களாக தீர்வின்றி சுற்றாடலுக்கு பெரும் சவாலாக இருந்து வரும் குப்பை மற்றும் கழிவகற்றல் பிரச்சினைகளுக்கு முறையான தேசிய செயற்திட்டம் ஒன்றினூடாக தீர்வைப் பெற்றுக் கொடுக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கழிவுப் பிரச்சினை இன்று மக்களின் சுகாதாரத்திற்கு பெறும் அச்சுறுத்தலாக இருந்துவருவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, முறையானதும் வினைத்திறன் மிக்கதுமான ஒரு செயற்திட்டத்தினூடாக சிறந்த தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஒருபோதும் காலம் தாழ்த்த முடியாது என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் பலவாறான நடவடிக்கைகளை எடுத்தபோதும் விமர்சனங்களைத் தவிர்க்க முடியாது என்பதோடு, மக்களுக்கு அறிவூட்டி அரசாங்கத்தின் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு எல்லா அதிகாரிகளும் அர்ப்பணத்துடன் செயற்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அரசாங்க நிறுவனங்களும் தனியார்த்துறையினரும் ஒன்றிணைந்து ஒரு வேலைத்திட்டமாக இதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் சுற்றாடல் அதிகாரசபையினூடாக தற்போது நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களைப் பலப்படுத்தியும் நடைமுறைச்சாத்தியமான புதிய திட்டங்களினூடாகவும் இச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

கழிவுப் பிரச்சினையின் காரணமாக பெரிதும் பாதிக்கப்படுவது கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் வசிக்கும் மக்களாவர் என்றும் அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வனவளங்களைப் பாதுகாப்பது தொடர்பாகவும் கடலோரப்பிரதேசங்களைப் பாதுகாப்பது தொடர்பாகவும் இக்கலந்துரையாடலின்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதி அவர்களினால் முன்னுரிமை அளிக்கப்படும் ஒரு செயற்திட்டமாக சூழல் பாதுகாப்பு செயற்திட்டம் அடையாளப்படுத்த ப்பட்டுள்ளது. தற்போது சூழல் பிரச்சினைகளை அடையாளங்கண்டு அவற்றுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து நடைமுறைச் சாத்தியமான சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக திட்டமொன்றை வடிவமைக்கும் செயற்பாடுகள் தற்போது ஜனாதிபதியின் ஆலோசனைக்கேற்ப அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

காட்டு வளங்கள் குறைந்து செல்வது, காடழிப்பு, சூழல் மற்றும் இயற்கை வளங்களை சேதப்படுத்தல், சூழல் துஷ்பிரயோகம் போன்ற இது தொடர்பான பல்வேறு விடயங்களை முக்கியசூழல் பிரச்சினைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதோடு அப்பிரச்சினைகளுக்காக தீர்வுகளைக் கண்டறிவதற்கு இப்புதிய திட்டத்தினூடாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். (செ-11)

## நல்லூர் சங்கிலியன் பூங்காவில் பனை அபிவிருத்திக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையால் இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்கிழமை வரையான காலப்பகுதி பனை அபிவிருத்தி வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதை முன்னிட்டு பனை அபிவிருத்தி வாரத் தொடக்கமான இன்று புதன் கிழமையில் இருந்து இறுதி நாளான செவ்வாய்க்கிழமை வரை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் பனை அபிவிருத்திக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணக் கூட்டுறவு அமைச்சின் ஏற்பாட்டில் பனை தென்னைவளக் கூட்டுறவுச் சங்கங்களும் பனை அபிவிருத்திச் சங்கமும் பங்கேற்கும் இக்கண்காட்சி இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

தினமும் காலை 10 மணியில் இருந்து இரவு 8 மணிவரை நடைபெறவுள்ள இக் கண்காட்சியில் பனைசார் கைவினைப் பொருட்கள், பாரிம்பரிய உணவு வகைகள், ஒளடதங்கள், பனைவள அபிவிருத்தி ஆய்வு முயற்சிகள், அலங்காரப் பனைத் தாவரங்கள் என பதினைந்து காட்சிக் கூடங்களில் இவைகள் காட்சிப்படுத்தப்பட உள்ளன.

பார்வையாளர்களைக் கவரும் வகையில் தினமும் மாலை நேரங்களில் எமது பாரம்பரியத்தை வெளிக்காட்டும் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட உள்ளன.

அத்தோடு கண்காட்சி அரங்கில் பனை உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்பவர்களில் இருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட இருப்பதோடு மாணவர்களிடையே போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட இருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு கிழக்கில் பனை அபிவிருத்தியில் பெரும் பங்காற்றிய அமரர் கலாநிதி கந்தையா கனகராசாவைக் கௌரவிக்கும் முகமாகவே, வடமாகாண பனை அபிவிருத்தி வாரம் அவரது நினைவு தினத்தைத் தொடக்கமாகக் கொண்டு கடைப்பிடிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (3-5)

## விளக்கமறியல் நீடிப்பு

(கரணவாய்)

பருத்தித்துறை நகரப்பகுதியில் ஹெறோயின் விற்பனை செய்த குற்றச்சாட்டில் கடந்த 5 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் மற்றும் அவரது மனைவி , 3 வயது மகள் ஆகியோரை மீண்டும் எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (3-5-60)

## செயன்முறை கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இயற்கை விவசாயப் பண்ணைச் செயற்பாடுகள் தொடர்பான செயன்முறைக்காட்சி இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை மருதங்கேணி வீதியிலுள்ள வறாத்துப்பளை முச்சந்திப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சொண்ட் இயற்கை விவசாயப் பண்ணையில் நடைபெறவுள்ளது. (3-5)

## இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்

இராமேஸ்வரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் 300 விசைப் படகுகளில் நேற்று முன்தினம் மீன்பிடிக்க சென்றனர். இவர்களில் ஒரு தரப்பினர் மீன்வளம் நிறைந்து காணப்படும் கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு சிறிய கப்பல்களில் ரோந்து சென்ற இலங்கை கடற்படையினர், இராமேஸ்வரம் மீனவர்களை பார்த்து இங்கு மீன் பிடிக்க வரக்கூடாது என்று கூறி தரக்குறைவாக பேசியதோடு, 10இற்கும் மேற்பட்ட படகுகளில் ஏறி, மீனவர்களின் வலைகளையும் அறுத்து எறிந்தும், மீனவர்களைத் தாக்கியும் பிடித்து வைத்திருந்த மீன்களையும் கடலில் வீசியுள்ளனர். (3-7)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாம் உண்டு



✦ பலவருடங்களாக பூட்டிக் கிடக்கும் அறை இருண்டு கிடக்கும். ஆனால், அந்த அறைக்குள் விளக்கினைக் கொண்டு வந்த உடனேயே இருள் மறைந்து ஒளி பரவும். அதுபோல, இறைவனின் கருணைப்பார்வை பட்டவுடனேயே பல பிறவிகளில் செய்த பாவங்களும் உடனேயே நீங்கிவிடும்.

✦ இறைவனின் அருள் என்னும் காற்று இடையறாது வீசிக் கொண்டுதான் இருக்கிறது. வாழ்க்கை என்னும் கடலில் முன்னேற விரும்பினால் உனது மனமாகிய படகின் பாயை விரித்தால் கடலைக் கடந்து கரை சேரலாம்.

✦ இறைவனின் திருப்புகழைப் பாடும் போது, கைகளை அசைத்துக் கொண்டும், இசைத்துக் கொண்டும் பாடுவாயாக. அப்போது பாவம் என்னும் பறவைகள் பறந்தோடிப் போகும்.

✦ சேற்றில் புரள்வதுதான் குழந்தையின் இயல்பு. ஆனால், தாய் குழந்தையை அப்படியே விடாமல் குளிக்கச் செய்து சோறூட்டுவாள். அதுபோல பாவம் செய்வது மனித இயல்பு என்று கடவுள் விட்டுவிடுவதில்லை. கடைத்தேற்றும் வழிமுறைகளை அருள்செய்கிறார்.

✦ நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாமே உண்டு. நம்பிக்கை இல்லாதவனுக்கோ ஒன்றுமே இல்லை. நம்பிக்கை தான் வாழ்வு. வேண்டாத சந்தேகமோ, மனிதனை அழிவுப்பாதையில் கொண்டு சென்று விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் இலங்கையில் தோற்கடிக்கப்பட்டாலும் வெளிநாடுகளில் தோற்கடிக்கப்படவில்லை

## கவலைகொள்கிறார் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

**இலங்கையில் நாம் விடுதலைப்புலிகளைத் தோற்கடித் தாலும் வெளிநாடுகளில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப் படவில்லை.அத்துடன் விடுதலைப்புலிகள் மீண்டும் நிதி சேகரிப்பதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.ஆனால் தற்போதைய அரசாங்கம் இராணுவ முகாம்களை அகற்றி வருகிறது. இவ்வாறு மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



காலியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆட்சியில் பல மில்லியன் டொலர்களை நான் மோசடி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டவை அனைத்தும் உண்மையில்லை.

மீண்டும் விடுதலைப் புலிகள் நிதி சேகரிப்பதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் புலிகளை தோற்கடித் தாலும் வெளிநாடுகளில் இதுவரையில் அவர்களைத் தோல்வியடைய செய்யவில்லை. ஆனால் இராணுவ முகாம்களை அகற்றி விடுவோம், இராணுவத்தினரை குறைத்து விடுவோம் என ஆட்சியில் உள்ளவர்கள் கூறுகின்றார்கள்.

இது தான் இன்றைய உண்மை நிலை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார். (3-7)

# மைத்திரியின் அண்மைய உரையினால் மகிந்தவின் செல்வாக்கு சரிந்துள்ளது

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சிங்கள மக்களிடம் காணப்பட்ட 53சதவீத பாராட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உரை காரணமாக 43சதவீதமாக குறைந்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



மகிந்த ராஜபக்ஷ மீது கொண்டிருந்த பாராட்டு இன்னமும் குறைவதற்கான அறிகுறி காணப்படுவதாக ஆராய்ச்சிமூலம்தெரியவந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுளளார்.

தற்போதைய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்த்த 20ஆம் திருத்தச்சட்டம் தொடர்பில் தங்கள் கட்சியின் முயற்சிக்கு பல்வேறு வகையில் எதிர்ப்பு வெளியிட்ட அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் ராஜித சேனாரத்ன போன்றோர் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்தமையினால் அது தங்கள் முன்னணிக்கு பெரிய வெற்றியாகும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (3-7)

# சொத்து விபரங்களை வெளியிடாதவர்களுக்கு வேட்பாளர் அடையாள அட்டை வழங்கப்படாது

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

சொத்து விபரங்களை வெளியிடாதவர்களுக்கு வேட்பாளர் அடையாள அட்டைகள் வழங்கப்பட மாட்டாது என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது சொத்து விபரங்களை வெளியிட வேண்டும். அவ்வாறு வெளியிடத் தவறுவோருக்கு வேட்பாளர் அடையாள அட்டைகள் வழங்கப்படாது.

தேர்தல் போட்டியிடும் பெரும் எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் தங்களது சொத்து விபரங்களை வெளியிடவில்லை.

பிரதான அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களும் இவ்வாறு சொத்து விபரங்கள் பற்றிய ஆவணத்தை ஒப்படைக்கவில்லை.

வேட்பாளர் அடையாள அட்டை இல்லாத எந்தவொரு வேட்பாளருக்கும் தேர்தல் திணைக்களத்தில் வழங்கப்படும் வரப்பிரசாதங்களை பெற்றுக்கொள்ள முடியாது.

குறைந்த பட்சம் வாக்கு எண்ணும் நிலையங்களுக்குள் கூட பிரவேசிக்க இந்த வேட்பாளர் களுக்கு அனுமதியளிக்கப்படாது என் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று முன்தினம் கட்சிப் பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்பின் போது திட்டவட்டமாக அறிவித்துள்ளார். ([illegible])

# அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தினால் கடும் நடவடிக்கை

## ஜனாதிபதியின் செயலாளர் சுற்றறிக்கை

தேர்தல் காலங்களில் அரசாங்க சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதியின் செயலாளர் பி.பி அபோகேனி தெரிவித்துள்ளார்.

இதை தடுக்கும் வகையிலான சுற்றறிக்கை ஒன்றும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி அபோகேனினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. நேற்றைய தினம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் உரிய அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

அதனடிப்படையில் அமைச் சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் பிரத்தியேக செயலாளர்களுக்கு மாத்திரம் உத்தியோகபூர்வ வாகனம் ஒன்றை வழங்குவதுடன் மற்ற அனைத்து அதிகாரி களும் தமக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனங்களை உரிய அமைச்சுககளுக்கு திருப்பி வழங்க வேண்டும் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது.

அவ்வாறில்லாமல் அரச வாகனங்களை தவறாக பயன்படுத்த முயற்சிப்போருக்கு எதிராக அரச சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டில் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-7)

# மகிந்தவை விரட்டுவோம் ராதாகிருஷ்ணன் உறுதி

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷவை விரட்டியது போன்று, எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலிலும் அவரை துரத்துவோம் என கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தலவாக்கலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலரே மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைவார் என கருத்து வெளியிடும் போது, அவரை பிரதமராக்கும் போராட்டம் வீண் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு வழங்கும் வாக்குகளின் ஊடாக மோசடிகாரர்களை துரத்திவிட முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (3-7)

# அரசின் சிறிய இனிப்பு பண்டங்களுக்கு பொதுமக்கள் ஏமாற வேண்டியதில்லை

## விழிப்பூட்டுகிறார் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

அரசாங்கம் வழங்கும் சிறிய இனிப்பு பண்டங்களுக்கு மக்கள் ஏமாற வேண்டியதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முடிவடைந்த காலத்தில் அரசாங்கம் கொத்தமல்லியின் விலையை மாத்திரமே குறைத்ததாகவும் பின்னர் அதன் விலையும் அதிகரிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஜகத் குமாரவின் தலங்கம தேர்தல் பிரசார அலுவலகத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்த நிகழ்வில் உரையாற்றிய போதே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்ட கடனை விட அதிகளவான கடனை இந்த அரசாங்கம் 100 நாளில் பெற்றுக்கொண்டுள்ளது.

இந்த பணம் கொள்ளையிடப்பட்டதா அல்லது பிக்பொக்கட் அடிக்கப்பட்டதா என்பது எனக்குத் தெரியாது.

கட்டுநாயக்க அதிவேக வீதியை நிர்மாணிக்க போவதாக கூறி மூன்று சந்தர்ப்பங்களில் கடனை பெற்றுள்ளனர். நான் அப்படியான எதனையும் செய்யவில்லை.

2 ஆயிரத்து 500 ரூபாவை சமுர்த்தி உதவி பெறுவோருக்கு வழங்கியதன் காரணமாகவே பசில் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டார்.

நான் போரை முடிவுக்கு கொண்டு வந்ததால், அரசியல்வாதிகளுக்கு தற்போது யுத்தத்தை விற்று சாப்பிட முடியாது. ஆயுத விற்பனையில் ஈடுபட்டவர்களுக்கு வியாபாரம் இல்லாது போயுள்ளது.

போரை முடிவுக்கு கொண்டு வந்து, நாட்டை அபிவிருத்தி செய்து கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே, என்னை தோற்கடித்தனர் என்றும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரக் கட்சி...

ராக கொட்டிகாவத்தை முல்லேரியா பிரதேச சபையின் முன்னாள் தலைவரான சோலங்க ஆராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

அசித்த இந்துனில் வெயாகொடபொல மாத்தளை தொகுதியின் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி அமைப்பாளராக நியமனம் பெற்றுக கொண்ட அதேவேளை ஆனந்த பிரே மதிலக வாரியப்பொல் தொகுதியினுடைய அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த மூவருக்குமான நியமனக் கடிதங்களை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளார். (செ-11)

## வேட்பாளர்களுக்கு...

தேர்தல்கள் ஆணையாளரின் அனுமதியுடன் வீதி நாடகத்தை பிரசார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த முடியும் என்று பிரதி தேர்தல்கள் ஆணையாள் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாதவர்கள் இம்முறை வேட்பாளர்களாக இருந்தால் தேர்தல்கள் ஆணையாளரின் அனுமதியுடன் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்த சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டதாக பிரதி தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். (செ-11)

## நாட்டைப்...

இத் தேர்தலில் நாம் ஆட்சியை கைப்பற்றி, நாட்டின் பெயரையும் மாற்றி ஆட்சியமைப்போம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## சயனைட்...

முன்தினம் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்த போது, கார் ஒன்றை மறித்து சோதனையிட்ட அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அந்தக் காரில் இருந்து, செய்மதி தொலைபேசி ஒன்று, நான்கு புவிநிலைகாட்டி கருவிகள், 75 சயனைட் குப்பிகள், 300 கிராம் சயனைட் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

அந்தக் காரில் பயணித்த 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் இருவர் இலங்கைத் தமிழ் அகதிகளாவர். ஏனையோர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-11)

## சிங்கள-முஸ்லிம்...

கள் இடையில் மோதலை ஏற்படுத்தி, அம் மோதலை தங்கள் சார்பாக பயன்படுத்திக் கொள்ளும் அவசியம் தற்போதைய அரசாங்கத்திற்கு காணப்படுகின்றது.

அதற்காக பல்வேறு முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

சிவில் தனி நபர்களை குழுக்களாக ஆயத்தப்படுத்தி, அவர்களுக்கு அங்கிகளை உடுத்தி, முஸ்லிம் மக்களுக்கிடையில் அனுப்பி வைத்து, முஸ்லிம் மக்கள் மற்றும் சிங்கள மக்களுக்கு இடையில் மோதலை உருவாக்குவதற்கு இந்த அரசாங்கம் மிக நுட்பமாக செயற்படுகின்றது. எங்கள் கடமைக்கமைய நாங்கள் மக்களுக்கு தெரியப்படுத்தியுள் ளோம்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் போதும் சிங்கள, முஸ்லிம் மக்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தியதும் இந்நபர்களே என விமல் தெரிவித்தார். (செ-11)

## லசந்தவை...

சம்பவம் தொடர்பில் மறைந்திருக்கும் உண்மைகளை நான் அம்பலப்படுத்த தயார் என ஊடகவியலாளர்கள் முன் கூற விரும்புகின்றேன்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை அமைத்த பின்னர் இக்கொலையினை செய்தவர் யார் என அம்பலப்படுத்துவேன் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## தேர்தல் காலத்தில்...

சின்னத்தம்பி திருச்செல்வம் என்ற நபரைக் கொலை செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் கடந்த ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி முத்துலிங்கம் சந்திரகுமார் என்பவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். இந்தக் கொலைச் சம்பவத்தில் இரண்டாவது சந்தேக நபராக சுப்பிரமணியம் வசிதரன் என்பவர் கடந்த மே மாதம் 13 ஆம் திகதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். இவர்கள் இருவரும் பருத்தித்துறை நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைவாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இந்த இரண்டு சந்தேக நபர்களின் சார்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் சட்டத்தரணியினால் தாக்கல் செய்யப்பட்ட பிணை விண்ணப்பம் நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது நீதிபதி இளஞ்செழியன், இந்த சந்தேக நபர்களின் விளக்கமறியல் காலம் மிகவும் குறுகிய காலமாகக் காணப்படுகின்றது. இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் இன்னும் முற்றுப் பெறவில்லை. மேலும் குறிக்கப்பட்ட தேர்தல் காலங்களில் பாரதூரமான வழக்குகளில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து வரும் நபர்களுக்கு பிணை வழங்குவது தேர்தல் வன்முறைக்கு தூண்டுகோலாக அமைந்துவிடும். எனவே, தேர்தல் வன்முறைகளைக் கட்டுபாட்டுக்குள் கொண்டு வரவேண்டுமானால், பாரதூரமான குற்றச்சாட்டாகிய கொலைக் குற்றச்சாட்டு வழக்குகளுக்கான பிணை விண்ணப்பங்களுக்கு தேர்தல் காலத்தில் பிணை வழங்க முடியாது என தெரிவித்தார்.

மேலும் பிணை விசாரணைகளின் போது, சமூக நலன், நாட்டுக் கள நிலை என்பன கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என்று பிணை வழங்கும் சட்டத்தின் 14 ஆம் பிரிவு அறிவுறுத்துகின்றது. எனவே, பிணை மனுவை தேர்தல் காலத்தில் விசாரணைக்கு எடுப்பது என்பது, சமூக அவலத்தை ஏற்படுத்தும் எனக் கூறிய நீதிபதி இளஞ்செழியன் பிணை விண்ணப்பத்தை நிராகரித்தார்.

அத்துடன் இந்தப் பிணை விண்ணப்பம் தொடர்பான குறுகிய கால விசாரணையையும் நிராகரித்து, விசாரணைகளை செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (செ-9)

## வெள்ளைவான்...

மேஜர் ஜெனரல் ஒருவரின் பாதுகாப்புப் பிரிவில் உள்ளவர்கள் எனக் கூறப்படும் இராணுவ வீரர்கள் மூவர் மிரிஹான பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிரிஹான பகுதியில் பயணித்த வெள்ளை வான் ஒன்றில் சந்தேகத்தின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 07.30 அளவில் குறித்த வான் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

குறித்த வானில் இருந்தவர்கள் சிவில் உடை தரித்த இராணுவ வீரர்கள் எனவும் இவர்கள் வசமிருந்த கைத் துப்பாக்கியும் 13 ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் சந்தேகநபர்களை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைக்கு உட்படுத்தியபோது, அவர்கள் மேஜர் ஜெனரல் ஒருவரின் பிரத்தியேக பாதுகாவலர்களாக செயற்பட்டு வந்ததாக கூறியுள்ளனர்.

எதுஎவ்வாறு இருப்பினும் சம்பவத்துடன் தொடர்புடைய வான் மற்றும் அதன் இலக்கத்தகடு என்பன இராணுவத்தினருக்கு சொந்தமானதா என்பதை ஆராய்ந்து தெரியப்படுத்துமாறு, இராணுவப் பொலிஸாருக்கு, பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மீரிஹா பகுதியிலிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரது தற்போதைய வதிவிடங்கள் உள்ளன.

இந்த நிலையில் அப்பகுதியில் வைத்து வெள்ளை வானில் இருந்த ஆயுததாரிகள் கைது செய்யப்பட்ட விவகாரம் நாட்டில் பெரும பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை கைது செய்யப்பட்ட மூன்று இராணுவத்தினரிடமும் நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து நேற்று நுகேகொட நீதிமன்றில் அவர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

நீதவான் அவர்களை ஒரு இலட்சம் ரூபாய் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார்.

மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வா இராணுவத்தின் கொமாண்டோ படைப்பிரிவு தளபதியாக இருக்கின்றார். அவரது மெய்காவலர்களாக இம் மூன்று இராணுவத்தினரும் பணியாற்றுவதாக கூறப்படுகின்றது.

இவர் முன்னர் 55-வது டிவிசன்களின் கட்டளை அதிகாரியாக வன்னி இறுதிக்கட்டப் போரில் பங்கெடுத்திருந்தார். மேலும் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கடந்த ஆட்சியின் போது நெருக்கமானவர் என்றும் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

அதேவேளை தேர்தல் நெருங்கும் வேளையில் மகிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு ஆபத்து என்ற அனுதாப அலையை உருவாக்கும் நோக்கில் இந்த வெள்ளை வான் நாடகம் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான தகவல்கள் வெளியானதை அடுத்து உதய கம்மன்பில, ஜி.எல்.பீரிஸ், விமல் வீரவன்ச, கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்டோர் மகிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அறிக்கைகளை வெளியிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-11,12)


## மரண அறிவித்தல்



### முருகர் சீனியர்

கரவெட்டி தெற்கு, கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் சீனியர் நேற்று (21.07.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகர்-பத்தினியின் கனிஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற அப்பாக்குட்டி தங்கம்மாவின் மருமகனும், வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், அமரர்களான கந்தப்பு, மருதர், கிருஸ்ணர் ஆகியோரின் சகோதரரும் மகேஸ்வரி (ஓய்வுபெற்ற அதிபர்) அமரசிங்கம் (ஆசிரியர்-யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), அமரசிவம் (பிரதிஅதிபர்-யா/மயிலிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை), அமரசோதி (ஆசிரியர்-யா/சாவகச்சேரி இந்து கல்லூரி), தனேஸ்வரி (ஆசிரியை-யா/வட இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா (அதிபர்-யா/துன்னாலை தெற்கு அ.த.க பாடசாலை), ஸ்ரீரஜனி (ஓய்வுபெற்ற நூலகர்), பரமேஸ்வரி, சிவழகேஸ்வரன் (அலுவலக உதவியாளர்-கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் மாமனாரும், ஞானமாதங்கி, சாரங்கி, சுகாங்கி, அபிராமி, அரவிந்தன், திருமகள், அரண்ராஜ், அனுசன், அனுராகவன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சோனப்பு இந்துமயானதிற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அபிராமி, கரவெட்டி தெற்கு, கரவெட்டி.
0779918635, 0774522071 (1209)

தகவல்:
குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்



### திருமதி அன்னம்மா சுப்பிரமணியம்

பேராலை பளையைப் பிறப்பிடமாகவும் கலம்பரை கோப்பாய் வடக்கு கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சுப்பிரமணியம் அவர்கள் 20.07.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-கைலாயப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், இராசையா ஆகியோரின் சகோதரியும், சுப்பிரமணியம் (ஆனந்தி மாஸ்டர்) அவர்களின் அன்பு மனைவியும், விமலாதேவி (இந்தியா), வசந்தமலர் (ஜேர்மனி), நிர்மலநாதன் (அப்பன்-நியூசிலாந்து), லிங்கேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும், திருச்செல்வம் (இந்தியா), காலஞ்சென்ற சோதிலிங்கம், ரதிபா (நியூசிலாந்து), சற்குணநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், துசி, சஜீபன், தட்சாயினி, கர்சிகா, வர்சன், துசாந், பிரணவி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.07.2015 நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்று கந்தன்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

(1209)

தகவல்:குடும்பத்தினர்



## முன்னாள் போராளிகள் மற்றும் அரசியல் கைதிகளின்

## பெற்றோர்/பாதுகாவலர் சந்திப்பு

கடந்த காலங்களில் தமிழ் தேசிய செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு புனர்வாழ்வு பெற்று விடுதலையாகி சமூகத்துடன் இணைந்துள்ள சகல முன்னாள் போராளிகள் மற்றும் தடுப்பில் உள்ள அரசியல் கைதிகள் சார்பாக அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் அனைவரும் "கௌரவமான எதிர்கால திட்டங்கள்ளை நடைமுறைப்படுத்துவது" தொடர்பான ஒன்றுகூடலுக்கு தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : நாவலர் கலாசார மண்டப முன்றல்
காலம் : 23-07-2015 (வியாழன்)
நேரம் : பி.ப 3.00
தொடர்புகளுக்கு : 0767134881

பிரதம செயற்பாட்டாளர்
முன்னாள் போராளிகள்/அரசியல் கைதிகள்
ஒன்றியம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# வங்கபுலியின் வேகத்தில் சுருண்டது தென்னாபிரிக்கா

சிட்டகாங்கில் நேற்று தொடங்கிய முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்காவை பங்களாதேஷ் 248 ஓட்டங்களுக்குள் சுருட்டியது.

ஒருநாள் போட்டிகளில் கலக்கி வரும் இடது கை வேகப்பந்து வீச்சாளர் முஸ்தபிசுர் ரஹ்மான் 4 விக்கெட்டுகளை 37 ஓட்டங்ளுக்குக் கைப்பற்ற இளம் லெக் ஸ்பின்னர் ஜுபைர் ஹுசைன் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

முஸ்தபிசுர் ஒரே ஓவரில் அம்லா, டுமினி, டிகாக் ஆகியோரை வெளியேற்றி நடுக்களத்தை காலி செய்ய, ஜுபைர் ஹுசைன் பின்கள வீரர்களான ஹார்மர் மற்றும் ஸ்டெய்னை ஒரே ஓவரில் வீழ்த்த 136/1 என்று வலுவாகச் சென்று கொண்டிருந்த தென்னாபிரிக்கா 248 ஓட்டங்களுக்குள் மடிந்தது.

விக்கெட்டுகளை இவர்கள் வீழ்த்தினாலும் விக்கெட் வீழ்த்தாத மொகமது ஷாகித் என்ற வேகப் பந்து வீச்சாளர் தனது கட்டுக்கோப்பான பந்து வீச்சினால் வைட் ஆஃப் த கிரீசிலிருந்து கடினமான கோணத்தில் பந்து வீசி தென்னாபிரிக்க துடுப்பாட்டவீரர்களை கடுமையாக குழப்பத்தில் ஆழ்த்தினார்.



பந்து உள்ளே வருகிறதா, வெளியே செல்கிறதா என்பதை தீர்மானிக்க முடியாமல் உள்ளே வரும் பந்துக்கு அவசரம் அவசரமாக மட்டையைக் கொண்டு வந்தும் வெளியே செல்லும் பந்துகளை ஆட முற்பட்டு தோல்வியடைந்ததும் தென்னாபிரிக்க துடுப்பாட்டத்தின் நேற்றைய ஒரு அம்சமாகவே மாறியிருந்தது.

ஷாகித் 17 ஓவர்கள் வீசி அதில் 9 மெய்டன்களுடன் 34 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்தார். ஷாகிப் அல்ஹசன், மஹமுதுல்லா, தைஜுல் இஸ்லாம் ஆகியோரும் ஷாகித்தின் நெருக்கடி பந்துவீச்சைப் பயன்படுத்தி தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

உணவு இடைவேளைக்குப் பிறகு ஷாகித் வீசிய வேகப்பந்து வீச்சு உண்மையில் இத்தகைய பிட்ச்களில் எப்படி வீசவேண்டும் என்பதற்கான பாடம். அவர் பந்துகளை எந்த விதத்திலும் ஓட்டங்களுக்குச் செலுத்த முடியாமல் டுபிளெஸ்ஸிஸ் மற்றும் டீன் எல்கர் திணறினர்.

உணவு இடைவேளைக்குப் பிறகு 18 ஓவர்களில் 28 ஓட்டங்ளையே எடுக்க முடிந்தது. இந்த வெறுப்பில்தான் எல்கர் எட்ஜ் செய்து வெளியேறினார். இவர் அவுட் ஆனவுடன் ஷாகிபை கொண்டு வர டுபிளெசிஸ் எல்.பி. ஆனார்.

டிவில்லியர்ஸுக்கு பதில் களமிறங்கிய பவுமா போராடி அரை சதம் எடுத்தார்.

இடையில்தான் முஸ்தபிசுர் ரஹ்மானின் பரபரப்பான அந்த ஓவரில் அம்லா, டுமினி, டிகாக் வெளியேற்றப்பட தென்னாபிரிக்கா 173/6 என்று ஆனது. பிலாண்டர் 24 ஓட்டங்கள் எடுத்தார். ஆனால் அவருக்கு 18 ஓட்டங்களில் பிடி விடப்பட்டது.

பவுமாவின் அரைசதம், பிலாண்டரின் 24 ஓட்டங்களால் 248 ஓட்டங்களை எட்டியது தென்னாபிரிக்கா, 2-வது புதிய பந்தில் பவுமாவை வீழ்த்தி தனது 4-வது விக்கெட்டைக் கைப்பற்றினார் முஸ்தபிசுர்.

2 ஓவர்கள் நேற்று ஆடிய பங்களாதேஷ் விக்கெட் இழக்காமல் 7 ஓட்டங்களை எடுத்துள்ளது. இன்று 2-ம் நாள் ஆட்டம். பங்களாதேஷ் ஆக்ரோஷத்தை தென்னாபிரிக்காவின் ஸ்டெய்ன், மோர்கல், பிலாண்டரால் கட்டுப்படுத்த முடிகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். (க)

## ஜனநாயகம் குறித்துப்...

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவர் கிறிஸ்டியன் பிரேடா, கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

நாம் ஜனநாயகம் குறித்தோ, தேர்தல் நடைமுறைகள் குறித்தோ போதனை செய்வதற்காக இங்கு வரவில்லை.

நாம் பல்வேறு நிபுணத்துவம் பெற்றவர்களுடன் இணைந்து தேர்தலைக் கண்காணிக்கவே இங்கு வந்துள்ளோம்.

ஜனநாயக நடைமுறைகளை வலுப்படுத்தும் இலங்கை அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகத்தின் முயற்சிகளுக்கு நாமும் பங்களிப்புச் செய்கிறோம்.

கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் நடுநிலையோடு செயற்படுவர். இலங்கையில் தேர்தல் சட்டங்களுக்கு அமையவும், ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு நெறிமுறைகளின்படியும் நடந்துகொள்வர்.

தேர்தல் முடிந்த சற்று நேரத்தில் ஒரு ஆரம்பக்கட்ட அறிக்கையையும், இறுதி அறிக்கையை பின்னரும் வெளியிடுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தேர்தல்கள் ஆணையாளரின் அழைப்பை ஏற்று, ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் ருமேனிய உறுப்பினர் கிறிஸ்ரியன் பரேடா தலைமையிலான 70 பேர் கொண்ட கண்காணிப்புக் குழுவை ஐரோப்பிய ஒன்றியம் அனுப்பிவைக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## தேர்தல் விதிமீறல்களாக...

தெரிவித்துள்ளது. அந்த அமைப்பின் இயக்குநர் கீர்த்தி தென்னக்கோன் இதனை தெரிவித்தார்.

அரசின் சொத்துக்களை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் சம்பவங்கள் பெருமளவில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகக் கூறிய கீர்த்தி தென்னகோன், இப்படியான 181 சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

கடந்த தேர்தல்களின் போது அதிகாரத்தில் இருக்கின்ற கட்சி மாத்திரமே அரசின் சொத்துக்களை தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திவந்தது. ஆனால், இம்முறை ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளும் பெருமளவில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு அரச சொத்துக்களை பயன்படுத்திவருவதை காண முடிவதாக கபே கூறியுள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறும் செயல்கள் அதிகரித்துள்ளது என்றும் அதனைத் தடுப்பதற்கு பொலிஸாரும் தேர்தல் திணைக்கள அதிகாரிகளும் எடுத்துவரும் நடவடிக்கைகள் திருப்தியளிப்பதாகவும் கபே கூறியுள்ளது.

இந்த நடவடிக்கைகளின் காரணமாக பிரதான நகரங்களில் பொருத்தப்பட்டிருந்த தேர்தல் பிரசாரப் பதாகைகளும் சுவரொட்டிகளும் முற்றாக நீக்கப்பட்டுள்ளதாக கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

அதேபோன்று தேர்தல் சட்டங்களை மீறி சட்ட விரோத பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 60-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாகவும் கபே கூறியுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் தான் அதிக அளவில் இம்மாதிரியான விதிமீறல் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக கபே கூறியுள்ளது.

அதே போன்று அம்பாந்தோட்டை, வன்னி மாவட்டங்களிலும் கூடுதலான சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக கூறிய கீர்த்தி தென்னக்கோன், சட்ட விரோத தேர்தல் பிரசாரம், வாக்காளர்களுக்கு லஞ்சம் உள்ளிட்ட சம்பங்கள் இங்கு அதிக அளவில் பதிவுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். (எ-11)


நாளைய வெளிநாட்டுப் பயணத்துக்கு இன்றே தயாராகுங்கள்!
சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில் மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய
Business & Hotel Management
50% Discount 2 ஆம் அணி
யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும் விசா உத்தரவாதம்!
(அனைத்து ஏற்பாடுகளையும் நாமே செய்து தருவோம்!)
SEGi | B.H.M.S. | nmit | William Angliss Institute
MALAYSIA | SWITZERLAND | NEW ZEALAND | AUSTRALIA
அனுமதிகளுக்கு 077 36 16 798
கற்கைநெறி ஆரம்பம் ஜூலை 28 செவ்வாய்
பிரசித்திபெற்ற சுற்றுலா மையங்களுக்கான விசேட பயணம் & யாழ், கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் நேரடிப் பயிற்சி
SIKARAM Get Set for Careers & Take off Your Dreams
FREE ENGLISH COURSE
வெளிநாடு செல்ல விரும்பாதோருக்கு யாழ், கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தருகிறோம்.
(C-1645)
Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம்) Tel: 021 222 00 11



WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No : 021 222 5352












இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org